பக்கங்கள்: 24 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 31, ஞாயிற்றுக்கிழமை 14.05.2017 | கதிர் 189

# அரசமைப்பு விடயத்தில் ஆளும் தரப்புகள் மோடி வருகையால் ஒன்றுபடும் சாத்தியம்



கொழும்பு, மே 14

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் பொருத்தமான நேரத்தில் - சரியான சந்தர்ப்பத்தில் - நடந்திருக்கின்றது.**

**இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு உருவாக்கம் தாமதமடைவதற்கு அரசின் ஆளும் தரப்பின் இரு அணிகளுக்கு இடையிலான முட்டுக்கட்டையே பிரதான காரணம். பிரதமர் மோடியின் விஜயம் அந்த வேறுபாட்டைக் களைந்து அத்தரப்புக்கள் ஒன்றுபடும் சூழலை ஏற்படுத்தும் சாத்தியத்தை உருவாக்கியுள்ளது.**

**- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுக்கள் குறித்து 'காலைக்கதிர்' நாளிதழுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு :- பக்கம் 22 »

## சீனா சென்றார் ரணில்



பேஜிங், மே 14

முப்பது நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் உயர்மட்ட மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்காக இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது துணைவியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க சகிதம் நேற்று சீனத் தலை நகர் பேஜிங் பக்கம் 22 »

## அமைச்சரவை மாற்றம் விரைவில்!

கொழும்பு, மே 14

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் அமைச்சரவை மாற்றம் மிக விரைவில் இடம்பெறும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு நடக்காது என்று கூறி வந்த அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவும் பக்கம் 22 »

## இலங்கைத் தமிழர் நலனுக்கு இந்தியா தொடர்ந்து அழுத்தம்

### வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா உறுதி



இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் காக்க அந்நாட்டு அரசாங்கத்துக்கு இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். பக்கம் 22 »

## நேபாள ஜனாதிபதி வருகை



கொழும்பு, மே 14

இன்று கண்டியில் இடம் பெறும் சர்வதேச வெசாக் அமர்வுகளின் இறுதி நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக நேபாள ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி அம்மையார் நேற்றுக் காலை கொழும்பு வந்துசேர்ந்தார்.

இன்றைய இறுதி நாள் அமர்வில் பங்குபற்றும் நேபாள ஜனாதிபதி பண்டாரி அம்மையார் நாளை மறுதினம் நாடு திரும்புவார். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

### தலைநகர் கொழும்பின் மையமான கோட்டைப் பகுதியில்

## இராணுவத் தலைமையகம் இருந்த இடத்தில் நிலம் அகழும் போது மனித எலும்புகள் மீட்பு!



கொழும்பு, மே 14

கொழும்பு கோட்டைப் பகுதியில் - காலிமுகத் திடலுக்கு எதிர்ப்பக்கத்தில் - முன்னர் இராணுவத் தலைமையகம் இருந்த பிரதேசத்தில் - புதிய ஹோட்டல் கட்டுவதற்காக நிலம் அகழப்பட்ட போது அங்கிருந்து மனித எச் பக்கம் 22 »

## மோடிக்காக வந்த ஹெலி எழ முடியாது கண்டியில் தரிப்பு

கண்டி, மே 14

இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை விஜய அணியில் இங்கு வந்த ஹெலிகொப்டர் ஒன்று திரும்பிப் போகாமல் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் தரித்து நிற்கின்றது. மேலெழும்ப முடியா பக்கம் 22 »

## கூட்டு எதிரணி மேதினத்துக்கு நிதி உதவியோர் வலையில்?

கூட்டு எதிரணி மிகப் பிரமாண்டமான மேதினக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு 18 கோடி ரூபா நிதியைச் சேகரித்து கொடுத்தவர்கள் என்று கூறப்படும் இலங்கையின் சில வர்த்தகர்கள் சம்பந்தமாக புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் வர்த்தகர்கள் சம்பந்தமான புலனாய்வுப் பிரிவின் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி நெடுஞ்சாலைகள் மற்றும் பெருநகரத்திட்டங்கள் பக்கம் 22 »

## வடக்கில் டெங்கு ஒழிப்பு பணி 18,19 இல் அல்ல; 22,23 இல்தான்!

யாழ்ப்பாணம், மே 14

வடக்கு மாகாணத்தில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான விசேட நடவடிக்கை எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படமாட்டாது. அதற்குப் பதிலாக எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளிலேயே அது முன்னெடுக்கப்படும்.

அதற்கான பணிப்பு பக்கம் 22 »

## வெளிநாட்டில் இருப்போரும் வாக்களிக்கலாம்

2009 இற்கு முன்னர் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்போர், அவர்களின் பெயர்கள் பக்கம் 22 »

### அளப்பு அருணாசலம்



உந்த ஹெலியை நம்பியே அந்தப் பெரியவர் இங்கை வந்தவர்...?

## கொழும்பில் மருத்துவக் கவுன்ஸிலின் வளாகம் மீது இரவில் கிரனேட் வீச்சு!



கொழும்பு, மே 14

கொழும்பு - மருதானையிலுள்ள இலங்கை மருத்துவக்கவுன்ஸிலின் வளாகத்துக்குள் வெடிக்காத நிலையில் கிரனேட் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. பக்கம் 22 »

# இனப்படுகொலை நினைவேந்தல்; 2 ஆம் நாள் ஊறணி பிரதேசத்தில்!

வடமராட்சி, மே 14

ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம்நாள் அஞ்சலிநிகழ்வுகள் நேற்று வடமராட்சி, பொலிகண்டி - ஊறணி பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளன.

மே மாதம் 12ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

1985 ஆம் ஆண்டு இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட பொது மக்களின் நினைவாக நேற்றைய அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

1985 ஆம் ஆண்டு ஊறணி பொலிகண்டி பகுதியில் செம்மீன் படிப்பகம் சுற்றிவளைக்கப்பட்டு, சுமார் 35 மேற்பட்ட இளைஞர்கள் உடல் சிதறவைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

அந்தப் பகுதியில் இந்த நினைவேந்தல் வாரத்தின் 2 ஆம் நாள் நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ)







## மயானங்களை அகற்ற கோரி ஆர்ப்பாட்டம்!

மக்கள் குடியிருப்பு பகுதிகளில் மயானம் அமைக்க வேண்டாம் எனக் கோரி யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

உரும்பிராய், புத்தூர் மற்றும் திருநெல்வேலி தெற்கு ஆகிய பகுதிகளிலுள்ள மக்களே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சமூக நீதிக்கான பொதுஜன அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராகவும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர். அத்துடன் அவர்களுக்கு எதிரான பதாகைகளையும் தாங்கியவாறும் ஆர்ப் பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர். (ஐ)

## லக்ஷ்மன் கதிர்காமருக்கு நேற்று புகழ் அஞ்சலி!

வெசாக் தினத்தை சர்வதேச விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்த மற்றும் அதனை செயற்படுத்திய தலைவர்களுக்கு நேற்று புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னைய நாடாளுமன்ற வளாகத்தில் பேராசிரியர் குணபால மலலசேகர மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர் ஆகியோரது சிலைகளுக்கு மாலை அணிவித்து இந்த மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், வெசாக் தினத்தை சர்வதேச தினமாக அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் கோரிக்கை விடுத்தார். இதனடிப்படையில், வெசாக்தினம் சர்வதேச வெசாக்தினமாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னாள் சிப்பாய்க்கு மரண தண்டனை!

கொழும்பு, மே 14

சிவில் பாதுகாப்பு படையின் முன்னாள் சிப்பாய் ஒருவருக்கு அனுராதபுரம் உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடமைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்தி நபர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டுக்காக அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அனுராதபுரம் ஹொரவப்பொத்தான, கப்புகொல்லாவையில் இந்தக் கொலைசம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடமைக்காக வழங்கப்பட்ட ரி 56 ரக துப்பாக்கியால் இந்தக் கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த முன்னாள் சிப்பாய்க்கு நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நேபாள ஜனாதிபதி இலங்கையில்!

கொழும்பு, மே 14

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேபாளின் முதல் பெண் ஜனாதிபதியான பித்யா தேவி பந்தாரி நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளார்.

14 ஆவது ஐக்கிய நாடுகள் வெசாக் தின வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இவர் இலங்கை வருகை தந்துள்ளார்.

சர்வதேச வெசாக் தினத்தின் நிறைவு நிகழ்வுகள், கண்டி தலதா மாளிகையின் மஹாமடுவ மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளன. இந்தநிகழ்வில் நேபாள ஜனாதிபதி பித்யா தேவி பந்தாரி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை மருத்துவ சபை வளாகத்தினுள் கைக்குண்டு!

கொழும்பு, மே 14

மருதானையிலுள்ள இலங்கை மருத்துவ சபை வளாகத்துக்குள் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனந்தெரியாத ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்தக் கைக்குண்டை மருத்துவ சபையை நோக்கி வீசியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இருப்பினும், அந்தக் குண்டு வெடித்திருக்கவில்லை என்று மருத்துவ சபை உறுப்பினர் ஒருவர் அறிவித்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மருதானை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு விடுகின்றன. (ஐ)

## வட மத்திய மாகாணத்தைப் பிடிக்க எவரும் அவசரப்பட வேண்டாம்


### முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆலோசனை

கொழும்பு, மே 14

வட மத்திய மாகாண அதிகாரங்களைப் பிடிப்பதற்கு அவசரப்பட வேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை கூறியுள்ளார்.

வட மத்திய மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் சிலர் கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கான பேச்சு நேற்றுமுன்தினம் இரவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இந்தப் பேச்சு நடைபெற்றது.



இந்தச் சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவு வழங்கும் 17 பேர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போதுதான் மஹிந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்கால அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கருமமாற்றுமாறு அவர்களிடம் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

வட மத்திய மாகாண சபையில் மொத்தம் 33 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 21 பேர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் ஆவர். இந்த ஐ.ம.சு.மு. உறுப்பினர்களில் 18 பேர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர் என்று அந்த மாகாண சபையின் உறுப்பினர் எஸ்.எம்.ரஞ்ஜித் தெரிவித்துள்ளார். (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை தமிழ் மக்கள் பேரவையே முன்னெடுக்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வற்புறுத்தல்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்நிகழ்வைதமிழ்மக்கள் பேரவை தலைமையேற்று நடத்துவதே பொருத்தமானது எனத்தமிழ்த்தேசியமக்கள்முன்னணி தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக அக்கட்சித் தலைவர்கஜேந்திரகுமார்பொன்னம்பலம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

எதிர்வரும் மே 18 ஆம் நாள் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பின் 8 ஆவது ஆண்டு நினைநாளாகும். இவ் இனவழிப்பு நாளை நினைவு கூர வேண்டியது அனைத்துத் தமிழ் மக்களினதும் கடமையாகும்.

ஒற்றையாட்சிக்குள்ளான 13 ஆம் திருத்தச் சட்டத்தையும் அதன் கீழான மாகாண சபை முறையும்தமிழ்மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வாக திணிக்க முற்பட்டபோது, மேற்படி மாகாண சபை முறையை தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாதென்பது மட்டுமல்ல, தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாகக் கூட இருக்க முடியாதென உறுதிபட நிராகரித்த தமிழ் மக்கள் அதற்கெதிராக அதிஉச்ச தியாகங்களைச் செய்து போராடியுள்ளனர். அந்தஉச்சக்கட்டதியாகங்களின் இறுதி அங்கமே முள்ளிவாய்க்கால் பேரவலமாகும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வானது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை முன்னிறுத்தி கட்சி, அமைப்பு பேதமின்றி அனைத்துதரப்பினரையும் முழுத் தமிழர் தாயகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதமிழ்மக்கள்பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படுதல் சாலச் சிறந்தது என்று நாங்கள் கருதுகின்றோம்.

எனவே, இந்த நினைவேந்தல்நிகழ்வுக்குதலைமையேற்று அனைத்துத்தமிழ்மக்களையும் ஒருங்கிணைத்து நினைவு கூர வேண்டிய வரலாற்றுக் கடமை தமிழ்மக்கள்பேரவையின்கைகளில் உள்ளது. அந்த வகையில் தனது வரலாற்றுக் கடமையை உணர்ந்து மேற்படி இனவழிப்பு நாள் நினைவேந்தல் நிகழ்வை தமிழ் மக்கள் பேரவையானது தலைமையேற்றுமுன்னெடுக்க வேண்டும்என்றகோரிக்கையை அதன் அங்கத்துவ அமைப்பு என்ற அடிப்படையில் மிகவும் உரிமையுடன் விடுக்கின்றோம். சி.வீ.விக்னேஸ்வரன் ஐயா உள்ளிட்ட இணைத்தலைவர்கள் தலைமையில் மேற்படி நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அந்நிகழ்வை உணர்வு பூர்வமாக நடத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை அர்ப்பணித்துச் செயற்படும்.

மாகாண சபை முறையை ஏற்க மறுத்து மேற்கொள்ளப்பட்ட ஓர் போராட்டத்தில் ஏற்பட்ட இழப்புக்களையும் தியாகங்களையும் நினைவு கூருகின்ற நினைவேந்தல் நிகழ்வை, அப்போராட்டம் அழிக்கப்பட்ட பின்னர்உருவாக்கப்பட்டவடக்கு மாகாண சபையூடாக மேற்கொள்வது என்பது இதுவரை காலமும் தமிழ் மக்கள் செய்த தியாகங்களையும் சந்தித்த இழப்புக்களையும் கொச்சைப்படுத்தும் என்பதால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வட மாகாண சபை முன்னெடுக்கும் எத்தகைய நினைவேந்தல் நிகழ்வுகளிலிருந்தும் தவிர்க்க முடியாதவாறு விலகியே நிற்கும் என்பதைஅறியத்தருகின்றோம்.

தமிழ்மக்கள்பேரவையினால் இந்நிகழ்வை தலைமை யேற்று ஏற்பாடுசெய்யமுடியாதசூழ்நிலைகள் இருப்பின் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிமேற்படிநினைவேந்தல்நிகழ்வைதனித்துமுன்னெடுக்கும் என்பதனை அறியத்தருகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# விவசாய பட்டதாரிகளின் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே 14

யாழ். பல்கலைக் கழகத்தின் விவசாயபீட பட்டதாரிகளின் ஒன்றுகூடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண கிறீன்கிறாஸ் விருந்தினர் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"காலத்தின் தேவை கருதி வடமாகாணத்தில் விவசாயத் துறையில் விவசாயப் பட்டதாரிகளின் வகிபங்கு" எனும் தொனிப் பொருளில் இக்கலந்துரையாடல் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள அனைத்து விவசாயப்பட்டதாரிகளையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கமைப்புகுழு அழைத்துள்ளது. (உ)

# விபத்தில் 2 பேர் காயம்

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தொன்றில் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் இருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவுகல்லடிப் பாலத்தில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே காயமுற்றனர். விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு இணுவிலில் இன்று பாராட்டு விழா நிகழ்வு

## மதகுருமார், கல்வியியலாளர்கள், துறைசார் பிரதிநிதிகள் பங்கேற்பு

இணுவில், மே 14

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள இணுவிலைச் சேர்ந்த பேராசிரியர் இ.விக்கினேஸ்வரனுக்குஇணுவில்கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் பாராட்டு விழா இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல். 2.30 மணிக்கு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்பேராசிரியர்வ.மகேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமாகி நடைபெறும்.

பேராசிரியர் க.தேவராசாவின் தொடக்க உரையுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் ஆசியுரைகளை இந்து மதகுருமார்கள் சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள், சிவஸ்ரீ இ.ஸ்ரீகந்தராஜக் குருக்கள், சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீதா.மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ கிருஸ்ணமூர்த்தி சர்மா, சிவஸ்ரீ ஹரிகரசுப்பிரமணியக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர்ஆறு.திருமுருகன்ஆகியோர் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை சிறைச்சாலை மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிறேமச்சந்திரன், யாழ்.பல்கலைக்கழக நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம், வைத்தியர்எஸ்.சிவானந்தராசா, யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் பொ.மகேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், யாழ்.பல்கலைக்கழக முன்னாள்துணைவேந்தர்பேராசிரியர்நா.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேரவை உறுப்பினர் பேராசியர் சி.க.சிற்றம்பலம், யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர்ஜி.மிகுந்தன், யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, யாழ்.பல்கலைக்கழகமுகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ்.பல்கலைக்கழகவவுனியா வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகவிஞ்ஞானபீடபதில் பீடாதிபதி பேராசிரியர் திருமதி எஸ்.குகநாதன், யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியல்துறைசிரேஷ்டவிரிவுரையாளர் கலாநிதி எஸ்.அறிவழகன், யாழ்.பல்கலைக்கழககலைப் பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர் ஆகியோர் நிகழ்த்துவர்.

இந்த நிகழ்வில் மேலும் பல கல்விமான்களும் துறைசார் பிரதிநிதிகளும் பாராட்டுரைகளை நிகழ்த்துவர். (ம)

# மாங்காய் பறித்தவர் வீழ்ந்து படுகாயம்

சாவகச்சேரி, மே 14

வீட்டு மாமரத்தில் ஏறி மாங்காய் பறித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் தவறுதலாகக் கீழே வீழ்ந்து படுகாயம் அடைந்தார்.

மீசாலைப்பகுதியில்நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செ.விஜயகுமார் (வயது-50) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தார்.

அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். (ம)

# வவுனியா சிறையில் கைதி உயிரிழந்தார்

மன்னார், மே 14

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் சுகயீனம் காரணமாக நேற்றுக் காலை உயிரிழந்தார். மன்னாரைச் சேர்ந்த சி.சாமுவேல் (வயது-66) என்பவரே உயிரிழந்தார்.

அவர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை வழங்கப் பட்டது. எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என சிறைச்சாலைத்தகவல்கள் தெரிவித்தன.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம)

## டிக்கோயா ஆதார வைத்தியசாலை

# 'ந' என்பதை 'த' என மாற்ற இரு நாள்கள் தேவையாம்

டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் பிரதான பெயர் பதிவில் 'ஆதார' என்று வரவேண்டிய இடத்தில் 'ஆநார' என்று பதிவு செய்யப்பட்ட எழுத்துப் பிழையை இன்னும் இரண்டு நாள்களுள் முறையாக பதிப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் என வைத்தியசாலை நிர்வாகம் தமக்கு அறிவித்துள்ளது என மத்திய மாகாணசபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் பெயரில் ஏற்பட்டுள்ள எழுத்துப் பிழை தொடர்பாக அந்த வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டேன். மத்தியமாகாணசுகாதார அமைச்சினால் 11 ஆம் திகதி இரவுதான் அந்தப் பெயர் பதிக்கப்பட்டது. மறுநாள் காலையிலேயே எழுத்துப் பிழையைக் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# வெவ்வேறு பிரதேசங்களில் மூன்று பெண்கள் கொலை

நாட்டின் சில பகுதிகளில் 3 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அவரது கணவன் கைதுசெய் யப்பட்டுள்ளார். குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓபநாயக்கநகரத்தில் உள்ள விற்பனை நிலையத்துக்குள் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய யாரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை ஹபரண, அலுத்ஓயா பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 28 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த பெண்ணைசிறியரகலொறியில் ஏற்றிக்கொண்டு சென்ற நிலையில், அவரது கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். படுகாயமடைந்தபெண், ஹபரண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட இருவரையும் அந்தந்த பிரதேசத்துக்குப் பொறுப்பான நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம் - யாழ். மாநகரசபைஎல்லைக்குள்அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குவிலங்குவிசர்நோய்த் தடுப்பூசி(ஏ.ஆர்.வி.) போடப்படும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

அதன்படி, நாளை திங்கட் கிழமை :-

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - சென்றோக் சனசமூக நிலையம் முன்பாக.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை - றெக்கிளமேசன் சனசமூக நிலையம்.

★ பிற்பகல் 2.30 முதல் 4 மணி வரை - புதிய கடற்கரை - தண்ணீர்த் தாங்கி சந்தி.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை :-

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - தண்ணீர்த் தாங்கி முதலாம்குறுக்குத்தெரு.

★ முற்பகல் 11மணி முதல் ஒரு மணி வரை - தண்ணீர்த் தாங்கி மூன்றாம் குறுக்குத் தெரு.

★ பிற்பகல் 2.30 முதல் 4 மணி வரை - தண்ணீர்த் தாங்கி 4 ஆம், 5 ஆம் குறுக்குத் தெரு. (இ)

SPOKEN SINHALA
அரச கருமமொழித் திணைக்களத்தின் பரீட்சைக்கான பாடநெறி
சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Hot line : 0777-596148
BRITISH COLLEGE of Education
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
Main Street, Mullaithivu. Tel : 021-4927497

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## பந்தாடப்படும் அரசமைப்பு

அரசமைப்பு என்பது நாட்டின் மிக உயர்ந்த சட்டம். மதிப்புக்குரியதாக - வழிகாட்டு மறையாக - பேணப்பட வேண்டிய நீதித்துறை ஆவணம். ஆனால், இலங்கையில் அதுவே 'எடுப்பார் கைப்பிள்ளை' விடயமாகக் கையாளப்படுவதாகி இருக்கின்றது.

தற்போதைய அரசமைப்பு 1978 இல் கொண்டு வரப்பட்டது. அதைத் திருத்துவதாயின் - அல்லது அதில் ஏதும் மாற்றங்களைச் செய்வதாயின் - குறைந்தபட்சம் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு தேவை. விசேட அம்சங்களின் விடயத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும்.

ஆனால், இந்த 39 வருட காலத்தில் இந்த அரசமைப்புக்கு 19 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாயிற்று. பெரும்பாலும் ஆட்சியில் இருந்த அரசுகள் தங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுப் பலம் பெறக்கூடிய வாய்ப்புகள் இருந்த சமயங்களில் எல்லாம் - சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப - தங்களின் அரசியற் தேவைகளுக்குத் தகுந்த மாதிரி அரசமைப்பை மாற்றியமைத்தமையே நாட்டின் வரலாறாக உள்ளது.

இந்த பத்தொன்பது திருத்தங்களுள் பன்னிரண்டாவது திருத்தத்துக்கு இலக்கமிடப்பட்டு, அந்தத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அந்தத் திருத்தம் நிறைவேற்றப்படாமல் அது கைவிடப்பட்டு விட்டது. அந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதானால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்று அப்போது உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் அது அடியோடு கைவிடப்பட்டது.

கடைசியாகக் கொண்டு வரப்பட்டது 19 ஆவது திருத்தம். அது பல்வேறு விடயங்களை உள்ளடக்கியிருந்தது. நீதித்துறை, தேர்தல், பொலிஸ் உட்பட பல முக்கிய துறைகளுக்கான நியமனங்களையும் கையாளும் பொறுப்பை சுயாதீன ஆணைக்குழுக்களிடம் கையளிக்கும் சிறப்பு அம்சத்தை அது கொண்டிருந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு வருபவரின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளோடு மட்டுப்படுத்தும் ஏற்பாட்டை மீண்டும் இந்த 19 ஆவது திருத்தத்தின் மூலமே உறுதிப்படுத்த முடிந்தது.

எனினும், நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் அது புதுமையான சில விதிகளைக் கொண்டு வந்தது.

'இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது' - என்ற வாசகத்தை இந்த 19 ஆவது திருத்தம் உள்ளடக்கியிருந்தது. இதனடிப்படையிலேயே காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்றத் தெரிவைச் செல்லுபடியற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் இப்போது அறிவித்திருக்கின்றது.

இந்தத் திருத்தம் பல சர்ச்சைக்குரிய விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்தத் திருத்தத்தின்படி, இரட்டைக் குடியுரிமை உடைய இலங்கைப் பிரஜை ஒருவர் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க முடியும்; ஆனால், போட்டியிட முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக நிற்க முடியாது என்றுதான் அத்திருத்தம் கூறுகின்றது. அதன்படி பார்த்தால் அவர் நாடாளுமன்றுக்கு ஓர் உறுப்பினராக நியமிக்கப்படலாம். அது சட்டத்தால் தடுக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டுகின்றன நீதித்துறை வட்டாரங்கள்.

அத்தேர்தலில் வாக்களிப்பதற்கு அவருக்கு உள்ள உரிமையோடு நோக்குகையில் அவர் எம்.பியாக நியமிக்கப்படுவதும் ஏற்புடையதே.

தவிரவும், அத்திருத்தத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றமையை மட்டுமே கட்டுப்படுத்துகின்றது; அல்லது மட்டுப்படுத்துகின்றது. மற்றைய விடயங்கள் குறித்து அது தெளிவாகவோ - வெளிப்படையாகவோ - ஏதும் குறிப்பிடவில்லை. அதனால் இரட்டைக் குடியுரிமை கொண்டோர் உள்ளூராட்சி சபைகள், மாகாணசபைகள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட முடியும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் விளக்குகின்றன.

மேலும், இந்த 19 ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை கொண்டோர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தடை சேர்க்கப்பட்டமைக்கு ஒரு முக்கிய காரணம் அப்போது கூறப்பட்டது. பதவி இழந்து சென்ற மஹிந்த ராஜபக்ஷவின் முக்கிய பிரதானிகளான பஸில், கோட்டா ஆகியோர் நாடாளுமன்றுக்கு வருகின்றமைக்கு ஆப்பு வைக்கவே இந்த ஷரத்து என்று அப்போது கூறப்பட்டது.

ஆனால், இன்னொரு விடயமும் உண்டு. மஹிந்த அரசு கவிழ்ந்து நல்லாட்சி வந்த கையோடு இந்த 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதைத் தயாரித்து முன்னெடுப்பதில் தமிழ்க் கூட்டமைப்பின் பங்கும் முக்கியமானதாக - கணிசமானதாக - இருந்தது என்பது தெரிந்ததே.

கூட்டமைப்புக்குப் புலம்பெயர் தமிழர்கள் குறித்து எப்போதுமே அச்சமுண்டு. மாறிவரும் அரசியல் சூழலில் புலம்பெயர் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இரட்டைக் குடியுரிமையை பெறும் வாய்ப்பு அதிகம் உண்டு. நிதி வசதி, பிரசார ஏற்பாடுகளும் புலம்பெயர் தமிழர்களுக்கு இலகுவாகக் கிட்டக்கூடியவை. நாடாளுமன்றத்தில் தங்களுக்குப் போட்டியாக புலம்பெயர் தமிழர்கள் எவரேனும் வந்து குதித்துவிடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இந்த ஷரத்தைத் தமிழர் தரப்பே முன்னின்று திணித்தது என்றும் ஒரு பேச்சு உண்டு.

எது, எப்படியென்றாலும், சில தரப்புகளின் அரசியல் சுயதேவைகளுக்காகப் பல தடவை பந்தாடப்பட்ட அரசமைப்பு 19 ஆவது திருத்தத்தின்போது ஒரு தடவை பந்தாடப்பட்டிருக்கின்றது என்பது அப்பட்டமான உண்மை.

# சைட்டத்தை காக்கும் சுகாதார அமைச்சர் டெங்கு ஒழிப்பிலும் ஈடுபட்டால் நல்லது!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 14

'சைட்டம்' நிறுவனத்தை பாதுகாப்பதற்கு சுகாதார அமைச்சர் மேற்கொள்ளும் முயற்சியில் ஒரு பகுதியை டெங்கு ஒழிக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தினால் நாட்டினுள் அழிவு நிலையை கட்டுப்படுத்த முடிவும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவ சபையின் ஒழுங்குமுறைக்கு அடிபணியாமல் செயற்படும் சைட்டம் நிறுவனத்தை காப்பாற்ற சுகாதார அமைச்சர் முயற்சிக்கும் செயல் வெட்கப்பட வேண்டியது.

சைட்டம் நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக சுகாதார அமைச்சரின் வெட்கப்பட வேண்டிய தலையீடு தற்போது நாட்டு மக்கள் முன்னிலையில் நிரூபணமாகியுள்ளது. தனிப்பட்ட நலன் காரணமாகவே சுகாதார அமைச்சர் அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அதேவேளை, நாட்டில் டெங்கு பரவும் அளவு அதிகரித்துள்ளதுடன், அதனைத் தடுப்பதற்கு சுகாதார அமைச்சு முன்னெடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளன.

சைட்டத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளைத் தற்காலிகமாகவேனும் நிறுத்திவிட்டு டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அதிக பங்களிப்பு செய்ய வேண்டும். - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# தச்சன்தோப்பில் வீடு புகுந்து நகைகள், பணம் சூறையாடல்

## நள்ளிரவு வேளையில் திருடர் கைரிவசை

நாவற்குழி, மே 14

சாவகச்சேரி, தச்சன்தோப்பில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் நகைகள், பணம் மற்றும் கையில் கிடைத்த பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

தச்சன்தோப்பில், சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகத்தில் காவலாளியாகக் கடமையாற்றும் க.செல்லப்பிரகாசம் என்வரின் வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

உப அலுவலகத்துக்கு அருகிலேயே காவலாளியின் வீடு உள்ளது.

அவர் அன்று இரவு கடமையில் இருந்தார். வீட்டில் ஏனையவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் திருடர்கள் தங்களின் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

திருடர்கள் தேடுதல் நடத்தி தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரங்கள் உட்பட சுமார் 28 பவுண் நகைகளையும் பத்தாயிரம் ரூபா பணத்தையும் சில பொருள்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குப் பொலிஸ் நாய்கள் கொண்டு வரப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. பொலிஸார் தொடர்ந்து தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (இ-22)

# யோகா புதிய பயிற்சி நெறிகள் அறிமுக நிகழ்வு நல்லூரில் இன்று

யாழ். யோகா உலகம் அமைப்பினர் நல்லூர்த் தேரடிக்கு அருகே 63 நாயன்மார் குருபூசை மண்டபத்தில் யோகா புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் ஜெ.ஜெயலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மருத்துவபீடத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் 'யோகா முறைமையால் ஆரோக்கியம் பேணல்' என்னும் தொனிப் பொருளிலும் யோகா ஆசான் சோ.முகுந்தன் 'யோகாசனத்தின் சிறப்பு' என்னும் தொனிப் பொருளிலும் கருத்துரை வழங்குவர்.

யோகா பயிற்சிநெறி - 1 காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும், யோகா பயிற்சி நெறி - 2 பிற்பகல் 4.30 தொடக்கம் 5.30 மணிவரையும், யோகா பயிற்சிநெறி - 3 இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரையும் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

ஆரோக்கியத்துக்கு அவசியமான யோகாசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசான்களால் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான யோகா மேலதிக பயிற்சிகள் பெண் ஆசிரியர்களால் வழங்கப்படும். - என்று கூறப்பட்டது.

நீரிழிவு நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும் கையேடு, சான்றிதழ் வழங்கப்படும்.

ஆர்வமுடைய அனைவரும் இந்த யோகாசனப் பயிற்சி நெறிகளில் விரும்பிய ஒன்றில் இணைந்து பயனடைய முடியுமென்று யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# மாகாண சபைகளில் மாற்றம் கிடையாது!

## சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 14

மாகாண சபைகளில் ஆட்சி மாற்றங்கள் கிடையா என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்:-

எந்தவொரு சவாலையும் எதிர்நோக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார். நல்லாட்சி அரசை ஓர் ஆண்டில் கவிழ்ப்பதாக கூட்டு எதிர்க்கட்சி பிரசாரம் செய்திருந்தது.

அந்தப் பிரசாரத்தை மெய்ப்பிக்க முடியாத கூட்டு எதிர்க்கட்சி தற்போது மாகாண சபைகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதாக அறிவித்துள்ளது.

மாகாண சபைகளில் ஆட்சி மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. சில மாகாண சபைகளின் பதவிக் காலம் இந்த ஆண்டில் நிறைவடையவுள்ளன.

சில மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இந்த ஆண்டில் நாம் நடத்த உத்தேசித்துள்ளோம்.

வடமாகாண முதலமைச்சரைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாண முதலமைச்சர்களும் ஜனாதிபதியுடன் இருக்கின்றார்கள்.

இதனால் மாகாணசபை தேர்தல் நடத்தப்படும் வரையில் மாகாண சபைகளில் ஆட்சி மாற்றம் செய்யப்படாது.-என்றார்.(ஐ)


விலங்கு விசர் நோயை இல்லாது ஒழிப்போம்!

வளர்ப்பு நாய் அடிக்கடி குட்டிகள் ஈன்று அளவுக்கதிகமாக பெருகுவதைத் தடுத்திட கருத்தடை சத்திர சிகிச்சையினைச் செய்து, அன்புடன் வளர்ப்போம்! கால்நடை வைத்திய நிலையங்களில் இதனைச் செய்திட முடியும்.

நோய்ச் சந்தேகமுடைய நாய்கள் தொடர்பில் அவதானமாக இருப்போம்!



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.


## நாளை

15.05.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: பூராம் பி.இ. 2.52 வரை
திதி: சதுர்த்தி மு.ப. 10.54 வரை

சுபநேரம் : 11.53 - 1.23 வரை
இராகுகாலம்: 7:23 - 8.53 வரை

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்
இயல் இசை நாடக அரங்கு -2017

ஐந்தாம் நாள் நிகழ்வுகள்



இடம்:
இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்
நாள்:
இன்று (14.05.2017)
ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி

தலைவர்
திரு. கு.பாலஷண்முகன்
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பிரதம விருந்தினர்
வைத்தியர். வை.யோகேஸ்வரன்
(பழைய மாணவர் சங்க தலைவர்
- யாழ் இந்துக் கல்லூரி)

நாச்சிமார் கோவிலடி சபேசன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை



நாதஸ்வரம்
திரு. M.சபேசன்
திரு. S. பிரசாந்த்

தவில்
திரு. K. பாபு
திரு. S.கிருஷ்ணா

மங்கல விளக்கேற்றல்

திருமுறை ஓதுதல் : செல்விகள் அ.ஆரபி, ரா.தாரணி

ஆசியுரை : வண. கலைமாணி மீகஹஜந்துரே சிறி விமலதேரர்
(ஸ்ரீ நாக விகாரை, யாழ்ப்பாணம்)

வாழ்த்துரை : திரு. சோ.தேவராஜா (சட்டத்தரணி)
(தேசிய கலை இலக்கியப் பேரவை)

தலைமையுரை : தலைவர்

சைவ வித்தியா விருத்திச் சங்க "சைவ சிறுவர்" மாணவிகள் வழங்கும்
குழு நடனம்



நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரதீஸ்வரன்
பாட்டு : திருமதி வத்சலா கருணாகரன்
வயலின் : திருமதி இந்துமதி தயாபரன்
மிருதங்கம் : திரு . T. சிவகுமார்

குரலிசை
பாட்டு : கலாபூஷணம் S. பத்மலிங்கம்
வயலின் : திரு. சு.கோபிதாஸ்
மிருதங்கம் : திரு. S.துரைராஜா
கடம் : திரு . S. ரவிசங்கர்

"நல்லை கலா மந்திர்" மன்ற மாணவிகள் வழங்கும்
நாட்டிய அர்ப்பணம்



நட்டுவாங்கம் : திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ்
பாட்டு : திரு. S.அமிர்தசிந்துஜன்
வயலின் : திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு . S. துரைராஜா

கலைஞர்கள் கௌரவிப்பு

பிரதம விருந்தினர் உரை

"செம்முகம்" ஆற்றுகைக் குழுவினர் வழங்கும்
எவ்வளித் துவளி
(சிந்து நடைக் கூத்து)



நன்றியுரை

அனுசரணை:
பெட்டா எசன்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


# சீன நீர்மூழ்கிக் கப்பல் விவகாரம்: நழுவல் பதிலளித்த சீன அமைச்சர்!

கொழும்பு, மே 14

சீன நீர்மூழ்கிக் கப்பலை இலங்கையில் தரித்துச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் உரிய பதில் அளிக்காமல் நழுவியுள்ளார்.

சீன நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று இன்றும் நாளையும் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துச் செல்வதற்கு சீனா அனுமதி கோரியது என்றும் அதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்து விட்டது என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், பீஜிங்கில் நேற்று முன்தினம் நடந்த நாளாந்த செய்தியாளர் சந்திப்பில், சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங்கிடம் இது தொடர்பாகக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதன்போது கொழும்புத்துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி தரித்துச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். இதுதொடர்பாக இலங்கை அரசுக்குச் சீனா அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதா என்று முதலில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், இந்தச் செய்தியை இப்போது தான் பார்த்தேன். இதுதொடர்பாக விரிவான தகவல்களைத் தேசிய பாதுகாப்பு அமைச்சிடம் கேட்க முடியும். சீனாவும் இலங்கையும் பாரம்பரியமான நட்புறவைக் கொண்டுள்ளன. நாம் அரசியல், வர்த்தக, கலாசார, இராணுவ ஒத்துழைப்பைப் பேணி வருகிறோம் என்று பதிலளித்தார்.

இதையடுத்து, இந்த மாதத்தில் சீனநீர்மூழ்கியின்பயணம்இடம்பெறாது என்று அறிக்கைகள் கூறுகின்றன. எதிர்காலத்தில், சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படை இலங்கையின் துறைமுகங்களுக்குச் செல்வது தொடர்பாக இலங்கைத் தரப்புடன் பேசுவதில் சீனா இன்னமும் ஆர்வத்துடன் உள்ளதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கையில், இந்தக் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை தேசிய பாதுகாப்பு அமைச்சிடம் எழுப்புமாறு உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன்.- என்றார். (ஐ)

# வறுமைக்கு உட்பட்ட குடும்பத்துக்கு உதவி

## மஸ்தான் எம்.பி. வழங்கினார்



வவுனியா, மே 14

செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆண்டியாபுளியங்குளம் கிராமத்தில் கண் பார்வை இழந்து மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வந்த குடும்பத்தை நேரில் சந்தித்து அவர்களுக்கான உதவிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் வழங்கினார்.

அந்தக் குடும்பம் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியான செய்திகளை உறுதிப்படுத்திக் கொண்ட எம்.பி., அவர்களைச் சந்தித்து அந்தகுடும்பத்தின் முக்கிய தேவைகளாகக் காணப்பட்ட குடிதண்ணீருக்கான கிணறு மற்றும் வீட்டின் மின்சார வசதிகள் என்பவற்றுடன் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் உதவித் தொகைவழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளார்.

அத்துடன், அவரது பிள்ளைகளின் கல்விக்கான உதவிகளையும் சுய தொழிலுக்கான உதவிகளையும் வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளார். (ஐ-100)

# கைத்தொழில் ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், மே 14

புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தால் நடத்தப்படும் 'கைத்தறிப் புடைவைக் கைத்தொழில் துணிமணிகள் போட்டி 2017' இற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வருடாந்தம் நடத்தப்படும் புடைவைக் கைத்தொழில் துணிமணிகள் போட்டி மற்றும் கண்காட்சிக்குரிய ஆக்கங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் அது தொடர்பான விபரங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் மாகாண கைத்தொழில் அல்லது புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

வட மாகாண விண்ணப்பதாரிகள் கைதடியில் அமைந்துள்ள வட மாகாணக் கைத்தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்தப் போட்டிக்குரிய சகல ஆக்கங்களும் கைத்தறி பாவனை மூலம் உள்ளூரில் மட்டும் இடம்பெறுவனவாக அமைத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச)


15 வருட நிறைவை முன்னிட்டு விசேட கட்டணக்கழிவு 50% Only 50 Students

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன், பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

Spoken English - Course Fee : 15250/= Offer Fee : 7625/=
Diploma in English - Course Fee : 21000/= Offer Fee : 10500/=

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

வழிமூலம் - Daily mirror
ஆங்கிலத்தில் - Ranga Jayasuriya
மொழியாக்கம் - நித்தியபாரதி

# பிரான்ஸின் அரசியல் மாற்றம்

# இலங்கை கற்க வேண்டிய பாடங்கள்...!

மறுமலர்ச்சிகளை விரும்புகின்றனர் என்று பிரெஞ்சு நாட்டு மக்கள் கூறுகின்றனர். இவர்கள் தற்போது 39 வயதான இம்மானுவேல் மக்ரோனை புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். மக்ரோன் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைத் தன தாக்கி, தனக்கு எதிராகப் போட்டியிட்ட மேரியன் லீ பென் என்பவரை வென்று பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாகியுள்ளார்.

இவரது வெற்றி வெறித்தனமான ஜனரஞ்சக தேசியவாதத்துக்கு எதிராகக் கொடுக்கப்பட்டுள்ள கடுமையான பதிலையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இவ்வாறான வெறித்தனமான ஜனரஞ்சக தேசியவாதமே டொனால்ட் ட்ரம்ப் போன்றவர்கள் ஆட்சிக்கு வருவதற்குக் காரணமாக இருந்தது.

ஆட்சி மாற்றத்திற்கான சமிக்ஞைகள் முன்னர் நெதர்லாந்தில் காணப்பட்டாலும் கூட, தற்போது பிரான்ஸில் வலதுசாரிக் கட்சியைத் தேர்தலில் வென்று மக்ரோன் வெற்றி பெற்றமையின் மூலம் பிரான்ஸியர்களும் தமது நாட்டில் மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட வேண்டும் என்பதை நிரூபித்துள்ளனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இந்த மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை. எனினும் கருத்தியல் சார் யுத்தங்கள் இங்கு ஏற்படும் போது இலகுவாக இந்த மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

பழைய அரசியல் ஒழுங்குகள் சட்ட ரீதியற்றனவாக மாறியுள்ள நிலையில் மக்ரோனின் தேர்தல் வெற்றி ஜனநாயகம் மீளுருவாக்கத்துக்கான ஒரு சான்றாக அமைகிறது. பிரான்ஸின் முன்னாள் அதிபர் கொலண்டின் சோசலிச அரசின் பொருளாதார அமைச்சராகப் பணிபுரிந்த மக்ரோன் ஓர் ஆண்டுக்கு முன்னர் தனது முயற்சியில் En Marche என்கின்ற அரசியல் கட்சியை உருவாக்கினார்.

பிரான்ஸின் இரு பிரதான கட்சிகளான குடியரசுக் கட்சியின் பிரான் கொய்ஸ் பில்லியன் மற்றும் சோசலிசக் கட்சியின் பெனொய்ற் கமோன் ஆகியோர் முதலாவது சுற்றுத் தேர்தலில் போட்டியிட்டனர். இதில் ஆறு சதவீத வாக்கு வித்தியாசத்தில் கமோன் வெற்றி பெற்றார்.

திருமதி லீ பெனின் பொருளாதார பாதுகாப்புவாதம் மற்றும் புலம் பெயர்ந்தோர் பிரான்ஸில் குடியேறுகின்றமையை எதிர்த்து இவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை எதிர்த்து மக்ரோனால் முன்வைக்கப்பட்ட நடுநிலைவாத, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஆதரவான மற்றும் பூகோளமயமாக்கல் தொடர்பான காத்திரமான பரப்புரை இவர் பிரான்ஸில் தற்போது நடந்து முடிந்த இரண்டாவது சுற்று அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்குக் காரணமாகியது. இவரது தேர்தல் வெற்றி இன வெறி மிக்க தேசியவாதத்துக்கு எதிரான தாராளவாத ஜனநாயகத்தின் வெற்றியாகவே நோக்கப்படுகிறது.




அரசியல் நிறுவகங்கள் செயற்படா திருத்தல் என்பது எம்மைப் போன்ற நாடுகளுக்கு மட்டும் தனித்துவமான ஒரு பிரச்சினையல்ல. பிரான்ஸின் அரசியல் முடக்கப்பட்டிருந்தது. 1970 களில் பிரித்தானியாவின் ஜனநாயகம் முடக்கப்பட்டிருந்தது போன்று அண்மையில் பிரான்ஸின் ஜனநாயகமும் செயலிழந்து காணப்பட்டது.

உள்நாட்டில் முடக்கம் ஏற்படும்போது அதற்கு சாதாரண தீர்வுகளை எட்டும் நிலை பொதுவாகக் காணப்படுகிறது. இது அரசியல் நிலைமை மேலும் தீவிரமாவதற்கு வழி வகுக்கிறது. இதுவே டொனால்ட் ட்ரம்ப்பின் அமெரிக்காவிலும், எர்டோகனின் துருக்கியிலும், ஜெறேமி கொர்பினின் தொழிற்கட்சியிலும் இன்று நடந்து கொண்டிருக்கிறது.




கடந்த வாரம் பிரித்தானியாவில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஜெறோமி கொர்பினின் தொழிற் கட்சி அமோக வெற்றியைப் பெற்றது. சிக்கலான தீர்வுகளுக்கு நடைமுறைக்குச் சாத்தியமான மற்றும் வினைத்திறன் மிக்க தீர்வுகளை எட்டுவதற்கு ஆத்மார்த்தமான தேடல்களும் நடு நிலையான அணுகு முறையும் அனைத்து அரசியல் நிறுவகங்களின் விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பாற்பட்டதொரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

பிரான்ஸ் தனது அரசியல் கலாசாரத்தின் குறித்த சில பாரம்பரிய பண்புகளுக்கு அப்பால் அதிசயம் ஒன்றை நிகழ்த்தலாம். எடுத்துக் காட்டாக, தனது புதிய கட்சி அடுத்து வரும் நாடாளுமன்றில் போட்டியிடும் தனது வேட்பாளர்களில் 50 சதவீதத்தினரை சிவில் சமூகத்திலிருந்தும், மாணவச் செயற்பாட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் போன்ற பல்வேறு பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யவுள்ளார் என்று மக்ரோன் தற்போது கூறுகிறார்.

'அரசியல் செயலிழந்தமையால் எமது அரசியல் முறைமை மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், இவ்வாறான பாதிப்புக்களுக்குத் தீர்வு காண்பதற்கான எமது அரசியலின் திறன் அரசியல் நிறுவகங்கள் மற்றும் அரசியல் கலாசாரம் போன்றவற்றின் செயற்பாட்டின் மூலம் மிகத் தீவிரமாக சமரசம் செய்யப்படுகின்றது.' என்று மக்ரோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஜனநாயகத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகள் மூலம் எமது அரசியல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது இது இலங்கைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல. எடுத்துக் காட்டாக, இந்தியாவின் காங்கிரஸ் கட்சி மற்றும் அரசியல் என்பது குடும்ப விவகாரமாக மாறியுள்ள இந்திய மாநிலங்களை ஆட்சி செய்யும் கட்சிகள் போன்றவற்றிலும் இவ்வாறான தேர்தல் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையில் முன்னர் நிலவிய நிலப் பிரபுத்துவக் கலாசாரத்தின் எஞ்சியுள்ள விளைவுகள் இலங்கையின் தேர்தல் வாக்களிப்பு முறைமையில் இருந்து முற்றிலும் நீக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரத்துவமானது தந்தையிடம் இருந்து மகனுக்கும் அல்லது கணவனிடம் இருந்தும் மனைவிக்கும் கைமாறுவது என்பது பொதுவானது. ஆனால், இது அரசியல் பிரதிநிதித்துவம் எனப் பார்க்கின்ற போது சிக்கலான விடயமாகும்.

இவ்வாறு குடும்பத்துக்குள் ஆட்சி கைமாற்றப்படும் போது திறமையுள்ளவர்களுக்கான கதவுகள் மூடப்படுகின்றன. தேர்தல் வேட்பாளர்கள் எவ்வித தகுதி காண் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படாதவிடத்து, இதில் போட்டியிட்டு வெற்றி பெறும் பெரும்பான்மை வேட்பாளர்கள் மிகக் குறைந்த திறமையுடனேயே காணப்படுகின்றனர்.

இலங்கையின் அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள் தனிப்பட்ட ரீதியில் தமது தலைமைக்கு விசுவாசமாகச் செயற்படுகின்றனர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மெதமுலான கார்ல்டன் இல்லம் இலங்கை சுதந்திரக் கட்சியின் கோட்டையாக இருந்தமை இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறான அதிகாரத்துவம் மிக்க ஓர் ஆட்சியாளர் பின்னர் மாகாண தலைமைத்துவத்துக்குக் கீழிறக்கப்பட்டார். ஆகவே, அரசியல் எந்தவொரு மட்டத்திலுள்ள எந்தவொரு தலைவரும் அவரது துதிபாடும் விசுவாசிகளுக்கு கடவுளின் அவதாரமாகத் தென்படுகிறார்.

இளைஞர்கள் அரசியல் தலைமைத்துவத்தைப் பெறுவதற்கான கற்கை நெறியைக் கற்பிக்கும் நிறுவகங்கள் இலங்கையில் காணப்படவில்லை. இலங்கையின் பல்கலைக்கழக அரசியல் அரசியல் சார் கௌரவத்தையும் பாதுகாப்பையும் மட்டுமே வழங்குகின்றது. ஆகவே, இளம் அரசியல் தலைவர்களை உருவாக்கக் கூடிய முறைமை ஒன்றை இலங்கை கொண்டிருக்க வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறான தேவை நிறைவேற்றப்படாவிட்டால், இலங்கையின் அரசியல் எதிர்காலம் என்பது பரந்தளவில் மக்கள் மத்தியில் மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படும். இறுதியாக, தேர்தலில் போட்டியிடுபவர்களின் சமூக, பொருளாதார, கலாசாரக் காரணிகளில் பிற்போக்கான அரசியல் கருத்துக்களை பரந்தளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது இலங்கைக்கு மட்டும் தனித்துவமானதல்ல. பிரான்ஸிலும், இந்த நிலை காணப்படுகிறது.

பிரான்ஸில் தற்போது நடந்து முடிந்த தேர்தலில் மக்ரோனுக்கு நகர்ப்புற மக்கள் அதிகளவான வாக்குகளை வழங்கிய அதேவேளையில், புறநகர்களிலும் கைவிடப்பட்ட தொழில் நகரங்களிலும் வாழும் மக்கள் திருமதி லீ பென்னுக்கு தமது வாக்குகளை வழங்கியுள்ளனர். இதேபோன்றே இலங்கையின் தேர்தல் முறைமையும் காணப்படுகிறது.

காலிமுகத்திடலில் கூடும் கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல ஆயிரக் கணக்கானவர்கள் நாட்டில் அரசியல் பிளவை ஏற்படுத்த முனையலாம். தாராளவாத ஜனநாயகம் தனது சொந்த மக்களிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டிய தேவையேற்படலாம். குறிப்பாக ஒரு போத்தல் மதுபானத்துக்காகவும் ஆயிரம் ரூபா பணத்துக்காகவும் கொழும்புவரை மக்கள் பயணித்திருந்தனர்.

இவ்வாறான தனது சொந்த மக்களிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டிய தேவை தாராளவாத ஜனநாயகத்துக்கு சிலவேளைகளில் ஏற்படுகிறது. எனினும், இவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை பரம்பரையான, ஒதுக்கித் தள்ளும் பண்பைக் கொண்ட, துதிபாடும் அரசியல் நிறுவகங்களில் முதலில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுத்தப்படாதவிடத்து, ராஜபக்ஷவுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் கிடையாது. ★

# வரிச்சலுகை வாகனத்தை விற்று தலா ரூ.3 கோடிக்குக் குறையாமல் சம்பாதித்தனர் 92 எம்.பிக்கள்!

## நடவடிக்கை எடுக்க உயர்நீதிமன்றத்தில் வழக்கு!!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய சிறப்புரிமையின் கீழ் அரசு வழங்கிய விசேட சலுகையைப் பயன்படுத்தி மூன்று கோடி ரூபா முதல் நாலரைக் கோடி ரூபா வரை வரிவிலக்குடன் வாகனங்களைக் கொள்வனவு செய்த 92 பேர், அவற்றை விற்றுப் பணம் சம்பாதித்திருக்கின்றனர்.

இது தொடர்பான விவரங்களுடன் உயர் நீதிமன்றத்தில் பொது நலன் வழக்கு ஒன்றை சட்டத்தரணி நாகநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஊழல், லஞ்சம் குறித்து விவரிக்கும் ஆணைக்குழுவிடம் முறையிட்டும் ஏதும் நடவடிக்கை இல்லை எனத் தெரிவித்தே அவர் உயர் நீதிமன்றத்தை நாடியிருக்கின்றார்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றமையால் கிடைத்த சலுகையைப் பயன்படுத்தி வரிக் கட்டணமின்றி 'டொயாட்டா லாண்ட் குரூஸர்' ரக வாகனங்களையே இவர்கள் பெரும்பாலும் இறக்குமதி செய்திருக்கின்றனர்.

அவை உடடினடியாகவே பிற ஆள்களுக்கு பெயர் மாற்றம் செய்து பதிவு நடைபெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு எம்.பியும் மூன்று கோடி ரூபாவுக்குக் குறையாத வரி விலக்கைப் பெற்றிருக்கின்றனர்.

வன்னி மாவட்ட எம். பி. ஒருவர் நாலரைக் கோடி ரூபா வரிவிலக்குப் பெற்றிருக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வரிச் சலுகையைப் பயன்படுத்தி, தீர்வைக் கட்டணமின்றி வாகனத்தை இறக்குமதி செய்த பின்னர், அதனை தீர்வைக் கட்டணமும் உள்ளடக்கிய விலைக்கு விற்றுப் பெருந்தொகை பணம் சம்பாதிப்பது சட்டத்தின் கீழ் 'முறையற்ற விதத்தில் சொத்து சேர்த்தல்' குற்றமாகக் கருதப்பட வேண்டும் என்று மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

### 'பிஸ்னஸ்' பட்டியலில் ஜே.வி.பி. இல்லை

இப்படி வாகன 'பிஸ்னஸ்' செய்தவர்களில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

தமிழ் எம்.பிக்களில் எஸ்.ஸ்ரீதரன், ஈ.சரவணபவன், எஸ்.சிவமோகன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடிவேல் சுரேஷ், மாவை எஸ்.சேனாதிராசா, சிவசக்தி ஆனந்தன், கே. கோடீஸ்வரன், அங்கஜன் இராமநாதன், எஸ்.யோகேஸ்வரன், சாள்ஸ் நிர்மலநாதன், டக்ளஸ் தேவானந்தா, ஜி.ஸ்ரீநேசன் ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்கி உள்ளன.

இந்த எம்.பிக்களில் பலர் முன்னர் தாம் எம்.பிக்களாக இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அந்தந்தக் காலகட்டங்களில் தமக்குக் கிடைத்த வரிச்சலுகையைப் பயன்படுத்தி தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்து தீர்வைப் பெறுமதியுடன் சேர்த்து விற்பனை செய்து ஏற்கனவே பெருமளவு பணம் சம்பாதித்துக் கொண்டவர்கள் என்றும் கூறப்பட்டது. (உ)

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
இலங்கையில் IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

# வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் அநேகம் பேர் இரட்டை குடியுரிமை சிக்கலில்!

### ஆங்கிலப் பத்திரிகை தகவல்

இரட்டைக் குடியுரிமைச் சர்ச்சையில் சிக்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் - தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் - என்று சில வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டன், கனடா, அமெரிக்கா, சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இரண்டாவது குடியுரிமையையே அவர்கள் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும், அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய எம்.பிக்கள் பலரின் குடும்பங்கள் அந்த நாடுகளில் வசிக்கின்றன என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களின் குடியுரிமை நிலைமை குறித்துத் தகவல் தருமாறு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தைக் கோரியிருக்கின்றார். (எ)

# 2017 கடவுச்சீட்டு சுட்டெண்ணில் இலங்கை 85 ஆவது இடத்தில்!

2017 ஆம் ஆண்டுக்கான பிரபல குடிவரவு குடியகல்வு மற்றும் கடவுச்சீட்டு சுட்டெண்ணில் இலங்கைக்கு 85 ஆவது இடம் கிடைத்துள்ளது.

91 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சுட்டெண் வெளியிடப்பட்டுள்ளது.

ஜேர்மன் மற்றும் சிங்கப்பூர் அந்தப் பட்டியலில் உலகின் மிக பலமான கடவுச்சீட்டு கொண்ட நாடுகளாக மதிப்பிடப்பட்டுள்ளன.

அந்த நாடுகளின் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி, விசா இன்றி 159 நாடுகளுக்கு பயணிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இலங்கை கடவுச்சீட்டில் விசா இன்றி 37 நாடுகளுக்கு மாத்திரமே பயணிக்க முடியும்.

குறித்த சுட்டெண்ணில் சுவீடன் இரண்டாம் இடத்தைபிடித்துள்ளது. அந்த கடவுச்சீட்டை பயன்படுத்தி 158 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும்.

இந்தச் சுட்டெண்ணில் டென்மார்க், பின்லாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், நோர்வே, ஐக்கிய இராஜ்ஜியம், தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளன.

இந்த நாடுகளின் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி விசா இன்றி 157 நாடுகளுக்குப் பயணிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தசுட்டெண்ணுக்கு அமைய எதியோப்பியா, நைஜீரியா, மியான்மார் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் இலங்கையை விடவும் முன் இடத்தில் காணப்படுகின்றன.

குடிவரவு குடியகல்வு மற்றும் கடவுச் சீட்டு சுட்டெண்ணில் 84 ஆவது இடத்தை பிடித்துள்ள எதியோப்பியா கடவுச்சீட்டில் விசா இன்றி 38 நாடுகளுக்கு பயணிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

அந்தச் சுட்டெண்ணில் 80 ஆவது இடத்தை பிடித்து நைஜீரியா கடவுச்சீட்டில் விசா இன்றி 43 நாடுகளுக்குப் பயணிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

82 இடத்தை பிடித்துள்ள மியன்மார் கடவுச்சீட்டில் விசா இன்றி 41 நாடுகளுக்கு பயணிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.


இதேவேளை அந்தச் சுட்டெணில் 53 ஆவது இடத்தைப் பிடித்துள்ள மாலைதீவு கடவுச்சீட்டில் விசா இன்றி 53 நாடுகளுக்கு பயணிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

CANADA , USA
study & work visa
Minimum Qualification O/L
VISA Consulting and Online from filling.
குறைந்த செலவில், விரைவில் பயணம்.
Bank Balance 100%
குறைந்த தகைமை O/L
Swiss, France
செல்ல வழிகாட்டல்
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street,
Colombo - 13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

பூக்கன்றுகள் விற்பனை
சிறந்த மேற்பட்ட சகல விதமான பூக் கன்றுகளும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
ஒவ்வொன்றும் 70/=
பூந்தொட்டிகள், பீனிகள், பூந்தொட்டிக்கு தேவையான அனைத்து பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ். அக்குவாரியம் & பிளாண்ட் பரடைஸ்
97, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(ஓட்டுமடச் சந்தி)
தொலைபேசி இல. 0759444608, 0759910060

தேவை
பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி கிளைகளுக்கு விளம்பரத் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை.
தொடர்பு : 077-3830671

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் சித்திரைத் திங்கள் 31 ஆம் நாள் திருதியைத் திதி பகல் 10.17 மணி வரை பின்னர் சதுர்த்தி நட்சத்திரம் -மூலம் பி.2.08 மணி வரை. பின்னர் பூராடம் அமிர்த்த சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் - மாலை 4.48 மணி முதல் 6.22 மணி வரை. சுபநேரம் - காலை 8.53 மணி முதல் 10.22 மணி வரை. இன்று சங்கடகர சதுர்த்தி ஆகும். திவசம் செய்ய வேண்டிய திதி- எதுவுமில்லை- பிறந்த நட்சத்திர வழிபாடு - மூலம்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இந் நாளில் அவசியம் சுப கருமங்களைத் தவிர்க்க வேண்டும்.

## 14.05.2017 இல் இருந்து 20.05.2017 வரை



**மேஷம்:** நன்மையான வாரம் ஆகும். பணப்புழக்கம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரம் கணிசமான லாபத்தைத் தரும். உத்தியோகத்தில் இவர்களின் திறமையால் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். ஆரோக்கியம் சீரடையும். வழக்கு, பிணக்குகள் சாதகமான முடிவைத் தரும். மாணவர்களுக்கு வெளிநாட்டுக் கல்வி வசதிகள் முன்னேற்றமடையும். இனத்தவர்கள் பலவிதத்திலும் உதவி புரிய முன்வருவார்கள். பெண்களுக்கு விவாகப் பேச்சுகளில் இருந்து வந்த தடைகள் நீங்கும்.



**ரிஷபம்:** கவலையான வாரமாகும். பண வரவு குறைவடையும். குடும்பத்தில் அமைதியின்மை தோன்றும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். எதிர்பார்த்த எண்ணங்கள் தவிடுபொடியாகும். பணச் செலவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியம் பாதிப்படையும். அதிகாரிகள் கடமையில் குற்றம் காண்பார்கள். அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். தொழிலாளர்களுக்குத் தொழில்வாய்ப்புகள் தடைப்படும். விவசாயிகளுக்கு விளைநிலச் செய்கையில் குழப்பங்கள் ஏற்படவே செய்யும்.



**மிதுனம்:** இவ்வாரம் சம பலன்கள் காணப்படுகின்றன. நினைத்த காரியம் தடைப்படும், ஆரோக்கியச் சீர்கேடுகள் உண்டாகும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. கடன் தொல்லைகள் கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். கடின உழைப்பு அலைச்சல்கள் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு அரச ஒப்பந்தங்களில் போட்டி, பொறாமைகள் தலைதூக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கமிருப்பினும், பலாபலன்கள் குறைவாக இருக்கும். தொழில் வசதிகள் மந்தமாக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.



**கடகம்:** யோகமானவாரம். பணப்பலம் அதிகரிக்கும். பிரிந்த உறவினர், உறவு கொண்டாடுவார்கள். புத்திரரால் நற்செய்தி கிடைக்கும். தாய் வழிச் சொந்தங்கள் வந்து சேரும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். அந்நியசகாயங்களால் நன்மை உண்டாகும். சிலர் வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டுக்குக் குடிபோவார்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கருணையால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். வாகன வசதிகள் பெருகும். கொடுக்கல் வாங்கல்களில் முன்னேற்றம் உண்டாகும்.



**சிம்மம்:** நன்மையான வாரமாகும். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். வேலை செய்யும் பெண்களுக்கு வரவேற்புகளும், உயர்வுகளும் கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். மாணவர்கள் கல்வியில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். விவசாயத் தொழில் விருத்தியடையும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். தொழிலதிபர்கள் தொழிலாளிகளின் ஒத்துழைப்பால் முன்னேற்றமும் அதிக வருமானமும் பெறுவார்கள்.



**கன்னி:** குழப்பமான வாரமாகும். மனச்சஞ்சலம் அதிகரிக்கும். பணமுடை ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும். தொழில் வசதிகள் மந்தமாகும். பிரயாண வசதிகள் குறையும். அந்தஸ்து, கௌரவம் பாதிப்படையும். குடும்ப அமைதி குறையும். வியாபாரத்தில் முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரச உதவிகளில் தடங்கல்கள் தோன்றும். மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலை ஏற்படும். பெண்களுக்கு நற்கருமங்கள் நிறைவேறுவது கஷ்டமாக இருக்கும்.



**துலாம்:** மந்தமான வாரமாகும். வருமானம் மத்திமமாக இருக்கும். வீண் செலவுகள் உண்டாகும். எடுக்கும் எந்த முயற்சிகளும் தடைப்படும். குடும்பத்தில் சுமாரான அமைதி காணப்படும். வீடு, வாகனத் திருத்தச் செலவுகள் உண்டாகும். உறவினர் வருகையால் களிப்பு, செலவுகளும் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. பிறர் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவேண்டும். சகோதர உதவி மேம்படும். மனைவி வழியால் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் ஓரளவு ஒத்துழைப்பார்கள்.



**விருச்சிகம்:** இன்பமானவாரமாகும். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். வியாபாரம் லாபகரமாக இயங்கும். வங்கி உதவிகள், வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும். திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறும். சிலர் நண்பர்களுடன் சுற்றுலாப் பயணம் செய்து உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பார்கள். உத்தியோகத்தர்களுக்கு பல விதத்திலும் காரிய சித்தி உண்டாகும். மாணவர்களுக்குத் தூரதேசக் கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். பெண்களுக்கு விவாகப்பேச்சுகள் சுமுகமான முடிவைத் தரும்



**தனுசு:** யோகமான வாரம் ஆகும். தனலாபம் அதிகரிக்கும். கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த பகை, விரோதம், கொடுக்கல், வாங்கல் பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரச ஊழியர்கள் பதவி உயர்ச்சியுடன் அதிகாரிகள் ஆதரவைப் பெறுவார்கள். தொழிலாளர்கள் வாழ்வில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் உண்டாகும். முதலாளி - தொழிலாளி ஒத்துழைப்புக் கிடைப்பதுடன் தொழிற் சிறப்பும் பெறுவார்கள். கலைத்துறை மதிக்கப்பட்டு வளம் பெறுவார்கள்.



**மகரம்:** கவலையான வாரம் ஆகும். வருமானம் குறையும். உடலில் ரோகங்கள் உண்டாகும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். மன அமைதி கெடும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கோபத்துக்கும், பதவி இழப்புக்கும், அவமானத்துக்கும் உள்ளாகிய பற்பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி வரும். ஆசிரிய மாணவர் உறவு சீர்குலையும். விவசாயிகள் உற்பத்திச் செலவு அதிகரிப்பால் நட்டமேற்பட்டு அவதிப்படுவார்கள். புதிய தொழில் முயற்சிகளைத் தவிர்க்கவும். திருமண காரியங்கள் தடைப்படும்.




**கும்பம்:** நன்மையான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பங்களில் நல்லுறவும், மனமகிழ்ச்சியும் வீட்டுச் சிறப்பும் உண்டாகும். ஆசிரிய மாணவர் உறவு முன்னேற்றம் அடையும். பெண்களுக்கு விவாகத் தடைகள் நீங்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் நிறையக் கிடைக்கும். வியாபாரத்தில் துரித வளர்ச்சி உண்டாகும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும்.



**மீனம்:** இவ்வாரம் சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரித்தலும் மன அமைதியின்மையும் பெரும்பாலும் ஏற்படலாம். எதிலும் எதிர்பாராத தடை, தாமதங்களும், ஏமாற்றங்களும் உண்டாகலாம். உடல், உள பாதிப்புக்களால் தேகநலக் குறைவும் பொருள் நட்டமும் உண்டாகும். சகோதர உறவு வலுவடையும். திட்டமிட்ட பயணங்கள் தடைப்பட்டு போகும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும். கவனம் தேவை.

# குறைபாடுகளைத் தேடி அபிவிருத்தி செய்தால் குடாநாடு முன்னேற்றம் அடைவது திண்ணம்



வடமாகாணத்தில் சமகால அபிவிருத்தி, அரசியல் நிலவரம் தொடர்பாக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநரும் ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் 'காலைக்கதிருக்கு' வழங்கிய செவ்வி.

கேள்வி. நீங்கள் தமிழ்சமூகத்தின் தேவைப் பாட்டை உணர்ந்து பல் வேறு அபிவிருத்திப் பணிகளைமுன்னெடுத்து வருகின்றீர்கள். எனினும் வடபுலத்தில் திருப்தி கரமான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றனவா?

**பதில்:** இது பற்றிக் கூறு வதாயின் நிறைய விடயங்கள் இருக்கின்றன. அதாவது ஒரு சமூகத்தின் தேவைப்பாட்டைஅறிந்து, உணர்ந்து அந்தச் சமூகத் துக்குத் தேவையான வற்றை நிறைவேற்றிக் கொடுப்பதுதான் மாகாண சபைக்குஉரித்தானவேலை. ஆனால் அதற்குரித்தான வேலைகள் சீராக இடம் பெறுகின்றனவா என்ற கேள்வி இருந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்கள் ஒன்று பட்டு வாக்களித்து எம்மீது பொறுப்புக்களை சுமத்தி யிருப்பது அவர்களின் தேவைகளைநிறைவேற்றி வைப்பதற்கே. வேறு எதற்கும் அல்ல. எமது உரிமைகளை, தேவைகளை குரல் கொடுத்து வென்றெடுப் பதில் நாடாளுமன்றத்திலுள்ளதமிழ்க்கூட்டமைப்பு உறுப்பினர்கள் அதித அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

ஆனாலும்வட மாகாண சபையினுடைய மக்கள் பிரதிநிதிகள் தாம் செய்ய வேண்டிய பணிகள் எவை என்று அறியாமல் தமிழ் மக்களுடைய உரிமை என்ற விடயங்களை மட்டும்வெறுமனேகதைத்துக் காலத்தை வீணடித்துக் கொண்டு இருக்கின்றனர். வட மாகாணம் முழுவதும் அபிவிருத்தி ரீதியிலான பணிகளைச் செய்வதற்கான தேவைப்பாடுகள் நிறையவே காணப்படுகின்றன.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் மக்களைத் தேடுவதும், பின்னர் மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேடுவதுமான அரசியல் கலாசாரம்தான் எமது வடபுலத்தில் இருக்கிறது என்ற கதை மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

மக்கள் பிரநிதிகள் மக்களுடன் மக்களாக இருந்து கொண்டு அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது அபிவிருத்தி சம்பந்தமாகவோ அல்லது வேறுஎதுவாகஇருந்தாலும் எங்களுக்கு ஆதரவாக இருப்பவர்கள் மக்கள் என்னும் பெரும் சக்தியாகும். அவர்களுடைய தேவைகளைக் கருத்தில் கொள்ளாமல் இருப்பது மன வேதனை தரும் விடயமாகும்.

சுய நிர்ணயம், அரசியல் அதிகாரம் என்பவற்றைப் பேச எங்களிடம் பலம் வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட இன்னும் எத்தனையோபேர் இருக்கின்றார்கள். ஆனால், மாகாண சபையைப் பொறுத்தமட்டில் நாங்கள் செய்ய வேண்டிய பணிகள் நிறையவே காத்துக் கிடக்கின்றன. எதையுமே செய்யாமல் தேவையற்ற விடயங்களில் காலத்தையும் நேரத்தையும் ஒதுக்கி வெறுமனே உசுப்பேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

இதனால்தான் வடபுல மாகாணசபையால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் கணிசமான அளவு நலிவடைந்த நிலையில் இருக்கிறது என்று பொது மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

**கேள்வி:** வட மாகாண சபை திருப்திகரமான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவில்லை என்று கூறுகின்றீர்கள். அது பற்றி விளக்கமாகச் சொல்ல முடியுமா?

**பதில்:** ஆம். பொதுவாகச் சொல்லப் போனால் நகரில் வாழ்பவர்கள் எல்லா விடயங்களிலும் செழிப்பான வளங்களுடன் வாழ்கின்றார்கள். ஆனால், கிராமத்தில் வாழ்வோர் எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி, எந்தவிதமான செழிப்பான வளங்களுமின்றித் தவிக்கின்றனர். சுத்தமான குடிதண்ணீர், சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு, விவசாயம், விளையாட்டு, அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு வழியின்றி உள்ளார்கள்.

மீள் குடியேற்றப் பகுதிகளிலுள்ள சில இடங்களைச் சென்று பார்த்தால் இன்னமும் எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி மக்கள் கடும் வேதனையுடனும் துயரத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். தொழில் வசதியின்மையால் ஒரு வேளைக்கு உணவுக்கே வழியின்றி தவிக்கின்றனர். குறிப்பாக இந்த மக்களுடைய சுயதொழில் வாய்ப்புக்காக கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு யாரிடம் இருக்கிறது.

மாகாண சபையிலுள்ள வளங்களைச் சரியாகப் பயன்படுத்தி மக்களுடைய தேவைகளை தீர்த்து வைக்க முடியாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம். மாகாண சபையில் சுயதொழில் வாய்ப்புக்கான கடனுதவி, வீடமைப்புக் கடன், உள்ளூர் பாதை அபிவிருத்தி, சிறுவர் நலன்புரி சமூக சேவைகள் எனப் பலதரப்பட்ட கிராம உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தக் கூடிய வளங்கள் உள்ளன. அந்த வளத்தை முறையாகப் பெற்று அவை சரியாக மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

மக்கள் பணியே மகேசன் பணி என்பார்கள். அவர்கள் அதற்கே முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்ற வேண்டும். அவ்வாறு தியாகம் செய்து சேவையாற்றும் போதுதான் குறைபாடாகக் காணப்படும் கிராமங்களின் அபிவிருத்தி திருப்திகரமாகவும் எழுச்சி பெற்றதாகவும் மாற்றம் பெறும். மாகாண சபைக்கு உரித்தான வளங்களை மட்டும் நம்பி இருக்காமல் ஏனைய அமைச்சின் ஊடாகத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொண்டு கருமம் ஆற்ற வேண்டும். அல்லது தொண்டு நிறுவனங்களைச் சந்தித்து அவர்கள் ஊடாகவும் தேவையான உதவிகளைப் பெற்று அபிவிருத்தி முன்னெடுப்புக்களை மேற்கொள்வது அவசியமாகும். இவ்வாறு கவனத்தில் கொள்ளாமல் காணப்படும் குறைபாடுகைளத் தேடித் தேடி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது நிச்சயமாக எமது யாழ். குடாநாடு உரிய முன்னேற்றத்தை அடையும் என்பதில் ஐயமில்லை.

எதுவாக இருந்தாலும் அதனை முறையாகப் பேணிச் செயற்பட வேண்டிய கடப்பாடு மக்களின் பிரநிதியாக வருகின்றவர்களுக்கு உண்டு. யார் யார் ஊடாக தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நியதி இருக்கிறது. இன்னும் குடாநாட்டில் ஏராளமான உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற் கொள்ள வேண்டியிருக்கிறது. நாங்கள் சரியான முறையில் பிரச்சினையை இனங்கண்டு அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க செயற்படுகின்றோமா என்பதுதான் இங்கு முக்கியமான கேள்வி.

**கேள்வி:** வடக்கு மாணவர்களது நிலை என்ன?

**பதில்:** எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அளவில் ஆஸ்திரேலியாவில் பொது நலவாய விளையாட்டுப் போட்டி இடம் பெறவுள்ளது. இதில் 54 நாடுகள் பங்கு கொள்கின்றன. அங்கு செல்வதற்காக 7 வீர வீராங்கனைகள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்காக சத்துணவு வழங்கப்படுகிறது. அது என்னுடைய சிவன்அறக்கட்டளைநிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது. எனினும் அவர்கள் பயிற்சிக்காக செல்லும் இடத்துக்கு மாதாந்தம் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இங்கு பயிற்சி பெறுபவர் ஒருவர்தலா 300 ரூபா செலுத்த வேண்டும். இந்தக் கட்டணச் சலுகையைக் கூட மாகாண சபை பெற்றுக் கொடுக்க முடியும். ஆனால் அவர்கள் செய்யவில்லை. இவ்வாறு இந்தச் சின்ன விடயத்தைக் கூட கவனத்தில் எடுக்காமல் இருப்பது கவலை தரும் விடயமாகும்.

எமது மாகாண சபையின் செயற்பாட்டையும் ஏனைய மாகாணசபைகளின்செயற்பாட்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்கள் ஒவ்வொருதுறைகளிலும் எவ்வகையிலான அபிவிருத்திகளைமேற்கொண்டுள்ளார்கள் என்ற அர்த்தம் தெளிவாகப் புலப்படும்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின்படி முதல் 25 இடங்களில் வடக்குக்கு இடமில்லை என்று சமூக வலைத்தளங்களிலும் பத்திரிகைளிலும் செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இதற்குப் பொறுப்புக் கூறக் கூடியவர்கள் மாகாண சபையின் கல்வி அமைச்சு என்பதை எல்லோரும் தெளிவாக விளங் கிக் கொள்ள வேண்டும். கடந்த 2015 ஆண்டிலும் இதே நிலைதான். கல்வி வீழ்ச்சி நிலைக்குப் பின்தள்ளப் பட்டுள்ளது.

இந்த நிலையில் இது பற்றிச் சிந்திக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பார்களாயின் எமது எதிர்காலச் சந்ததியினரைக் கொத்துக் கொத்தாக அழிப்பதைத் தவிரவேறுஎவ்வகையிலான தரிசனத்தையும் மாகாண சபையில் காண முடியாது.

கல்வியின் ஊடாக சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்பும்திட்டம்குறிக்கோள் எல்லாம் எமது மாகாணத்தினுடைய கல்வியின் தேர்ச்சி மட்ட வெளிப்பாடு தற்போது எடுத்துக் காட்டுகிறது. இந்த ஆபத்தையும் தாண்டி இதை விட மோசமாகவும் போகலாம் என்னும் எச்சரிக்கையையும் தாண்டி எமது எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி கல்வியை மேம்படுத்த அதற்குரிய சவால்களைமுகம்கொடுத்து வெற்றி கொள்ளும் திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டியது நம் மாகாண கல்வி அமைச்சின் கட்டாயக் கடமையாகும். இந்தக் கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து எமது மாணவர் சமூகத்தைப் பாதுகாத்து வாழ வைக்க வேண்டும்.

**கேள்வி:** இந்த நிலைமைகளுக்கான காரணம் என்ன ?

**பதில்:** நான் இதற்கு முக்கிய காரணமாகக் கருதுவது ஒரு வலுவான எதிர்க்கட்சியின்மை யேயாகும். பெரும்பான்மையான பலத்தோடு ஆட்சியில் அமைந்துள்ள மாகாண சபையின் குறைபாட்டை விமர்சனம் செய்து சீரமைத்து மாகாண சபையை முன்னெடுத்துச் செல் வதற்கான பலமான எதிர்க்கட்சி இல்லை. இதில் சொற்ப தொகையினரே உள்ளனர். ஆளும்தரப்பினர் விடும் தவறுகளைக் தட்டிக் கேட்பதற்குஆட்களில்லை.

நீண்ட போரால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துக்குத் திட்டமிடல் இல்லாத செயற்பாடுகளின் காரணமாக நாங்கள் கண்துடைப்பான அரசியல் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நேர்காணல்: இக்பால் அலி


# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 178



பொன்.வேணு கிருஷ்ணா

*சீனாவா? அமெரிக்காவா?*

கடந்த சில வாரங்களாகக் கொரிய தீபகற்பத்தில் எந்நேரமும் போர் வெடிக்கலாம் என்ற பதற்றம் நிலவியது. தென்கொரியாவும் அதற்கு ஆதரவாக அமெரிக்காவும் பெரும்படைகளையும் ஆயுதங்களையும் குவித்துப் போர் ஒத்தி கைகளை நடத்தி வந்தன. போர்ப் பிரகடனம் செய்வதுபோல வடகொரி யாவும் போர் ஒத்திகைகள் நடத்தியது. வடகொரியாவிடமும் அமெரிக்காவிட மும் அணு ஆயுதங்கள் உள்ளமையால், ஒருக்கால் போர் தொடங்கிவிட்டால் அதன் விளைவுகள் மிகக் கோரமாக இருக்கும் என்பதால் தெற்கு, தென்கிழக் காசிய நாடுகள் அனைத்தும் பெரும் பீதியில் இருந்தன.




வடகொரியா 2006 மற்றும் 2009-இல் அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியுள்ளதோடு, கடந்த 2012 செப்ரெம்பரிலும் அணு ஆயுதச் சோதனையை நடத்தியது. கடந்த பெப்ரவரியில் நிலத்தடி அணுகுண்டு சோதனையையும், ஏவுகணைச் சோதனையையும்நடத்தியுள்ளது.வடகொரியாவின் அச்சுறுத்தலை முறியடிப்பதாகவும், அமெரிக்காவின் நட்பு நாடுகளான தென்கொரியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் ஆகியவற்றின் பாதுகாப்புக் காகவும் என்று கூறிக் கொண்டு அணு குண்டு வீசும் பி-52 ரக போர் விமானங் களைக் கொண்டு 2013 ஆம் ஆண்டு மார்ச்மாதம்முதலாகதென்கொரியாவுடன் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சி களை அமெரிக்கா நடத்தி வருகிறது. இந்த விமானக் குண்டுகள் 1945-இல் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா வீசிய அணு குண்டுகளை விட 75 மடங்கு அதிக ஆற்றல் கொண்டவையாகும். இரண்டு குண்டுகள் வடகொரியா நாட்டின் மீது போடப் பட்டால், அவை அந் நாட்டையே மயானப் பூமியாக்கிவிடும்.

## ஜப்பானின் காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட கொரிய மக்களும் அமெரிக்க விசுவாச பொம்மையாட்சியும்

ஜப்பானின் காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட கொரிய மக்கள், கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில் தேசிய விடுதலைப் படையைக் கட்டி யமைத்து அன்றைய சோசலிச சோவியத் படைகளின் உதவியுடன் கொரியா வின் வடபகுதியை 1945-இல் விடு தலை செய்து சுதந்திர அரசைப் பிரகட னம் செய்தனர். தென்பகுதியில் அனைத்து கம்யூனிஸ்டுகளும் நாட்டுப் பற்றாளர்களும் இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்புத் தலைவர் லியூ-வூன்- கியூங் தலைமையிலான கொரிய மக்கள் குடியரசைப் பிரகடனம் செய்தனர். ஆனால், ஜப்பானின் காலனிகளைக் கைப்பற்றிய அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள், தென்கொரியாவை ஆக்கிர மித்துக் கொண்டு தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்கி, லியூ-வூன் -கியூங்கைப் படுகொலை செய்து சிங் மான் ரீ என்ற கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சர்வாதிகாரி தலைமையிலான அமெரிக்க விசுவாச பொம்மையாட்சியை நிறுவினர்.

இதனால் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான வடகொரியாவில் சுதந்திர தேசிய அரசும், தென்கொரியாவில் அமெரிக்காவின் பொம்மையாட்சியுமாக 38ஆவது அட்சரேகைக்கு தெற்காகவும் வடக்காகவும் 1948-இல் தென் கொரியாவும் வடகொரியாவும் பிளவுபட்டன. அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப்பட்ட பொம்மையாட்சி நிலவும் நாடாக உள்ளதால், அதனை ஒரு சுதந்திர நாடாகவே அங்கீகரிக்க முடியாது என்பதால், 1950-இல் "நம் தேசத்தை ஒன்றிணைப்போம்!" என்ற முழக்கத்துடன் தென்கொரிய பொம்மையாட்சியாளர் களை எதிர்த்து வடகொரிய படையெடுத்துப் பல பகுதிகளைக் கைப்பற்றியது. இதற்கெதிராக அமெரிக்காதலைமையில் மேற்கத்தேய ஏகாதிபத்தியங்கள் கம்யூனிஸ்ச அபாயத்தை முறியடிப்பது என்ற பெயரில் போரில் குதித்தன.

## ஒரே தேசிய இனத்தவரான கொரிய மக்கள் வடகொரியா மற்றும் தென்கொரியா எனத் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டனர்

பல லட்சக்கணக்கானோரைப் பலி கொண்ட இப்போரைத் தொடர்ந்து, போர் நிறுத்த ஒப்பந்தம் போடப்பட்டு, ஒரே தேசிய இனத்தவரான கொரிய மக்கள் வடகொரியா மற்றும் தென் கொரியா எனத் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டனர்.

தென்கொரிய சுதந்திர அரசைப்



தென் கொரியா மற்றும் ஆசிய,பசுபிக் பிராந்திய நட்பு நாடுகளின் பாதுகாப்புக்கானது என்ற பெயரில், தென் கொரியாவில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் அதி நவீன பி-52 ரக அணுகுண்டு தாக்குதல் போர் விமானம்.

பாதுகாப்பது, அணு ஆயுதப் பரவலைத் தடுப்பது, ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நிலைநாட்டுவது என்று பசப்பிக் கொண்டே, இப்பிராந் தியத்தில் தனது போர்க்கப்பல்களையும் போர்விமானங்களையும் கொண்டு அடுத்தடுத்து போர் ஒத்திகைகளை நடத்திவடகொரியாவையும்சீனாவையும் அமெரிக்கா ஆத்திரமூட்டி வருகிறது. அமெரிக்காவை எதிர்த்து சீனாவும் வடகொரியாவும்நவீன ஆயுதங்களுடன் அணு ஆயுதச் சோதனை நடத்தி எச் சரிப்பதைக் காரணங்காட்டி, தென் கொரியா, தைவான், பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாகக் கூறிக் கொண்டு அந்நாடுகளில் இரா ணுவத் தளங்களைநிறுவி, அமெரிக்கா தனது ஆதிக்கத்தைத் தீவிரப்படுத்தி வருகிறது. மறுபுறம் வடகொரியாவைப் பயங்கரவாத நாடு, சர்வதேசச் சட் டங்களை மதிக்காத போக்கிரி நாடு என்று குற்றம் சாட்டி, பல்வேறு பொரு ளாதாரத் தடைகளை விதித்து அந் நாட்டைத் தனிமைப்படுத்திப் பல வீனப்படுத்தி வருகிறது.

இப்பிராந்தியம்முழுவதும்சீனாவின் செல்வாக்கைத் தடுப்பதையும் அமெ ரிக்க நட்பு நாடுகளை இணைத்துக் கொண்டு கூட்டுத் தாக்குதல் தொடுப் பதையுமே அமெரிக்க வல்லரசு நோக் கமாகக் கொண்டுள்ளது. வளைகுடா நாடுகளிலிருந்து கச்சா எண்ணெயைக் கப்பல் மூலம் மியான்மர் (பர்மா) வரை கொண்டுவந்து, பின்னர் மியான்மரி லிருந்து நிலத்தடிக் குழாய் வழியாக சீனாவுக்குக் கொண்டுசெல்லும் திட் டத்தை சீனா செயற்படுத்தியது. இத னைத் தடுப்பதற்காகவே, மியான்மரில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்ற பெயரில், அமெரிக்காதலையிட்டு அந்நாட்டை சீனாவின் செல்வாக்கிலி ருந்து மீட்டுத் தன்பக்கம் வளைத்துக் கொண்டது. இதனால் சீனா தனது நாட்டுக்கான எண்ணெயைக் கப்பல்



தென் கொரியாவின் ஜின்ஹே கடற்படைத் தளத்தில் நிறுத்தப்பட்டுள்ள "யு எஸ் சான்பிரான்சிஸ்கோ" எனும் அதிநவீன அணுகுண்டு வீசும் திறனுடைய அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பல்.

மூலம் கொண்டு செல்வதற்கான ஒரே வழியாக மலாக்கா நீரிணை மட்டுமே இருப்பதால், இப்பகுதியிலுள்ள நாடு களைத் தனது கூட்டாளிகளாக மாற்றிக் கொண்டு இராணுவத் தளங்களை அமைத்து சீனாவை அமெரிக்கா எச்சரிக்கிறது.

## போலி சோசலிஸ நாடான வடகொரியா

போலி சோசலிஸ நாடான வட கொரியா, ஏறத்தாழ இரண்டரைக் கோடி மக்களைக் கொண்ட சிறிய, வறிய நாடு. மறைந்த வடகொரியாவின் தேசி யத் தலைவரான அதிபர் கிம்- இல்-சுங் குடும்பத்தின் இளம் வாரிசு அதிபரான கிம்-ஜாங்-உன் தலைமையில், ஒரு கட்சி இராணுவ சர்வாதிகாரத்துடன் அதிகாரவர்க்க முதலாளித்துவ ஆட் சியை அந்நாடு பின்பற்றி வருகிறது. அந்நாட்டின் இராணுவ ஆட்சியாளர்கள், அமெரிக்காவின் அச்சுறுத்தலைக் காட்டி நாட்டின் பொருளாதாரத்தையே இரா ணுவ மயமாக்கியுள்ளனர். போர் அச் சுறுத்தல்கள் மூலம் வடகொரியாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதை அமெரிக்கா நோக்கமாகக் கொண்டுள்ளதால், அமெ ரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளைப் பின்வாங்கச் செய்வதற்காக அணு குண் டுத் தாக்குதலை நடத்தப் போவதாக எச்சரிக்க வேண்டிய இக்கட்டான நிலை மையில் வடகொரியா உள்ளது.

## கொரிய விவகாரத்தை நெளிவுசுழிவாகக் கையாள சீனா முயற்சிக்கிறது


தனது வணிகத்துக்கும் எரிபொரு ளுக்கும் சீனாவையே வடகொரியா பெரிதும் சார்ந்துள்ளது. எனவே சீனா, வடகொரியாவுக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுக்க வேண்டும், ஒரு பொறுப்பான உலக சக்தியாக சீனா நடந்து கொள்ள வேண்டும், வடகொரியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட சீனா ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா நிர்ப் பந்திக்கிறது. மறுபுறம், சீனப் பொருளா தாரம் அமெரிக்காவுக்குப் பெருமளவு ஏற்றுமதி செய்வதைச் சார்ந்துள்ளது. அமெரிக்காவின் பொதுக் கடன் பத்திரங் களை 2 டிரில்லியன் டொலர் அளவுக்கு சீனா வாங்கி வைத்துள்ளதால், இன்றைய நிலையில் அமெரிக்காவை சீனா பகைத்துக் கொண்டால், சீனாவின் பொருளாதாரம் பெருத்த பேரழிவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதால், கொரிய விவகாரத்தை நெளிவுசுழிவாகக் கையாள சீனா முயற்சிக்கிறது. மேலும், போர் மூண்டால் அண்டை நாடான வடகொரியாவிலிருந்து ஏராளமான அகதிகள் சீனாவுக்குள் பெருகுவார்கள் என்பதால், சீனா இந்த நெருக்கடியைத் தவிர்க்கவே விரும்புகிறது. வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக் கும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர் மானத்துக்கு ஆதரவாக சீனா முன்பு வாக்களித்துள்ள போதிலும், வட கொரி யாவில் தற்போது நிலவும் அமெரிக்க எதிர்ப்பைக்கொண்ட ஆட்சி கவிழ்ந்தால், அது சீனாவுக்குப் பாதகமாக அமையும் என்பதால், வடகொரியாவை அவ்வளவு எளிதில் கைவிடவும் சீனா தயாரில்லை.

## இரண்டு கொரிய அரசுகளோடு அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய ஆறு நாடுகளின் பேச்சுகளை நடத்த வேண்டுமென்று சீனா முன்வைத்த ஆலோசனை

ஒரே தேசிய இனத்தவரைக் கொண்ட இரண்டு கொரியாக்களும் ஒரே நாடாக ஐக்கியப்படவும், கொரிய தீபகற்பத்தில் அமைதியும் சமாதானமும் நீடிக்கச் செய் யவும் இரண்டு கொரிய அரசுகளோடு அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய ஆறு நாடுகளின் பேச்சுகளை நடத்த வேண்டுமென்று சீனா முன் வைத்த ஆலோசனையின்படி 2003ஆம் ஆண்டில் ஆறு நாடுகளின் பேச்சுகள் நடந்தன; பின்பும் தொடர்ந்தன. வட கொரியா தனது அணுஆயுதத் திட்டத் தைக் கைவிடுவதெனவும், இதற்கு ஈடாக பொருளாதாரத் தடைகளை நீக்கி வடகொரியாவுக்கு எரிபொருள் உதவிய ளிப்பது எனவும் முடிவாகி, அனைத்துலக அணுசக்தி முகமையின் மூலம் வட கொரியாவின் அணுசக்தித் திட்டங்க ளைச்சோதனையிட்டு கண்காணிப்பதும் நடந்தது. இருப்பினும், அப்போதைய அமெரிக்க அதிபர் புஷ் மற்றும் வெளி யுறவுச் செயலரான கண்டலீசா ரைஸ் ஆகியோரின் அடாவடிகளால் இப்பேச்சு களை வடகொரியா முறித்துக் கொண் டது. அதன் பிறகு அமைதி, சமாதானம் என்ற பசப்பல்களுடன் அதிபர் ஒபாமா ஆட்சிக்கு வந்தபோதிலும், ஆறுநாடு களின் பேச்சுகளை நடத்துவதற்கு அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக, ஏவுகணைத் தாக்குதல், கூட்டுப் போர் பயிற்சிகளை நடத்திக் கொண்டு வடகொரியாவைமேலும்ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் தான் ஈடுபட்டு வந்தார்.

(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




145

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### பிரபாகரனுடனான வன்னிச் சந்திப்பு

ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி, விடார் ஹெல்கிசன் தலைமையில், எரிக் சொல்ஹெய்ம், ஜோன் வெஸ்ட்போர்க், சிறிமதி ஜெர்ஸ்ரி ரோம்ஸ்டல் ஆகியோர் கொண்ட நோர்வே பிரதிநிதிகள் குழு, கிளிநொச்சியிலிருக்கும் புலிகளின் அரசியற்றுறை நடுவப் பணியகத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தது. நானும், தமிழ்ச்செல்வனும், அடேலும், தலைவருக்கு உதவியாக அந்தச்சந்திப்பில் கலந்து கொண்டோம். பேச்சுகளை நிகழ்த்துவதற்குத் தனது நாட்டில் இடமளிக்கத் தாய்லாந்து அரசு தயாராய் உள்ளது என்ற தகவலை ஹெல்கிசன் தெரிவித்தார். இருந்தபோதும், புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்படாதவரை, நேரடிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கும் புலிகள் இயக்கம் இணங்காது என்பதைத் தலைவர் பிரபாகரன் உறுதிபடத் தெரிவித்தார். அத்துடன், போர் நிறுத்த உடன்படிக்கையிலுள்ளகட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதில் அரசு காட்டிவரும் தாமதம் தொடர்பான தமது ஏமாற்றத்தையும் அவர் வெளிப்படுத்தினார். மீன் பிடிப்பதற்குக் கடலில் இடப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்குதல், ஆயுதம் தரிக்காத புலிகளின் அரசியற் போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்கின்றமையை அனுமதித்தல், பொதுக் கட்டடங்களிலிருந்து அரசுத் துருப்புக்களை மீளப்பெறுதல் போன்றவை அரசால் முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை என்பதைப் புலிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இந்த விவகாரத்தை, தான் அரசுத் தரப்பினரின் கவனத்துக்கு எடுத்துச் செல்கிறார் எனக் ஹெல்கிசன் உறுதியளித்தார்.

கொழும்பு திரும்பிய பின்னர், மறுநாள், ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்த நோர்வே பிரதிநிதிகள், புலிகளின் தலைவருடன் தாம் கலந்தாராய்ந்த விடயங்கள் பற்றிய விவரங்களைத் தெரிவித்தனர். அத்தோடு, தாய்லாந்தில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாகப் புலிகள் இயக்கம் மீதான அரசின் தடை நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர். ஆனால், சந்திரிகா அம்மையாரோ, தடை நீக்கம் தொடர்பான விவகாரத்தில் கடும்போக்கைக் கடைப்பிடித்தார். அத்துடன், சமரசப் பேச்சுகளுக்குக் காலவரம்பு ஒன்றை நிர்ணயித்தாக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். ஆனால், அந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமைந்ததாகப் பின்னர் செய்தி வெளியிட்ட அரச ஊடகங்கள் தெரிவித்தன. சமரச வழிகள் மூலம் இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வைக் காணும் முயற்சிகளுக்குத் தனது ஒத்துழைப்பு எப்போதுமே இருக்குமென நோர்வேத் தூதுவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா வாக்குறுதி அளித்திருப்பதாக அறிவித்தன.

இத்தகைய ஓர் அரசியல் சூழ்நிலையில், சமரசப் பேச்சுகள் விரைவில் ஆரம்பிக்க உள்ளன என்ற திடமான நம்பிக்கையுடன் ஹெல்கிசனும், சொல்ஹெய்மும் ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுவிட, ஒரு வாரத்துக்குப் பின்னர், அடேலும், நானும் வன்னியிலிருந்து லண்டனுக்குப் புறப்படுவதற்குத் தயாரானோம். பிரபாகரனுடனான எனது அரசியல் கலந்தாய்வுகள் எல்லாம் நல்லபடியாக நிறைவாகிவிட்டிருந்தன. இப்போது, போர் நிறுத்த நெறிமுறைகளைச் செம்மையாக நிறைவேற்றி, புலிகள் இயக்கத்தின் மீதான தடையையும் நீக்கிச் சமரசப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு உகந்த புறச்சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசின் கைகளிலேயே இருந்தது.

அன்று காலை, ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி, எங்களை வழியனுப்பி வைப்பதற்காக பிரபாகரன் எங்கள் இடத்துக்கு வந்தார். அவரது முகத்தில் கலவரம் தென்பட்டது. அவர் அமைதி இழந்தவராகக் காணப்பட்டார். நான் கேள்விக்குறியோடு அவரை நோக்கினேன். சிறிலங்காக் கடற்படையினருக்கும், கடற்புலிகளின் அணி ஒன்றுக்குமிடையில், மோதல் ஏற்படக்கூடிய விபரீத சம்பவம் ஒன்று கடலில் உருவாகி இருப்பதாக அவர் தகவல் தந்தார். அப்படி ஏதாவது நடந்து, நிலைமை மோசமடைந்தால், சமாதான முயற்சிகள் பாதிப்படையலாம் என நாங்கள் கவலைப்பட ஆரம்பித்தோம். எது எப்படியிருந்தாலும், அந்தச் சூழ்நிலையில் என்னால் செய்யக்கூடியது பெரிதாக ஒன்றுமே இருக்கவில்லை. நிலைமையைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் பிரபாகரன் வைத்திருந்தமையால், தவறாக ஏதும் நேர்ந்து விடாது என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

எங்களை வழியனுப்பி வைப்பதற்காக இரணைமடுக் குளக்கரையில் எல்லோரும் கூடியிருந்தனர். சிறிமதி ஜெர்ஸ்ரி ரோம்ஸ்டலும் எங்களை அழைத்துச் செல்வதற்காக அங்கு காத்திருந்தார். நான்கு வாரங்களுக்கு முன்னர் எங்களை வரவேற்கும் போது குடிகொண்டிருந்த உவகைக்குப் பதிலாக, இப்போது அங்கு துயரமே கவிந்திருந்தது. எங்களது நண்பர்களும், போராளிகளும் தமக்குள் மெதுவாக அளவளாவிக் கொண்டிருந்தனர். 'நாளை என்ன நடக்கும்' என்பதும் நிச்சயமற்றதாகவே இருந்தது.

திருகோணமலைக் கடலில் பெரிய முறுகல் நிலை தோன்றியிருந்த அந்த நேரத்தில், முன்னாலேயே மையம் கொண்டிருந்த புயலைப் பற்றி எதுவுமே அறியாதவர்களாக - மன்னார் கடற்திசையால் பறந்து வந்த கனேடிய விமானிகள், சரியான நேரத்துக்கு இரணைமடுக் குளத்தில் விமானத்தை இறக்கினர்.

கரைக்கு வந்த விமானிகள், உரிய நேரத்தில் மாலைதீவைச் சென்றடைந்துவிட வேண்டும் என்பதால், நாம் முடிந்தளவு விரைவாக அங்கிருந்து புறப்பட்டாக வேண்டும் என்று யோசனை தெரிவித்தனர். அவர்களுடைய விருப்பத்துக்கும், ஆலோசனைக்கும் அமைவாக உடனடியாகவே மிதவைப் படகுகளில் ஏறி, விமானத்தை அடைந்து, நாம் அங்கிருந்து புறப்பட்டோம். நாம் பயணித்த விமானம் எந்த வான்பாதையால் செல்லவிருக்கிறது என்பது பற்றி எமக்கு எதுவுமே தெரியாது. விமானம் வானத்தில் எழுந்த பின்னரே, பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு தாங்கள் கிழக்கு நோக்கி, திருகோணமலைக் கடலுக்கு மேலாகப் பறந்து இலங்கையின் தென்முனையைச் சுற்றிக் கொண்டு மாலைதீவை அடைய இருக்கின்றோம் என்றும் அதன் காரணமாகவே இந்தப் பயணம் நீண்ட நேரம் பிடிக்கப் போவதாகவும் விமானிகள் எம்மிடம் கூறினர். இந்திய வான்படையின் கண்காணிப்புக்கு ஆளாகாது, இந்திய வான்வெளியைத் தவிர்த்து நீண்டதொரு சுற்றுப் பயணத்தில் விமானம் சென்று கொண்டிருந்தது. எதற்காக இப்படி ஒளிந்து ஓட வேண்டும் என நான் அந்தக் கனேடிய விமானியிடம் கேட்ட போது, "எமது போக்குவரத்தை இந்திய வான்படை அவதானிக்கிறது. ஏனென்று தெரியவில்லை." - என்று மட்டும் சொன்னார். இந்திய அச்சுறுத்தல் ஒருபுறமிருக்க, நாம் பறந்து சென்ற கிழக்குக் கடற்பரப்பில் இன்னொரு விபரீத சம்பவம் கட்டவிழ்ந்து கொண்டிருந்தது.



இரணைமடுவிலிருந்து எங்களைச் சுமந்து சென்ற கடல் விமானம் எத்தகைய ஆபத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருந்தோம் என்பது பற்றியோ, அல்லது கபடமற்ற நோக்கத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த அந்தப் பயணம் ஓர் இராணுவ விவகாரமாக மாறி, செய்தியூடகங்களில் ஒரு சர்ச்சைப் புயலாக வீசப் போகின்றது என்பது பற்றியோ எதுவும் அறியாதவர்களாக நாம் இருந்தோம்.

தரையைக் கடந்து நாங்கள் கடலுக்கு மேலாகப் பறக்கத் தொடங்கிய போது, கீழே படகுகளின் நடமாட்டங்களை அவதானித்தோம். அவை என்ன வகையான படகுகள் என்பது பற்றியோ, அல்லது அவை யாருக்குச் சொந்தமானவை என்பது பற்றியோ எமக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. உண்மையில் எந்தக் கடற் பகுதிக்கு மேலாக நாம் பறந்து கொண்டிருந்தோம் என்பதையும் அறியாதவர்களாகவே நாம் இருந்தோம். ஆனால், திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகே, கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டு, கொதிநிலையின் உச்சத்திலிருந்த கடற்பகுதிக்கு மேலாகவே நாங்கள் அப்போது பறந்திருக்கிறோம் என்பது பின்னர் தெரிய வந்தது. கடற்புலிகளின் படகுத் தொகுதி ஒன்றை நடுக்கடலிலே சுற்றி வளைத்திருந்த சிறிலங்கா கடற்படையின் போர்க் கலங்கள், அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய தமது தளபதிகளது உத்தரவுக்காக அப்போது காத்திருந்தனவாம். அந்த நேரத்தில் பறந்து வந்து கொண்டிருந்த எங்களது விமானம், அந்தப் பிரதேசத்தின் மேலாகத் தனது உயரத்தைத் திடீரெனக் குறைந்து நூறு அடிகள் உயரத்துக்குத் தாழ்ந்து, கடலிலே இறங்கிவிடப் போவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தியதாகப் பின்பு குற்றஞ்சாட்டப்பட்டது. சிறிலங்காவுக்குச் சென்று திரும்பிய எங்களது பயணங்கள் உச்ச இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டமையால், அந்தப் பிராந்தியத்தில் எமது விமானத்தின் பிரசன்னம் பற்றிச் சிறிலங்கா வான் படையினதோ, அல்லது கடற்படையினதோ உயர்பீடங்களுக்கு அறிவிக்கப்பட்டு இருக்கவில்லை.

கடற் சமர் வெடிக்கக்கூடிய ஒரு போர் நெருக்கடிச் சூழலில், ஓர் அந்நிய விமானம் கடற்படைக் கலங்களுக்கு மேலாகத் தாழப் பறந்து கடற்படையினருக்குப் பதற்றத்தைக் கொடுத்தது. இந்த அசாதாரண நிகழ்வை கடற்படை வான்படைக்கு அறிவித்தது. சிறிலங்காவின் வான்பரப்பினுள் அரவமற்று ஊடுருவிப் பறந்து கொண்டிருந்த அந்த 'அடையாளம்' தெரியாத விமானத்தைச் சுட்டு வீழ்த்துவதற்காக தமது ஜெட் போர் விமானங்களை உசார் நிலையில் வைத்துவிட்டு, பாதுகாப்பு அமைச்சிடம் வான்படை அதிகாரிகள் அறிவித்த போதுதான் உண்மை நிலை அவர்களுக்குத் தெரியவந்தது.

இலங்கை அரசின் அனுமதியுடனேயே அந்த விமானம் பாலசிங்கம் தம்பதிகளை ஏற்றிச் செல்கின்றது என்ற தகவல் தெரிந்ததும், போர் விமானங்களின் பறப்பை ரத்துச் செய்தது வான்படை. இந்த அபாயச் சூழல் பற்றி எதுவுமே அறியாதவர்களாக, அந்தச்சிறிய விமானத்தின் மூலைக்குள் முடங்கியிருந்து ஐந்து மணி நேர அலுவலப் பயணத்தில் நாம் சென்று கொண்டிருந்தோம்.

(தொடரும்...)

# பெண்களே! நாட்டு நடப்பை தெரிந்து கொள்ளுங்கள்...




எந்த நாட்டில் பெண்களிடையே மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுகிறதோ அந்த நாடு விரைவிலேயே முன்னேறும். அதற்கு பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். அதேசமயம் நாட்டு நடப்புகளைச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் பெண்கள் கல்வி கற்பது அதிகரித்துள்ளது சந்தோஷப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நமது நாட்டுப் பெண்மணிகள் நாட்டு நடப்புகளைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டாமல் இருப்பது கவலையளிக்கும் விடயமாகும் .

தொலைக்காட்சியில் காலை முதல் இரவு வரை ஒரு தொடர் நாடகத்தைக் கூட விடாமல் பார்க்கும் பெண்கள் தப்பித் தவறி கூட செய்திகளைப் பார்ப்பதேயில்லை. பத்து வீதப் பெண்கள் செய்திகளைப் பார்த்தாலே பெரிய விஷயம். தொடர்களைப் பார்த்துக் கொண்டே இருக்கும் பெண்கள் தொடர் முடிந்து செய்திகள் வந்தால் படாரென எழுந்து வீட்டு வேலைகளை கவனிக்க சென்றுவிடுகின்றனர். வீட்டில் வாங்கப்படும் செய்தித் தாள்களை எத்தனைப் பெண்கள் ஆர்வமுடன் படிக்கிறார்கள் என்றால் இல்லை என்றே தெரியவரும். அப்படியே ஓரிருவர் படித்தால் மங்கையர் சம்பந்தப்பட்ட நாவல்களாகத்தான் இருக்கும். நாட்டு நடப்புகளைப் பெண்கள் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப தங்கள் குழந்தைகளைத் தயார் படுத்துவதற்குப் ப்யனுள்ளதாக இருக்கும்.

எனவே பெண்களே! முடிந்தால் தொடர் நாடகங்கள் பார்ப்பதைக் குறைத்துக் கொண்டு செய்திகளைப் பாருங்கள். செய்தித் தாள்களை வாங்கிப் படியுங்கள். பொது அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள். நமக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது!



# புகைப்படம் எடுக்கப் போறீர்களா?

சிலர் பேரழகியாக இருப்பார்கள். ஆனால் புகைப்படத்தில் பார்த்தால் சுமாராகத் தெரிவார்கள். நேரில் சுமாராக இருப்பவர்கள், புகைப் படத்தில் அட்டகாசமாய் தெரிவார்கள்.

புகைப்படத்தில் அழகாகத் தெரிய நீங்கள் ஐஸ்வர்யா ராயாக இருக்க வேண்டும் 'என்ற அவசிய மில்லை. மனம்தான் முக்கியம். நிறைய நம்பிக்கை, தன்னம்பிக்கை, மனசெல்லாம் சந்தோஷம் இருந்தாலே போதும்.

வெளிச்சம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். வெயிலில் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா? அப்படியானால் வெயிலின் வெளிச்சம் உங்கள் முகத்தின் மேல் விழவேண்டும். அதுவே கண்களைக் கூசச் செய்கிற அளவுக்கு இருக்கக் கூடாது. ஜன்னலின் வழியே கசியும் மெலிதான சூரிய வெளிச்சத்தில் எடுக்கப்படும் படங்கள் இன்னும் அழகாக இருக்கும். வீட்டுக்குள் எடுக்கப்படும் போது மஞ்சள் நிற லைட் புகைப்படத்தின் அழகைக் கூட் டும்.

முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது அலங்காரம். அலங்காரம் தேவைதான் என்றாலும், அதிகப்படியாக போடக் கூடாது. கண்களுக்கான அலங்காரத்தைத் தவிர்க்காதீர்கள். கண்களுக்குப் போடப்படும் அலங்காரம் சட்டென புகைப் படத்தில் மற்றவர்களது கவனத்தைக் கவரும்.

நீங்கள் அணிகிற உடையும், அவற்றின் நிறங்களும் கூட புகைப் படம் அழகாக அமையக் காரணம் ஆகும். உதாரணத்துக்கு சிவப்பு நிறம் உங்கள் முகத்தை அழகாகக் காட்டும். கறுப்பு வெளிச்சத்தை உள்வாங்கிக் கொண்டு, உங்கள் முகத்தைக் கறுப்பாகக் காட்டும். எனவே சரியான நிறத்தில் உடையணிவதும் முக்கியம்.

என்னதான் முக அலங்காரம், தலை அலங்காரம், உடை அலங்காரம் என அசத்தினாலும், உங்கள் மனம் சந்தோஷமாக இல்லாவிட்டால் அது புகைப்படத்தில் தெரிந்துவிடும். எனவே மனசுக்குள் என்ன சங்கடம் இருந்தாலும், புகைப்படம் எடுக்கிற அந்தச் சில நிமிடங்களுக்காவது எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். அது உங்களின் உண்மையான அழகை வெளிப்படுத்தும்.

**புகைப்படத்தில் அழகாகத் தெரிய நீங்கள் ஐஸ்வர்யா ராயாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மனசெல்லாம் சந்தோஷம் இருந் தாலே போதும்.**



ஊதுகுழலைக் கையில்
எடுக்கும் பெண்கள்
எழுதுகோலைக்
கையில் எடுக்க வேண்டும்
ஓடு தயாரிக்கும் பெண்கள்
கையில் இனி
ஏடுமட்டுமேஇருக்கவேண்டும்
சிந்திக்கும் மூளை
அவளுக்கும் உண்டு
நிந்திக்க வேண்டாம் அவள்
திறமையை...

## பெண் கல்வி

# உங்களைப் பற்றி உங்கள் உதடு என்ன சொல்கிறது?

பெண்களின் குணங்களை அவர்களது உதடுகளைக் கொண்டே சொல்ல முடியும் என்பது தெரியுமா? இது சீனாவில் நடைமுறையில் உள்ளது. அறிவியலில் உதடுகளைக் கொண்டு ஒருவரின் குணங்களைக் கூறுவதற்கு லிப்ஸோலாஜி என்று பெயர். லிப்ஸோலாஜியின் படி, உதடுகளின் வடிவம், அளவு கொண்டு ஒருவரின் குணநலன்கள் கூறப்படுகிறது.

### பருத்த உதடுகள்

பருத்த உதடுகளைக் கொண்டவர்கள் மிகவும் தைரியமானவர்கள் மற்றும் துணிச்சலானவர்கள். மற்றவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து கவனிப்பார்கள். தாராள மனம் படைத்தவர்கள் மற்றும் எளிதாக பல நல்ல நண்பர்களைப் பெறுவார்கள்.

### பரந்த உதடுகள்

சிலருக்கு வாய் மிகவும் பெரிதாக இருக்கும். இத்தகையவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். எதையும் பரிபூரணமாகச் செய்ய முயல்வார்கள் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் ஆர்வம் காண்பிப்பார்கள். இந்த வகையினர் வளைந்து கொடுக்கும் தன்மையினர் மற்றும் இவர்களுக்கு மிகப்பெரிய நண்பர் கூட்டம் இருக்கும்.

### மெல்லிய உதடுகள்

சிலருக்கு உதடுகள் இருப்பதே தெரியாது. அந்த அளவில் மெல்லிய உதடுகளைக் கொண்டிருப்பார்கள். இத்தகைய பெண்கள் வெளிப்படையாக பேசமாட்டார்கள், தனிமையை விரும்புவார்கள், வாழ்க்கையில் தனது இலக்குகளை அடை வதில் உறுதியாக இருப்பார்கள். மேலும் எதிலும் எப்போதும் உஷாராக இருப்பார்கள். மெல்லிய உதடுகளைக் கொண்ட பெண் கள் யாரையும் சார்ந்து இருக்கமாட்டார்கள்.

### வட்டமான உதடுகள்


வட்டமான உதடுகளைக் கொண்டவர்கள் மிகவும் அழகான இதயத்தைப் படைத்தவர்கள் மற்றும் துணிச்சலானவர்கள். மேலும் இத்தகையவர்கள் மிகவும் தன்னம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் இவர்கள் தன் வாழ்வில் நடந்த கடந்த கால கெட்ட சம்பவங்களை மனதில் நினைத்துக் குழப்பிக் கொண்டு இருக்காமல், வாழ்வில் முன்னேற நினைப்பார்கள். சொல்லப்போனால் இவர்களுக்கு நேர்மறை எண்ணங்கள் அதிகம்.

### கீழ் உதடு பருத்து

இந்த வகையினர் சிறந்த செயற்திறனாளர் மற்றும் இவர்களது திறமை யால் மிகவும் பிரபலமாகவும் இருப்பார்கள். மேலும் இவர்கள் எந்த ஓர் இடத்திலும் 'அனைவரையும் கவரும் வண்ணம் இருக்க விரும்புவார்கள்.

### சமச்சீரான உதடுகள்

சமச்சீரான உதடுகள் என்பது உதடுகள் பெரியதாகவும் இல்லாமல், சிறியதாகவும் இல்லாமல், சரியான வடிவத்தில் அழகாக இருப்பதைக் குறிக்கும். இந்த மாதிரியான உதடுகளைக் கொண்டவர்களைக் காண்பது அரிது. இவர்கள் மற்றவர்களுடன் அவ் வளவு எளிதில் பழகமாட்டார்கள்.



## கட்டணம் செலுத்த முடியாததால்

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர் தடுத்து வைப்பு



பெருந்தொகைப் பணத்தைக் கட்டணமாகச் செலுத்த முடியாததால், உரிய அனுமதியைப் பெறாமலேயே எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய ஒருவரை நேபாள அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

ரயான் சீன் டேவி என்பவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர். மலையேறுவதில் அவருக்கு ஆர்வம் இருக்கின்ற போதிலும் அதற்கான பயிற்சிகள் எதையும் அவர் பெற்றிருக்கவில்லை.

இந்த நிலையில், உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட்டில் ஏறிச் சாதனை படைக்க விரும்பினார். இதற்காக நேபாளம் சென்ற அவர், மலையேறுவதற்கான கட்டணமான 11 ஆயிரம் டொலர்களைச் செலுத்த முடியாததால் அதிகாரிகள் கண்களில் மண்ணைத் தூவி விட்டு மலையேற ஆரம்பித்து விட்டார்.

சுமார் இருபதாயிரம் அடி உயரம் வரை ஏறிய இவர், அதிகாரிகளிடம் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காக, மலையின் ஒதுக்குப் புறமாக உள்ள ஒரு குகையில் தங்கியிருந்தார்.

*ரயானுக்கு பதினேழாயிரம் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த பத்து வருடங்களுக்கு எவ ரெஸ்ட்டில் ஏறுவதற்கு அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது*

எனினும், அவரது நடமாட்டத்தைக் கண்டு பிடித்த அதிகாரிகள், அவர் தங்கியிருந்த குகைக்குச் சென்று அவரை மடக்கிப் பிடித்தனர். மேலும், அவரது கடவுச் சீட்டையும் பறிமுதல் செய்துள்ளனர்.

தற்போது ரயானுக்கு பதினேழாயிரம் டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த பத்து வருடங்களுக்கு எவரெஸ்ட்டில் ஏறுவதற்கு அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது.

# 30 வருடங்களுக்கு முன் மறைந்த கடற்கரை மீண்டும் தெரியும் அபூர்வம்


முப்பது வருடங்களுக்கு முன் கடலால் கபளீகரம் செய்யப்பட்ட கடற்கரை ஒன்று மீண்டும் வெளித் தெரிய ஆரம்பித்துள்ளது.


அயர்லாந்தின் 'அச்சில்' தீவுகளுக்குச் சொந்தமான இந்தக் கடற்கரை 300 மீற்றர் நீளமுள்ளது. இங்கே நான்கு ஹோட்டல்களும் பல விருந்தினர் விடுதிகளும் இருந்தன. இந்தக் கடற்கரையை நம்பி சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

1987 ஆம் ஆண்டு இந்தத்தீவுப் பகுதியில் வீசிய கடும் புயலால், இந்தக் கடற்கரையில் இருந்த மண் முழுவதுமாக கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டது. மண் முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டதால், அதன் கீழே இருந்த சிறியதும் பெரியதுமான கருங்கற்பாறைகள் மட்டுமே எஞ்சின.

இந்தநிலையில், கடந்த மாதத்தின் அனேக நாள்கள் அந்தப் பகுதியில் பேரலைகள் வீசின. இதனால் மண் மீண்டும் கரையில் சேர்ந்தது. இதனால், மீண்டும் அந்தப்பகுதி கடற்கரையாகக் காட்சி தருகிறது.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு தமது கடற்கரை கிடைத்தது குறித்து அப்பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.





# வீட்டில் தெய்வ சக்தியை அதிகரிக்க சில வழிகள்!



வீட்டில் தெய்வசக்தி அதிகம் இருந்தால் கெட்டது விலகும், நல்லது விளையும், யாருடைய கண்சிருஷ்டியும், பில்லிசூனியமும், எம்மை ஒன்றும் செய்யாது.

வீட்டில் சில செயல்களைச் செய்தால் தெய்வ சக்தி விலகிவிடும், சில செயல்கள் செய்தால் தெய்வ சக்தி கூடும் என்று சில கூற்றுக்கள் கூறுகின்றன. அவற்றில் தெய்வ சக்தியை அதிகரிக்கும் செயல்களைப் பற்றி இங்கே காணலாம்

**ஏன் தெய்வ சக்தி நுழைய வேண்டும்?**

ஒரு வீட்டில் தெய்வ சக்தி அதிகம் இருந்தால், அந்த வீட்டில் நல்லவை அதிகம் நடக்கும், வீட்டில் இருக்கும் நபர்களை எந்த ஒரு கெட்ட சக்தியும் அணுகாது. வீட்டில் செல்வமும், வெற்றியும் அதிகரிக்கும்.

**பறவைகள்!**

வீட்டில் அணில், சிட்டுக் குருவி, புறா, போன்ற பறவை, விலங் குகள் இருந்தால் தெய்வ சக்தி அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. இந்த உயிரினங்களுக்கு தெய்வ சக்தியை அறியும் ஆற்றல் உள்ளது என்று அறியப்படுகிறது.

**ஜீவசக்தி!**

நீங்கள் புதிதாகக் குடி போகும் வாடகை வீடு அல்லது சொந்த வீட்டுக்கு தெய்வ சக்தியைக் கொண்டு வர ஜீவசக்தி கொண்ட ஏதாவது ஒரு உயிரினத்தைக் கொண்டு செல்ல வேண்டும். மனிதர்களைக் காட்டிலும் பறவைகளிடம் இந்த ஜீவசக்தியானது அதிகமாக உள்ளது.

**நெற்கதிர்!**

உங்கள் வீட்டு வாசலில் நெற்கதிரை கட்டி தொங்க விடுவதால் குருவி, புறா போன்ற பறவைகள் அதை உண்பதற்காக வந்து செல்லும். இந்தச் சந்தர்ப்பத்தில் அவை அங்கேயே கூடு கட்டி வாழ்ந்து குஞ்சு பொரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன.

**கலைக்கக் கூடாது!**

புறா, குருவி போன்ற ஜீவ சக்தி கொண்ட ஜீவன் கள் கூடு கட்டினால் அதனைக் கலைக்கக் கூடாது. இவை தெய்வ சக்தி கொண்டு வரும் திறன் கொண்டவை என்பதால், அவற்றின் கூட்டைக் கலைப்பது, வீட்டுக்கு கெட்ட சகுனமாக அமையலாம்.

**விரட்டவும் வேண்டாம்!**

புறா, குருவி போன்ற பறவைகள் மற்றும் அணில் போன்ற உயிரினங்கள் உங்கள் வீட்டுக்கு வந்தால், அவற்றை விரட்ட வேண்டாம். இவை எமது வீட்டுக்கு வந்து போனாலே எமக்கு நன்மை நடக்கும்.



# பன்றிகளுக்கு நீரூட்டியதால் வந்த வினை!

இறைச்சிக்காக எடுத்துச் செல்லப்பட்ட பன்றிகளுக்கு நீரூட்டிய 'குற்றத்'துக்காக கைது செய்யப்பட்ட கனேடியப் பெண்ணை நிரபராதி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அனிதா கிராஞ்ஜ் ஒரு சமூகச் செயற்பாட்டாளர். 2015ஆம் ஆண்டு, றொரண்றோ புறநகர்ப் பகுதியில் ட்ரக் ஒன்றில் சுமார் 190 பன்றிகள் இறைச்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டன. வாகன நெரிசலில் அந்த ட்ரக் நின்ற போது, அனிதாவும் மேலும் சில ஆர்வலர்களும் போத்தல்கள் மூலம் பன்றிகளுக்கு நீரூட்டினர்.

இதை எதிர்த்த பன்றிகளின் உரிமையாளர், தனது சொத்துக்களை அனுமதியின்றிப் பயன்படுத்தியதாகக் கூறி அனிதா மீது வழக்குத் தொடர்ந்தார். கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் கடந்த வாரம் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதில், அனிதா செய்தது ஒரு மனிதாபிமானச் செயலே என்றும், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை உறுதி செய்வதற்கு போதிய விளக்கங்கள் வாதி தரப்பில் வழங்கப்படவில்லை என்றும் கூறி நீதிபதி அனிதாவை விடுவித்தார்.

தீர்ப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அனிதா, 'பன்றிகள் உள்ளிட்ட விலங்குகள் சொத்துக்களாகக் கருதப்படுவதைத் தடை செய்ய வேண்டும். உயிருள்ள அவற்றுக்கான அடிப்படை உரிமைகள் பெற்றுத் தரப்பட வேண்டும்' என்றும் கூறினார்.

**"அனைவரின் நலனுக்காக வழங்குவதிலிருந்து யாருமே ஒதுக்கப்படுவதில்லை**

'ஒவ்வோருவரும் சமுதாயத்திற்குக் கொடுப்பதற்கு ஏதாவது ஒன்றை வைத்துள்ளனர். அனைவரின் நலனுக்காக வழங்குவதிலிருந்து யாருமே ஒதுக்கப்படுவதில்லை' என ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் ஒன்பது மொழிகளில் செய்திகளை வெளியிட்டுவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான் 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

**ஹிரோசிமா நகருக்கு திருத்தூது பயணம் மேற்கொள்ள அழைப்பு**

இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டால் தாக்கப்பட்ட ஹிரோசிமா நகருக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொள்ள வேண்டுமென திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு புனித திருத்தந்தை 2 ஆம் ஜோன் போல் அவர்கள் ஜப்பானுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

# போர்த்துக்கல் பத்திமா அன்னை காட்சி தந்த நூற்றாண்டு விழா நேற்று ஆயர் தலைமையில்!

## பண்டத்தரிப்பு யாத்திரைத் தலத்தில்



போர்த்துக்கல் நாட்டு பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டுவிழா கொண்டாட்டம் யாழ் மறை மாவட்ட பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தலத்தில் 13 மே 2017 அன்று - நேற்று யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் காலை 7 மணிக்கு நடைபெற்றது என பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தல பரிபாலகர் மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு தெரிவித்தார்.

திருப்பலியின் பின்னர் போர்த்துக்கல் நாட்டில் இருந்து கென்றி ஜெலான் அ.ம.தி அடிகளாரால் அன்று கொண்டு வரப்பட்ட திருச்சொருபம் சரித்திரத்தில் முதற் தடவையாக பவனியாக எடுத்துவரப் பட்டது. அன்றைய தினம் பற்றிமா அன்னையின் பழைய ஆலயத்தோடு அமைந்துள்ள குருக்களின் இல்லம் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஜெலான் இல்லம் என்ற பெயரில்



திறந்து வைக்கப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது. அத்துடன் 11 அடி உயரமான பற்றிமா அன்னை 3 சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த காட்சியை சித்திரிக்கும் காட்சித் தோட்டமும் திறந்து வைக்கப்பட்டது என பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் யாத்திரைத்தல பரிபாலகர் மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் மேலும் தெரிவித்துள்ளார்.

## உண்மையின் எண்ணங்கள்

### அன்னையின் பாதுகாப்பில் யாழ் மறைமாவட்டம்; யாழ் ஆயருக்கு பிறந்த தின வாழ்த்துக்கள்

யாழ் மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மரியன்னையின் யாத்திரைத் தலமான பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் யாத்திரைத் தலப் பெருவிழா நேற்று 13ஆம் திகதியாகும். இது இவ்வாண்டு போர்த்துக்கல் நாட்டு பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டுவிழா என்பதால் சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது. தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் யாத்திரைத்தலப் பெருவிழாவில் கலந்து போர்த்துக்கல் நாட்டு பற்றிமா அன்னையின் காட்சிகளின் நூற்றாண்டுவிழா நிகழ்ச்சிகளுக்கு சிறப்புச் சேர்க்கிறார். மரி அன்னை வழி




இயேசுவிடம் என்ற விருதுவாக்குடன் யாழ் மறைமாவட்டத்தை வழிநடத்தும் யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்குப் பிறந்த தின வாழ்த்துக்களைத் தெரிவித்து யாழ் மறைமாவட்டத்தை அன்னையின் பாதுகாப்பில் சிறப்பாக வழிநடத்த இறை ஆசீர் வேண்டுவோம்.

## கொரிய தீபகற்பத்தில் தற்போது நிலவிவரும் போர்ச்சூழலில் அமைதிக்காக செபிக்க அழைப்பு

பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்த 100 ஆவது ஆண்டு சிறப்பிக்கப்படுவதையொட்டி 'பாத்திமா காட்சியின் நூறாவது ஆண்டையொட்டி செப திருப்பயணம்' என்ற தலைப்பில் தென் கொரியாவின் சோல் உயர் மறைமாவட்டத்தில் அமைதி மற்றும் நற்செய்திப் பணி ஆகியவற்றை மையப்படுத்தி தொடர் செப வழிபாடுகள் மே 13 முதல் ஒக்ரேபர்13 வரை திட்டமிடப்பட்டுள்ளது. கொரிய தீபகற்பத்தில் தற்போது நிலவிவரும் போர்ச் சூழலையும், அமைதிக்காக செபிக்கும்படி பாத்திமா அன்னை இவ்வுலகிற்கு விடுத்த அழைப்பையும் மனதில் கொண்டு இந்த முயற்சியை மேற்கொள்ளுமாறு, இவ்வுயர் மறைமாவட்டம் அழைப்பு விடுத்துள்ளது.

## மறையுரைகள் எளிமையானவையாக அமைய வேண்டும் என்கிறார் திருத்தந்தை

எத்தகைய துன்பத்திலும் இயேசுவுக்குப் பணியாற்றுவதில் மகிழ்ச்சியைக் காண்போம். இரட்டை வாழ்க்கை என்பது ஒரு மிகப் பெரிய கொடிய நோயாகும். குருத்துவம் என்பது ஒரு வேலை அல்ல; மாறாக அது ஒரு பணியாகும். இறைவார்த்தையை வாசித்து தியானிக்கும் ஒவ்வொரு அருள்பணியாளரும் தான் வாசித்தவற்றை நம்பவும் விசுவாசம் வழியாகதான் கற்றவற்றை, பிறருக்கு கற்பிக்கவும் தான் கற்பித்தவற்றை வாழ்ந்து காட்டவும் முன்வரவேண்டும் அருள்பணியாளர் வழங்கும் மறையுரைகள் கல்வியறிவில் மேம்பட்டவையாகவோ விளக்கம் நிறைந்தவையாகவோ இருக்கத் தேவையில்லை. அவை எளிமையாக இருக்கவேண்டும் என்பதே முக்கியம் என திருத்தந்தை பிரான்சிஸ் உரோம் நகரில்



நடத்திய குருத்துவ அருள்பொழிவு திருப்பலியில் தெரிவித்தார்.

## ஆசியாவின் தலைசிறந்த மறைபரப்பாளர் புனித யோசேவாஸ் குறித்துப் திரைப்படம்



புனித யோசேவாஸ் ஆண்டில் தமிழ்த் திரைப்படம் ஒன்று வெளிவந்துள்ளது என்பது ஒரு மகிழ்வான செய்தியாகும். எஸ். நிர்மல் என்ற பிரபல சிங்கள படத்தயாரிப்பாளரால் புனித யோசேவாஸ் அடிகளாரின் வாழ்வையும் பணியையும் சித்திரிக்கும் இத்திரைப் படம் சிங்கள மொழியில் 2009 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. பின்னர் 2017ஆம் ஆண்டில் இத்திரைப்படம் தமிழ் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். புனித யோசேவாஸ் ஆண்டில் இந்த புனித யோசேவாஸ் தமிழ்த் திரைப்படத்தை பார்த்து யோசேவாஸ் அடிகளாரின் வாழ்வையும் பணியையும் இன்னும் அதிகமாக அறிந்து கொள்வோம்.

## பாத்திமா அன்னை காட்சி கண்ட இருவர் புனிதர்களாக் அறிவிப்பு

பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்ததன் 100 ஆவது ஆண்டைச் சிறப்பிக்க மே மாதம் 12 - 13 ஆம் திகதிகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பாத்திமா அன்னை திருத்தலத்திற்குச் செல்லவிருக்கும் வேளையில் பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்ததைக் கண்ணுற்ற மூவரில் அருளாளர்களான பிரான்செஸ்கோ மார்த்தோ மற்றும் அவரது தங்கை ஜெசிந்தா மார்த்தோ ஆகிய இருவரின் பரிந்துரைகளால் நிகழ்ந்துள்ள புதுமைகளை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்விருவரையும் புனிதர்களாக உயர்த்தும் வழிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

# இலங்கையில் பாரதி


26

● முருகபூபதி - ஆஸ்திரேலியா

பாரதி, தமது வாழ்நாளில் கவிதை, கட்டுரை, விமர்சனம் மற்றும் இதழியல், ஊடகத் துறையிலும்தான் தீவிரமாக ஈடுபட்டவர். அவரது வாழ்க்கைச் சரிதையை அவரது மறைவிற்குப் பின்னர் வெளியான நூல்களிலிருந்தும், வெளியான திரைப்படங்கள், நாடகங்கள் முதலானவற்றிலிருந்தும் தெரிந்துகொண்டோம்.

இலங்கையில் எங்காவது பாடசாலைகளில் அல்லது சனசமூக நிலையங்களில் விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள் நடைபெறும் வேளைகளில் விநோத உடைப் போட்டிகளில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் பங்குபற்றி ரசிகர்களை பரவசப்படுத்துவார்கள்.

பாரதி வேடமிட்டு மக்களிடம் வலம் வருபவர்களிடம் பாரதிக்கே உரித்தான கம்பீரத்தைத்தான் நடுவர்கள் எதிர்பார்த்து புள்ளிகளும் தருவார்கள். பாரதி வேடமிட்டு, குழந்தைகள் நிகழ்ச்சிகளில் தோன்றும்போது பாரதியின் வீர வசனங்களை அல்லது பாடல்களைப் பாடுவார்கள்.


அந்தனிஜீவா

இலங்கையில் அன்றும் இன்றும் நடந்தேறும் இக்காட்சிகள்தான் தமிழர் புகலிட நாடுகளிலும் தொடருகின்றது.

தமிழ்த் திரைப்படங்கள் பலவற்றிலும் பாரதியின் பாடல்கள் இடம்பெற்றிருக்கும் அதே சமயம், பாரதியாகவே பலர் தோன்றி நடித்து அசத்தியுமிருக்கிறார்கள்.

கப்பலோட்டிய தமிழன் படத்தில் நடிகர் எஸ்.வி. சுப்பையா பாரதியாகவே நடித்தார். இருகோடுகள் படத்தில் ஒரு நாடகத்தில் பாரதி வேடமிட்டு நடிகர் நாகேஷ் களைகட்டினார். கைகொடுத்த தெய்வம் என்ற படத்தில் 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' பாடலுக்கு சிவாஜிகணேசன் பாரதி தோற்றத்தில் கம்பீரம் காண்பித்தார்.

இயக்குநர் கே. பாலச்சந்தர், நடிகர் கமல்ஹாசனை வைத்து பாரதி என்ற படத்தை தயாரிக்க முன்னேற்பாடுகள் செய்துவிட்டு, பின்னர் கைவிட்டார்.

எனினும் ராஜ ஞானசேகரன், பாரதி என்ற படத்தையே வெளியிட்டு சாதனை புரிந்தார். அதில் கன்னட நடிகர் சயாஜி ஷிண்டே பாரதியாகத் தோன்றினார்.

இந்தத்தகவல்களின் பின்னணியில் இலங்கையில் பாரதி நூற்றாண்டு காலத்தில் மேடையேற்றப்பட்ட **மகாகவி பாரதி** நாடகத்தையும் 'அதே காலப்பகுதியில் தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த எழுத்தாளரும் கலைஞருமான சிலோன் விஜயேந்திரன் எனபவர் **பாரதி வரலாற்று நாடகம்** என்ற நூலையும் வெளியிட்டிருந்தார்.

யார் இந்த சிலோன் விஜயேந்திரன்....?

இலங்கையில் ஆசுகவி எனப்போற்றப்பட்ட **கல்லடி வேலன்** அவர்களின் பேரனான இவர், யாழ்ப்பாணத்தில் 1946 இல் பிறந்து பின்னாளில் தமிழ்நாட்டில் வாழ்ந்து' 2004 ஆம் ஆண்டு திருவல்லிக்கேணியில் இடம்பெற்ற ஒரு தீவிபத்தில் சிக்கி பரிதாபகரமாக இறந்தார்.


பல நூல்களை வரவாக்கியிருக்கும் விஜயேந்திரன் பைலட் பிரேம்நாத், பொல்லாதவன், புன்னகை மன்னன் முதலான படங்கள் உட்பட எழுபதிற்கும் மேற்பட்ட திரைப் படங்களில் துணைநடிகராகவும் தோன்றியிருப்பவர்.

ஆசுகவி கல்லடி வேலன், கம்பதாசன் உட்பட பலரைப் பற்றியும் ஆய்வுநூல்கள் எழுதியிருக்கும் இவர், சிறுகதை, கவிதை, நாடகம் முதலான துறைகளிலும் சுமார் 30 நூல்கள் எழுதியிருக்கிறார்.

இலங்கையில் தனிநபர் நடிப்பில் பிரபல்யம் பெற்றிருந்த இவர், தமது இறுதிக்காலத்தை சென்னையிலேயே கடந்தார். ராஜீவ் காந்தி கொலைச் சம்பவத்தினால் இவரையும் புலானாய்வுப் பிரிவு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து ஒரு வருடத்திற்கும் மேல் தடுத்துவைத்து விசாரித்துவிட்டு விடுதலை செய்தது.

இவருடைய பல நூல்களை தமிழ்நாடு அல்லயன்ஸ் மற்றும் காந்தளகம் முதலான பதிப்பகங்கள் வெளியிட்டன.

ஈழவாணன், ஈழத்துச் சோமு, ஈழவாணி, ஈழவேந்தன், ஈழகணேஷ் முதலான புனைபெயர்களில் பலரும் அறியப்பட்டிருக்கிறார்கள். விஜயேந்திரன்தம்மை சிலோன் விஜயேந்திரன் என்றே அறிமுகப்படுத்திக்கொண்டு, எழுத்துலகிலும் நாடகம் மற்றும் தமிழ்த்திரையுலகிலும் நடமாடியவர்.



மகாகவி பாரதியின் வாழ்வில் இடம்பெற்ற பல முக்கிய நிகழ்வுகளின் பின்னணியில் இவர் எழுதிய ( ஜூன் 1982) நூல் **பாரதி வரலாற்று நாடகம்.** இதற்கு பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு. சி. ரகுநாதன் முன்னுரையும், சிலம்புச்செல்வர் ம.பொ.சி அணிந்துரையும் கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் மதிப்புரையும் வழங்கியிருக்கிறார்கள்.

*''பாரதியின் இந்த முதல் நூற்றாண்டு விழாவின்போது அந்தப்பாவலனுக்குப் புகழாரம் சூட்டும் முயற்சியாகப் பற்பல எழுத்துப் படையல்களும் வெளிவருவது இயற்கை என்றாலும் இந்தப்புகழாரங்களில் மகிழமும் மல்லிகையும் மட்டுமல்லாது, சமயங்களில் எருக்கம் பூக்கள் சிலவும் இடம்பெற்றுவிடுகின்றன என்பதும் ஒரு கசப்பான உண்மை.*

*பாரதிக்கு மகுடம் சூட்டுவதாக எண்ணிக்கொண்டு அவன் தலையில் மண் சட்டியைக் கவிழ்க்கும் பொய்யும் புனைசுருட்டுமான 'தகவல்' களும் தவறான மதிப்பீடுகளும் 'புகழாரம்' என்ற பெயரில் புகுந்துவிடுகின்றன என்பது கண்கூடு.*

*இத்தகைய சூழ்நிலையில், பாரதியைப்பற்றி வெளிவந்துள்ள வரலாற்று நூல்கள், மற்றும் குறிப்புகள் ஆகியவற்றிலிருந்து உண்மைகளை கூடியவரையில் நன்கு சலித்தெடுத்துப் பதரையும் நீக்கி, பாரதியின் வரலாற்றை எளிமையும் இனிமையும் மிக்க நடையில் சுவையான நாடகமாக்கித்தர முயன்றிருக்கிறார் இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஈழத்தமிழர் இளைஞர் விஜயேந்திரன்'' என்று தமது முன்னுரையில்* குறிப்பிட்டுள்ளார் தொ.மு. சி.ரகுநாதன்.

இந்தத்தகவல்கள் ஒரு புறமிருக்க, இலங்கையிலும் அதே நூற்றாண்டு காலத்தில் கொழும்பில் மேடையேறிய கொழும்பு நாடக வட்டம் என்ற அமைப்பு தயாரித்த **மகாகவி பாரதி** நாடகத்தையும் பார்ப்போம்.

அந்தனி ஜீவா, இலங்கையில் பிரபலமான எழுத்தாளர், கலைஞர். **கொழுந்து** என்ற இலக்கிய இதழையும் நடத்தியவர். சுவாமி விபுலாநந்தர், அ.ந.கந்தசாமி, நடேசய்யர், சி. வி வேலுப்பிள்ளை, இந்திராகாந்தி பற்றியெல்லாம் நூல்களை எழுதியிருக்கும் இவரது **அக்கினிப்பூக்கள்** என்ற நாடகம் பல தடவைகள் மேடையேறியிருக்கின்றன.

அந்தனி ஜீவா 1982 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு டவர் மண்டபத்தில் மேடையேற்றிய நாடகம்தான் **மகாகவி பாரதி.**

இந்த நாடகம் பின்னர் கொழும்பில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய நூற்றாண்டு விழாவின்போது பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் அரங்கேறியது.

இதனைப்பார்த்து ரசித்த தொ.மு.சி. ரகுநாதன் மேடையேறி நடித்த கலைஞர்களையும் எழுதிய இளங்கீரனையும் பாராட்டினார். ஆனால், அதனை இயக்கியவர் அந்தனி ஜீவாதான் என்ற தகவல் அவருக்குத் தரப்படவில்லை.

முதல் மேடையேற்றத்தின் பொழுது அதனை எழுதிய இளங்கீரனுக்கும் இயக்கிய அந்தனிஜீவாவுக்கும் இடையே இருந்த நட்புறவு இரண்டாவது தடவை அதே நாடகம் தமிழகப்பேச்சாளர்களின் முன்னிலையில் மேடையேறியபோது நீடித்திருக்கவில்லை.

எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கே உரித்தான இயல்புகள் அங்கும் வெளிப்பட்டிருந்ததையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

பாரதியின் வாழ்வில் அவரது புதுச்சேரி புகலிடம் மிகவும் முக்கியத்துவமானது. சென்னையில் பிரிட்டிஷாரின் அடக்குமுறை தலைதூக்கியதனால் தலைமறைவாக பாரதி பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்த புதுவைக்குக் குடும்பத்துடன் வந்துவிடுகிறார் என்பது வரலாறு. இங்குதான் அவரது பல அமரத்துவமான படைப்புகள் வெளியாகியிருக்கின்றன.

புதுவையில் பாரதியின் இடப்பெயர்வு வாழ்க்கை குறித்து செல்லம்மா பாரதி, வ.ரா, யதுகிரி அம்மாள், பாரதிதாசன் உட்பட பலரும் எழுதியிருக்கிறார்கள்.

புதுவை வாழ்க்கையை சித்திரித்து, அங்கு பாரதியுடன் நடமாடிய சீனிவாசச்சாரி, வண்டிக்காரன், நோயாளி, பத்தர், சுந்தரேசன், மளிகைக் கடைக்காரன், யதுகிரி, அம்மாக்கண்ணு, வக்கீல் ஆகியோருடன் செல்லம்மாவையும் சித்திரிக்கும் நாடகத்தையே இளங்கீரன் எழுதியிருந்தார்.

இந்நாடகம் பற்றி 1982 டிசம்பரில் கொழும்பு நாடக வட்டம் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:


சுபைர் இளங்கீரன்


**தமிழ்மொழிக்கும் கவிதைக்கும் புத்துயிரும் புதுப்பொலிவும் வலிவும் ஊட்டி வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும் மறுமலர்ச்சியைத்தோற்றுவித்த மகாகவி பாரதியாரின் நூற்றாண்டையொட்டி பல்வேறு கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றில் ஒன்றாக பிரபல எழுத்தாளரும் நாவலாசிரியரும் வானொலி நாடக ஆசிரியருமான இளங்கீரனின் இந்நாடகமும் அரங்கேறுகிறது.**

**மகாகவி பாரதியாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மையமாகக்கொண்ட இதுபோன்ற முழு நாடகம் எதுவும் நாம் அறிந்தவரையில் இதுவரையில் இந்தியாவிலும் மேடையேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனையும் கருத்திற்கொண்டு இக்கலையாக்கத்தை பாரதி அன்பர்களும் கலா ரசிகர்களும் நிச்சயம் வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம்.**

கொழும்பில் 1982 இல் **மகாகவி பாரதி** நாடகம் இளங்கீரனால் எழுதப்பட்டு டிசம்பர் 3 ஆம் திகதி முதல் மேடையேற்றம் காண்கிறது.

தமிழ் நாட்டில் அதே 1982 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் **பாரதி வரலாற்று நாடகம்** சிலோன் விஜயேந்திரனால் எழுதப்பட்டு நூலுருவில் வெளியாகியிருக்கிறது.

இந்தத் தகவல்களை பாரதி பக்தர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.



பாரதி திரைப்படம்

**இலங்கை வானொலியில்.....**


இலங்கையில் தொலைக்காட்சி அறிமுகமாவதற்கு முன்னர் இலங்கை வானொலி மிகவும் வலிமையான ஊடகமாகவே திகழ்ந்திருக்கிறது. இலங்கையில் மாத்திரமன்றி தமிழகத்திலும் இலங்கை வானொலிக்கு சிறந்த வரவேற்பிருந்தது.

அதன் தேசிய சேவை, வர்த்தக சேவை என்பன பல தரமான நிகழ்ச்சிகளையும் நாடகங்களையும், உரைச்சித்திரங்களையும் நேயர்களை கவரும் விதமாக ஒலிபரப்பி வந்திருக்கின்றன.

வானொலி அறிவிப்பாளர்களுக்கு நாடெங்கும் ரசிகர்கள் தோன்றினர். அவர்களின் குரல்வளத்தினால் மயங்கியவர்கள் நேரிலேயே வந்து பார்ப்பதற்காக வானொலி கலையகத்திற்கும் வந்திருக்கும் சுவாரஸ்யமான தகவல்களும் இருக்கின்றன.

இலங்கை வானொலி சம்பிரதாய பூர்வமாக பாரதி பிறந்த - மறைந்த தினங்கள் வரும் காலங்களில் பாரதியின் பாடல்களை ஒலிபரப்பியும் உரைச்சித்திரங்களைத் தொகுத்தும் வழங்கியிருந்தாலும், பாரதி நூற்றாண்டு காலத்தில் தினமும் காலையில் ஒரு பாரதி பாடலை குறிப்பிட்ட நூற்றாண்டு காலத்தில் ஒலிபரப்பியது.

(18.ஆம் பக்கம் பார்க்க)




# பொலித்தீன் – பிளாஸ்ரிக் பாவனையைக் குறைக்க என்ன செய்வோம்?

வாழ்வை இலகுவாக்க அறிமுகமாகிய பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனை, இன்று மனித வாழ்வின் இருப்பையே கேள்வியாக்கியுள்ளது. நகரின் அழகையும் சுற்றுச் சூழல் சுகாதாரத்தையும் பாதிக்கும் பொருளாக மாறியுள்ளது. இலகுவில் உக்கும் தன்மையற்ற காரணமாக, படிப்படியாகச் சூழலின் இயல்பைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாது, இதன் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாய நிலை இன்று மனித குலத்துக்கு எழுந்துள்ளது.


குளப்படுக்கைகளிலும், வெள்ள நீர் ஓடும் வடிகால்களிலும் சேரும் இந்தப் பிளாஸ்ரிக் பொருள்கள் மண்ணினுள் ஒருபடையாக உருப்பெறுவதால், வெள்ள நீர் புவியீர்ப்பின் காரணமாக மண்ணினுள் வடிந்து செல்ல முடியாத தன்மை ஏற்படுகிறது.

இதன் காரணமாக நிலத்தடி நீர் வளம் குறைவதாகவும், வடிந்து செல்ல முடியாத நீர், மேற்பரப்பில் தங்கி வெள்ளப் பெருக்குகள் ஏற்பட வழி வகுப்பதாகவும் அறியப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இந்தியாவில் - தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கு இதுவும் ஒரு காரணமாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், வயல் நிலங்களின் உயிர்த் தன்மையும், உயிர் வகைகளின் பல்வகைத் தன்மையும் ஆபத்துக்குள்ளாக்கப்படுகிறது என்று சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கால்நடைகளால் உண்ணப்படும் பொலித்தீன்கள்



குறிப்பாக சொப்பிங் பைகள் அவற்றின் குடலினுள் சிக்குண்டு, குடல் அடைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம், அவை சடுதியாக இறக்கக் காரணமாகின்றன.

சுடு உணவுப் பொருள்களைப் பரிமாறுவதற்கு இவற்றைப் பயன்படுத்தும் போது, இவற்றிலுள்ள இரசாயனங்கள் கரைந்து உணவுடன் கலந்து, உடலினுள் சேர்ந்து, உடல் கலங்களின் கட்டுப்பாடற்ற பெருக்கத்துக்கு வழி வகுத்து நாளடைவில் புற்றுநோய்க் கட்டிகள் உருவாக வழியமைக்கின்றன என்று உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அத்துடன், சிறப்புக் குறைபாடுகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைதல், நாளமில்லா சுரப்பிகளின் சீர் குலைவு, வளர்ச்சி மற்றும் இழையங்களின் மீளுருவாக்கம் என்பவற்றிலும் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

எவர் எதைக் கூறிய போதும் இவற்றின் பாவனை குறைந்து செல்வதாக இல்லை. எமது சோம்பல் மனப்பான்மையும், சுற்றுச் சூழல் மீதான அக்கறையின்மையும் இயற்கை நேயமின்மையும் நாளாந்தம் நம் நாட்டில் 400 -500 தொன் பொலித்தீன்கள் கழிவுகளாக உருவாக்குகின்றன.

நாளொன்றுக்கு உணவு பொதியிடலுக்காக மட்டும் பத்துமில்லியன் 'லஞ்சீற்'றுக்கள் பாவிக்கப்படுகின்றன என்று புள்ளிவிவரத் தகவல்கள் கூறுகின்றன.

பொலித்தீன்கள் பிளாஸ்ரிக் கழிவுகளை எரியூட்டுவது, நல்ல கழிவகற்றல் முறையல்ல. இவற்றை எரியூட்டும் போது உருவாகும் டயொக்சீன் மற்றும் பியூரன் எனும் உடலுக்கு தீங்கு செய்யும் வாயுக்கள் வெளியேற்றப்படுகின்றன. இவை சுவாசம், தோல் சம்பந்தமான பல நோய்களை ஏற்படுத்துகின்றன.

எந்தப் பையையும் எடுத்துச் செல்லாது சந்தைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வந்த அடுத்த நொடியிலேயே எத்தனை சொப்பிங் பைகள் கழிவுகளாக, எங்கள் வீடுகளில் உருவாகின்றன என்பது எம் அனைவருக்கும் அனுபவத்தில் உணர்ந்த உண்மையாகும்.

பிளாஸ்ரிக் பொலித்தீன் பாவனையைக் குறைக்க நடைமுறை வாழ்வில் எந்தெந்த வழிகளைக் கடைப்பிடிக்கலாம்?

* பாடசாலைகளுக்கோ, அலுவலகங்களுக்கோ வைத்தியசாலைகளுக்கோ உணவை எடுத்துச் செல்வதற்கு 'லஞ்சீற்' பாவிப்பதைத் தவிர்த்து சாப்பாட்டுப் பெட்டிகளைப் பயன்படுத்துதல்.

* வைத்தியசாலை மற்றும் பொது இடங்களுக்கு வருகை தரும் மக்களும் மற்றும் பணிபுரியும் ஊழியர்களும் அந்த வளாகத்தினுள் பொலித்தீன் பாவனையைக் குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குதல்.

* ஆன்மீக நிகழ்வுகளில் பாரம்பரிய அலங்கார சோடனைகளைப் பயன்படுத்தலாம். பிளாஸ்ரிக் பொலித்தீன் அலங்கார சோடனைகளைத் தவிர்த்தல்.

* அரசியல் கூட்டங்களில் ரெஜிபோம், பிளாஸ்ரிக், பொலித்தீன் அலங்கார வளைவுகள், சோடனைகள் மற்றும் பதாகைகளைத் தவிர்த்து, அவற்றுக்குப் பதிலாக பருத்தித் துணியிலானவற்றைப் பயன்படுத்துதல்.

* வீதிகளில் கட்டப்படும், மரண நிகழ்வை அறிவிக்கும் பிளாஸ்ரிக் பனர்களைத் தவிர்த்து துணிப்பனர்களைப் பயன்படுத்துதல்.

* அரச தனியார் நிறுவனங்களில் நிகழும் ஒன்றுகூடல்கள், ஒருங்கிணைப்பு நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் கப் பாவனையை நிறுத்துதல்.

* திருமண மண்டபங்களிலும் பிளாஸ்ரிக் கப் பாவனையை நிறுத்துதல்.

* விழாக்களின் போது விருந்தினர்களுக்கு அணிவிப்பதற்கு சந்தன, பூமாலைகளை ஒழுங்குபடுத்துதல். அல்லது பெருந்தன்மையுடன் மாலைகளைத் தவிர்த்தல்.

* பொது இடங்களிலும் வைத்தியசாலை போன்ற இடங்களிலும் இந்த வகைக் கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகளை, மக்களுக்கு இலகுவில் தெரியும் வண்ணம் அமைத்தல் மற்றும் சேகரிக்கப்படும் இந்தக் கழிவுகளை முறையாக அகற்றுதல்.

* வைத்தியசாலையினுள் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல். பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களை முடியுமானவரை வைத்தியசாலைக்குள் கொண்டு வருவதைத் தவிர்த்தல்.

* விழாக்களின் போது உணவுப்பொதி செய்வதற்கு ரெஜிபோம் பெட்டிகளையோ, 'லஞ்சீற்'றுக்களையோ பாவிப்பதைத் தவிர்த்தல்.

* துணியிலான, மட்டையிலான பைகளைப் பாவிக்க அறிவுறுத்துதல். பொலித்தீன் பைகளின் பாவனையைக் குறைத்தல்.

* சிற்றுண்டிச்சாலைகளில் பிளாஸ்ரிக் கோப்பை, பிளாஸ்ரிக் தட்டுக்களில் உணவு வழங்குவதைத் தவிர்த்தல்.

* தென்னம் நார் தயாரிப்பிலான தூரிகைகள், துடைப்பங்களைச் சுத்தப்படுத்துவதற்குப் பாவித்தல். குறைந்தது அரச அலுவலகங்களிலாவது இதனை நடைமுறைப்படுத்துதல்.

* பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி ஆலைகளுக்கோ சேகரிப்பாளர்களுக்கோ வழங்குதல். யாழ்ப்பாணத்தில், கல்லுண்டாய்ப் பகுதியில் இயங்கிவரும் யாழ். மாநகர சபையின் வீரியம் மீள் சுழற்சியகத்திடம் கையளிக்க முடியும்.

* அரச தனியார் வைத்தியசாலை விடுதிகளில் கழிவுகளாகச் சேரும் 'சேலைன்' போத்தல்கள், வயர்கள் என்பவற்றைத் தனியாகச் சேகரித்து மீள் சுழற்சிக்கு வழங்குதல்.

இவற்றை எம் வாழ்வில் கடைப்பிடிக்க முயற்சிப்பதுடன் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவதன் மூலமே இதன் தாக்கத்திலிருந்து நாம் மீள முடியும்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் எம் பிரதேசத்தில் அறிமுகமாகிய அன்றைய தினத்திலிருந்து இன்றுவரை எமது சூழலை ஆக்கிரமித்துள்ள அவற்றை அகற்றி மீள் சுழற்சி ஆலைகளை உருவாக்கும் இந்தத் தருணத்தில் அவற்றின் அபரிமித பாவனையைக் குறைத்திடவும் முயற்சி எடுத்தால்தான் அவற்றால் ஏற்படவுள்ள நீண்ட கால தாக்கங்களில் இருந்து எம் எதிர்காலச் சந்ததியைக் காப்பாற்ற முடியும். எம் அடுத்த சந்ததிக்கு நல்ல சுற்றுச் சூழலைக் கையளித்திட முடியும்.

சிந்திப்போம்! ஆக்க பூர்வமாகச் செயற்படுவோம்!!

''பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்து
பொறுப்புடன் சூழல் நலம் பேணிடுவோம்''

**வைத்தியர் பொ.ஜெசிதரன்**
**சுகாதார வைத்திய அதிகாரி,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**



# உள்ளூர் வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

கோடைமழைக்காக வானம் இருண்டு கிடந்தது.ஆனாலும் சந்தியடியில் வம்பளக்கும் அனை வரும் கூடியிருந்தனர். செல்லாச்சி கச்சான் கடகத்தை அவிழ்த்து வியாபாரத்தை ஆரம்பித்தாள்.

''மழை விட்டும் தூவானம் விடவில்லை' என்ற கதையாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவு முடிந்து, ஒருவர் பதவியேற்ற பிறகும், பரபரப்பு இன்னும் அடங்கேல்லை'' என்று கதையைத் தொடங்கினான் ஜீவன்.

''என்னடாப்பா நடந்தது''? என்று கேட்டார் ஏரம்பர்.

விசயத்தைச் சொல்லத் தொடங்கினான் ஜீவன்

''பாடசாலை ஆண்டுவிழா ஒன்றில் உரையாற்றிய யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட ஆயர்ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை 'யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டவரை விட அடுத்த நிலையில் உள்ளவர் அரசியல்வாதிகளின் கால்களில் விழுந்து பதவிக்கு வந்திருக்கிறார்'' என்று சொல்லியிருக்கிறார். இதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிற தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரன் 'ஆயரின் குற்றச்சாட்டு ஆதார மற்றது' என்றும், 'தான் அதனைக் கண்டிக்கிறார்' என்றும் சொல்லியிருக்கிறார்.'' என்று விளக்கினான் ஜீவன்.

''துணைவேந்தராக வருவதற்கு அரசியல்வாதிகளின் தயவை நாடுவது பல்கலைக்கழகங்களிலை நடக்கிறது தானே. இதைப்பற்றி பகிரங்கமாகக் கதைக்க ஆயர் இப்ப முன் வந்திருக்கிறது நல்ல விசயம் தானே?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''எங்கே போய் யாரைப் பிடித்தால் பதவிக்கு வரலாம்' என்று படிச்சவையே அலைந்தால்,இந்த சமூகத்துக்கு பல்கலைக்கழகம் வழிகாட்டும் என்று நாங்கள் எப்படி நம்ப முடியும்? என்று வாத்தியார் முந்தி ஒருமுறை கேட்டவர் ஞாபகமிருக்கோ?''என பழைய கதையை ஞாபகப்படுத்தினாள் செல்லாச்சி.

''அதைச்சொல்லுற விதமும் காலநேரமும்தான் இப்ப சிக்கலாக இருக்கு''என்றான் ரூபன்.

''நியாயத்தைச் சொல்லுறதுக்கு என்னடாப்பா முறை தலை, காலநேரம்?''என்று கேட்டார் ஏரம்பர். பின்னால் கைகளை ஊன்றிச் சாய்ந்தபடி கதைக்கத் தொடங்கிய ரூபன் ''ஆயராக வர முன்னர் ஜஸ்ரின் ஆண்டகை 1998 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை யாழ்பல்கலைக்கழகத்துக்கு வழிகாட்டும் குழுவான பேரவையிலை உறுப்பினராக இருந் தவர் அந்தக் கால கட்டத்திலை துணை வேந்தராக வந்த பேராசிரியர் மோகனதாஸ் கூடத் தேர்தலில் மூன்றாவதாகவந்து, துணை வேந்தராகியவர்தான்.அதுக்குப் பிறகு ஓர் அரசியல் கட்சியின் அலுவலகத்தில் பேரவையின் முன் கூட்டங்கள் நடந்தது என்றும் சொன்னவை. அப்போதெல்லாம் எந்தப் பகிரங்க எதிர்ப்பையும் வெளியிடாமல், இப்போது ஒரு தனிநபரை இலக்கு வைத்து குற்றஞ்சாட்டுவது தான் விவாதத்தைக் கிளப்பியிருக்கு.'' என்றான் ரூபன்.

''இது ஒரு பிரச்சினையே. அப்ப அவர் இன்னொரு ஆயரின் கீழ் இருந்தார்.அதனால் பகிரங்கமாகச் சொல்ல முடிந்திருக்காது.இப்போது அவர் ஆயர், அதனால் அவரது சொல்லுக்கு கனதி அதிகம். அதனாலை சொல்லியிருக்கிறார்''என்று சொன்னார் ஏரம்பர்.

இதைக்கேட்ட ரூபன் ''புனித விவிலியத்தின் லூக்கா 6:37 வசனத்தில்' மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க் காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள்' என்று சொல்லப்பட்டிருக்கு. மற்றவர்கள் மீது குற்றம் சொல்லக்கூடாது என்று சொல்லித்தருபவர்களே, ஒருத்தர் மீது மட்டும் குறிவைத்து குற்றஞ்சாட்டுவது சரியா என்பதுதான் கேள்வி.' அரசியல்வாதிகளிடம் அறிவு ஜீவிகள் பதவியைப் பெறச் செல்லக்கூடாது' என்று சொல்லியிருந்தால்,அதுவும் துணைவேந்தர் தேர்வு நடக்க முன்னர் சொல்லியிருந்தால் அதில் கனதியும், நீதியும் இருந்திருக்கும்.ஆனால் வேறு எவருமே இப்பதவிக்காக அரசியல்வாதிகளிடம் போகவில்லை என்பது போன்றும், பேராசிரியர் விக்னேஸ்வரன் மட்டுமே சென்றார் எனவும் அர்த்தப் பட, அதிலும் எங்கோ ஒரு பாடசாலை நிகழ்வில் சொன்னதுதான் விமர்சனங்களை எழுப்பியிருக்கு அதோடை எந்தவித ஆதாரமும் முன்வைக்காமல்' கால்களில் விழுந்து' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதும் நெருடலாக இருக்காம்'' என்றான்.

''அதேநேரம்,ஆயருக்கு மறுப்புச் சொன்ன துணைவேந்தர் கூட'தான் அரசியல்வாதியிடம் போகவில்லை' என்று மறுத்ததுடன் நின்றிருக்கலாம். அதைவிட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட புலனாய்வு அறிக்கை பேராசிரியர் சிறிசற்குணராஜாவுக்குப் பாதகமாகவும் தனக்குச் சாதகமாகவும் இருந்தது என்று சொல்லி, அவரை இழுத்திருக்கக்கூடாது என்றும் சனம் கதைக்குது'' என்றான் ஜீவன்.

''ஜனாதிபதிக்கு புலனாய்வுத்துறை அனுப்பிய அறிக்கையே துணைவேந்தருக்குத் தெரியுதென்றால், அங்கேயெல்லாம் அவருக்கு நல்ல செல்வாக்கு இருக்கு என்று அர்த்தப்படாதே?''என்று சந்தேகத்துடன் கேட்டாள் செல்லாச்சி.

''எரியிற நெருப்பிலை நீ ஏன் எண்ணெய்யை ஊத்துறாய்?'' என்று படபடத்தார் ஏரம்பர்.

அதுவரை வாத்தியாரும் பேப்பர்தம்பியும் எதுவும் கதைக்காமலிருப்பதை கவனித்த ரூபன் ''நீங்கள் இரண்டு பேரும் இன்று மௌன விரதமோ?''என்று சிரித்தபடி கேட்டான்.

அதற்கு முகத்தில் எந்த சலனமும் இல்லாமல் கதைத்த வாத்தியார் ''ஆயர் சொன்னார்: துணைவேந்தர் மறுத்தார்' என்பதுடன் இந்தப் பிரச்சினை முடிந்தால் நல்லது. அதனால் பிரச்சினை வளராமல் அவர்கள் இருவருமே முடிச்சு வைக்க வேணும்'' என்றார் வாத்தியார்.



## ''மற்றவரைக் குற்றவாளியென தீர்க்காதிருங்கள் :லூக்கா 6:37

''இதிலையென்ன பெரிய பிரச்சினை வரப்போகுது?'' என்று கேட்டாள் செல்லாச்சி.

பெருமூச்சொன்றை விட்டபடியே வாத்தியார், ''வடக்குக் கிழக்கைச் சட்டத்தைக் காட்டிப் பிரிச்சாங்கள்.இப்ப வடக்கிலை இருக்கிற மலையக மக்களை தனியான குழுமம் ஆக்க திட்டம் போட்டு வேலை நடக்குதோ என்ற சந்தேகம் நிலவுது. இந்த நிலையிலை துணைவேந்தருக்குப் பாராட்டு விழா நடக்குது. அதிலை யாராவது எட்டிக்குப்போட்டியாக கதைச்சு, அது வேற பிரச்சினைகளைக் கொண்டுவந்திடுமோ என்று சாதாரண சனம் பயப்படுவதில் நியாயம் இருக்குத்தானே.அப்பிடி எதுவும் ஆகிவிடாமல் பிரச்சினை இத்தோடை முடியபடிச்சவைதான் கவனமெடுக்க வேணும்'' என்றார்.

இதனை தலையாட்டி ஆமோதித்த பேப்பர்தம்பி, ''உண்மைதான், சுத்தி நிற்கிற கூட்டம்தான் நிறையப் பிரச்சினைக்குக் காரணம்.ஒருமுறை ஒரு வீட்டிலை நடந்த புத்தக வெளியீட்டுக்கு போனேன். அந்தவேளையில் துணைவேந்தர் தேர்தல் நடந்து, துணைவேந்தர் யார் என்று அறிவிக்கப்படவில்லை. துணைவேந்தராக வாய்ப்பிருந்த பேராசிரியரும் விழாவில் கலந்து கொண்டார்.அவரை கூட்டத்தில் 'அடுத்த துணை வேந்தர்' என்றே விளிச்சு உரைகள் நடந்தன.ஆனால் அவரால் அடுத்த துணைவேந்தராக பதவியேற்க முடியவில்லை. அவரைக் குளிரவைக்கிறம் என்று சொல்லி,கடைசியில் குழி தோண்டிப்புதைத்தது தான் மிச்சம்.அதனாலை துணைவேந்தர் தேர்வில் இருப்பவர்கள், உத்தியோகபூர்வக் கடிதம்வரும் வரை, இந்தக் காக்காக் கூட்டத்துக்குள்ளை சிக்காமல் இருப்பது நல்லது''என்றான்.

''அடுத்து இன்னார் துணைவேந்தரானால்,அவரைப் பிடிச்சு தன்காரியத்தை முடிக்கலாம் என்று ஒரு கூட்டம் கிளம்பும். இந்தக் கூட்டம் எதிர்தரப்பைப் பற்றிக் கதை கட்டும். 'இந்த அரசியல்வாதியைப் பிடிக்கிறார். அந்த அரசியல் கட்சியிடம் நிற்கிறார்' என்று நேரில் பார்த்தது போல சொல்லித் திரியும்.இதனாலை யாரிடமும் போகாதவர்களுக்குக் கூட 'எல்லோரும் போகினம்,நாங்களும் போக வேணுமோ' என்று சபலம் தட்டும். அதனால் போட்டியிடுபவர்கள் தமக்குள் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் அதைவிட தங்கடை பெயர்களுடன் இருக்கிற பட்டங்களுக்கு ஏற்ற மாதிரி நடந்தாலே துணைவேந்தர் தெரிவு நடக்கிறதும், பதவியேற்கிறதும் இவ்வளவு பரபரப்பான விசயங்களாக இருக்கா. இந்தத் துன்பியல் சம்பவத்துக்குப் பின்னராவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் முன்மாதிரியாக இருக்க வேணும் என்பதுதான் எங்கடை விருப்பம்'' என்றான் ரூபன்.

''சரியாகச் சொன்னீர்''என்று சிலாகித்த பேப்பர்தம்பி ''பல்கலைக்கழக நியம விதிகளின்படி' பல்கலைக்கழகமொன்றின் பேரவை பரிந்துரைக்கும் மூவரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு பரிந்துரைகளுடன் அனுப்பும்.அவர்களில் ஒருவரை ஜனாதிபதி துணைவேந்தராக நியமிப்பார்.இதுதான் முறை'' என்றான்.

''அப்ப முதலாவது வந்தவர்: இரண்டாவது வந்தவர் எல்லாம் எப்பிடி வருகுது?''என்று கேட்டாள் செல்லாச்சி.

அதற்குப்பேப்பர்தம்பி ''உண்மையில் அப்பிடிச் சொல்ல முடியாது. விதிப்படி 'அதிக வாக்குகளைப்பெற்றுக்கொண்ட மூவரின்பெயர்களைபல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்றுதான் இருக்கு.அதிலையே முன்வைக்கப்படும் பெயர்களை தரப்படுத்தத் தீர்மானிப்பதாயின் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தரப்படுத்தல் வேண்டும்'என்றுதான் போட்டிருக்கு.இங்கு இருப்பவர்கள் தான் முதலாவது இரண்டாவது என்று தங்கடை வசதிக்கு கதைக்கினம்'' என்று சொல்லிவிட்டு மூச்சு வாங்கிக் கொண்டான்.

''இதென்ன தம்பி கதைக்கிறீர், வாக்குகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தினால் முதலாவது இரண்டாவது என்று வரும்தானே?'' என்று சலிப்புடன் கேட்டார் ஏரம்பர்.

அதற்கு பேப்பர்தம்பி ''ஒரு ஆளுக்கு ஒரு வாக்கு மட்டுமே அளிக்க உரிமை என்றால் நீங்கள் சொன்னது சரியாக இருக்கும். ஆனால் இங்கு பேரவை உறுப்பினர் ஒருவர் போட்டியிடுபவர்களில் தான் விரும்பிய மூன்று பேருக்கு வாக்கிடலாம். அதாவது ஒருவருக்கு மூன்று வாக்குகள் போட உரிமை இருக்கு'' என்றான்

அப்போது குறுக்கிட்ட செல்லாச்சி ''இது பொதுத் தேர்தலிலை விருப்பு வாக்கு போடுற மாதிரியெல்லே இருக்கு'' என்றாள்.

''மாதிரியென்ன, அதேதான்'' என்றார் வாத்தியார்.

தொடர்ந்த பேப்பர்தம்பி. ''ஒருவர் தனக்கு விரும்பிய மூவருக்கு வாக்கிட்டால், அவரைப் பொறுத்தவரை மூவரும் தகுதியானவர்கள் என்றுதானே அர்த்தம்.அவர்களிலை எப்பிடி முதலாமிடம்,இரண்டாமிடம் என்று பிரிக்க முடியும்.அதனால் முதலிலை வந்தவர் இரண்டாவதாக வந்தவர் என்பது விதிமுறைகளின்படி பெரிய விசயமில்லை என்பதுதான் உண்மை'' என்றான்.

''உண்மையில் அரசியல் தலையீடுகளுக்கு வழியேற்படுத்தும் அரசாங்க நடைமுறைகள்தான் மாற்றப்படவேண்டியவை. அதற்காக அரசை எதிர்த்து யாழ். ஆயர் குரல் கொடுத்தால் மக்கள் அவருக்கு பின்னால் நிற்பார்கள்'' என்றார் வாத்தியார்.

அதுவரை கைபேசிக்குள் தேடுதல் நடத்திய ஜீவன் ''போட்டியிடுகிற ஒவ்வொருவரும் தங்களுடைய விண்ணப்பத்துடன், பல்கலைக்கழக அபிவிருத்திக்கான தூரநோக்குத் திட்டங்கள்,துணை வேந்தரானால் அவரால் முன்வைக்கப்படும் பிரேரணைகள் போன்றவற்றையும் இணைக்க வேண்டுமாம்.இதையெல்லாம் அலசி ஆராய்ந்துதான் ஜனாதிபதி முடிவெடுப்பார் என்று விதிகளின்படி அறிய முடியுது'' என்றான்.

''எல்லாம் விதிகளிலும் சட்டப் புத்தகங்களிலும் மட்டும் இருக்கிறதுதானே இலங்கையில் எல்லாப் பிரச்சினைக்கும் காரணம்''என்றான் ஜீவன்.

''இவர் அவரிட்டைப் போனார், அவர் அந்தாளைப் பிடிக்கிறார் என்றெல்லாம் சொல்லுறவை,உண்மையில் பல்கலைக்கழகம் நல்லா வரவேணும் என்றால் போட்டியிடுறவை முன்வைக்கிற தூரநோக்குகளையும், நிறைவேற்ற இருந்த பிரேரணைகளையும் துணைவேந்தர் பதவியேற்ற பின்னர் பகிரங்கப்படுத்திறதை மரபாக்கலாமே?'' என்றான் ரூபன்.

. அப்போது எழுந்து நின்று மண்ணை உதறிய வாத்தியார் ''ஆனாலும் இந்தப் பிரச்சினையாலை ஒரு நல்லதும் நடந்திருக்கு,சாதாரண மக்களின் விமர்சனங்களுக்கு ஆயர் இல்லம், பல்கலைக்கழகம் போன்ற இடங்கள் அப்பாற்பட்டவை என்றுஇருந்த மாயை உடைஞ்சு நொறுங்கீட்டுது.இனிமேல் மக்கள் தாங்கள் சம்பந்தப்படும் எதனைப் பற்றியும் எந்தத் தயக்கமும் இல்லாமல் விமர்சனங்களை முன் வைப்பார்கள். அந்தத் துணிச்சலை கொடுத்ததற்காக ஆயருக்கு நன்றி சொல்லலாம்.'' என்றபடி நடக்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் பின் தொடர, கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.




வணக்கமுங்கோ!

போனகிழமை இதாலை வந்த இடத்திலை உங்களோடை மனம் விட்டுக் கதைச்சதில கொஞ்சம் மனப் பாரம் குறைஞ்சமாதிரிக் கிடந்தது பாருங்கோ.

மனசுக்குள்ள கிடக்கிற ஆயிரமாயிரம் கவலையள், பிரச்சினையளை அடுத்தவைக்கும் தெரியாமல், சொல்லிக் கொள்ளாமல் சொல்லத் தெரியாமல் அப்படியே அமுக்கிப் பொத்தி வைச்சுக் கொண்டு, மனசுக்குள்ளை குமைஞ்சு அழுகிறது பெரிய ஆபத்தான விடயம் கண்டியளே.

மனிசனாகப் பிறந்த ஒவ்வொருவனுடைய வாழ்க்கையிலும் அவன்ரை மனசுக்குள்ளை ஏகப்பட்ட பிரச்சினையள் இறங்கிக் கிடக்கத் தான் செய்யும். பிரச்சினையள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. ஒவ்வொரு பிரச்சினையளையும் நேருக்கு நேர் சந்திக்காமல் மனுசன் வாழ்ந்து முடிச்சதாக வரலாறும் இல்லை.

ஒரு பிரச்சினைக்கு முடிவு கண்டுவிட்டு, எப்பன் ஆறியிருக்கலாம் எண்டு நினைச்சால், இன்னொரு பிரச்சினை வீட்டுப் படலையைத் திறந்து வந்து, முத்தத்திலை நிண்டு கொண்டு, முகம் பார்த்துச் சிரிக்கும். வேறு சிலதுகள் அநாவசியமாக விலைக்கு வாங்கி வில்லங்கத்தைத் தேடுவதாக அமையும்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினையள் இருக்கத்தான் செய்யுது. அதை ஆருக்குச் சொல்லி அழுகிறது...? எவைக்குச் சொல்லித் தீருறது..? எண்டதுதான் இப்ப ஒரு பிரச்சினையாகக் கிடக்குது.

இப்ப கொஞ்சக் காலத்துக்கு முன்னம் எண்டால் (சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு) சொல்ல வேண்டிய ஆள்களிட்டை போய்ச் சொன்னால் ஏதோ ஒரு வகையில... ஏதோ ஒரு வழியால... நாளுகள் இழுபட்டாலும் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் கிடைச்சுது. கிடைக்குமெண்ட நம்பிக்கையும் சனங்களிட்டை இருந்தது.

எப்ப முள்ளி வாய்க்காலோடை எல்லாம் முகவரி இழந்து போச்சுதோ அண்டையில இருந்து இண்டு வரைக்கும் அநாவசியமான பிரச்சினையள் தலை தூக்கிக் கொண்டு திரியுது. தட்டிக் கேட்க ஆளில்லாத நிலையில தடி எடுத்தவன் எல்லாம் சண்டப் பிரசண்டனாகத் திரியுறாங்கள் கண்டியளே!

இராவேளையிலே வீட்டில நீட்டி நிமிர்ந்து நிம்மதியா நித்திரை கொள்ளேலாமல் கிடக்குது. றோட்டில பெண்புரசுகள் கழுத்தில நகை நட்டோடை, காசு பணத்தோடை சுதந் திரமாய் திரியேலாத நிலையாய் போச்சுது. வயசு போன பழசுகள் கூட தங்கட குடிமனையில தனியாகக் குந்தியிருக்க முடியாத நிலையாய் போச்சுது பாருங்கோ?

இப்பத்தே வாழ்க்கையில இப்படியான ஒரு நிலை அமைஞ்சிட்டுதே... எண்ட கவலைதான் இப்ப பெரும்பாலான சனங் களுக்குப் பிரச்சினையாகக் கிடக்குது.

கடந்த போன குறிப்பிட்ட அந்தச் சுதந்திரமான காலத்தை நினைச்சு சனமெல்லாம் ஏங்குதுகள். எல்லாச் சனத்துக்கும் இப்ப மன உளைச்சலும் மனத் திடுக்காட்ட முமாய்த் தான் வாழ்க்கை போகுது....எண்டது பொய்யில்லைக் கண்டியளே!

சமகால அரசியல்போக்குக்கூட, சனங்களுக்குப் பிரச்சினையளை உண்டு பண்ணுதே ஒழிய, இருட்டு மறைஞ்சு வெளிச்சம் பரவுறமாதிரி இல்லை. அவனவன் தங்கட சுயநலத்துக்கும் சுகபோகத்துக்கும் இயலாமல் இருக்கிற இன்னொரு கூட்டத்தை வஞ்சிக்கிறாங்கள் எண்டது கூடப் பொய்யில்லைப் பாருங்கோ!.

பாவப்பட்ட ஒரு கூட்டமாக எங்கட சனங்கள் தங்கட மனசில பலதரப்பட்ட பிரச்சினையளைச் சுமந்து கொண்டு திரியுதுகள். இருந்தாலும், நான் இதில முன்னுக்குச் சொன்ன மாதிரி -

''பிரச்சினையள் இல்லாமல் வாழ்க்கை இல்லை! எந்தவொரு பிரச்சினையளையும் நேருக்குநேர் சந்திக்காமல் மனிசன் வாழ்ந்து முடிச்சதாக சரித்திரம் இல்லை.

பிரச்சினையளை நம்பிக்கைக்குரியவையளோடை மனம் விட்டுக் கதைப்பம்! அன்புணர்வோடு ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலானவர் களாக இருப்பம்!

# வவுனியா ஆச்சிபுரம் தமிழ்க் கிராமம் சிங்கள கிராமத்துடன் இணையவில்லை!

## வரைபடத்தில் ஏற்பட்ட தவறே குழப்பத்துக்குக் காரணமாம்

வவுனியா, மே 14

வவுனியா பிரதேசத்துக்கு உட்பட்ட ஆச்சிபுரம் தமிழ்க் கிராமம் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சிங்களக் கிராமமான மயிலங்குளத்துடன் இணைக்கப்படவில்லை என்று அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அருள்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஆச்சிபுரம் கிராமம், சிங்கள கிராமத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று கடந்த 10 ஆம் திகதி தெரிவித்திருந்த போதும், மக்களைச் சந்தித்த அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் மற்றும் கிராம சேவையாளர் வரைபடத்தில் காணப்பட்ட தவறின் காரணமாகவே இணைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டதாக விளக்கமளித்திருந்தார்.

வவுனியா சமணங்குளம், ஆச்சிபுரம் கிராமம் இரண்டாக பிரிக்கப்பட்டு ஒரு பகுதி மயிலங்குளம் கிராம சேவகர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று கடந்த 10 ஆம் திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அருள்குமார் தெரிவித்திருந்த நிலையில் கிராம மக்களிடையே பதற்றம் ஏற்பட்டிருந்தது.

2000ஆம்ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஆச்சிபுரம் கிராமத்தில் 365 குடும்பங்கள் வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரிவில் பதிவுகளை மேற்கொண்டன. ஆச்சிபுரம் கிராமத்திலுள்ள மக்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தின் ஊடாக காணி அனுமதிப் பத்திரங்கள் வழங் கப்பட்டிருந்தன.

இதேவேளை, வீட்டுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அங்கு சென்றிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராமம் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், வீடமைப்பு அதிகார சபையின் வரைபடத்தில் ஏற்பட்ட தவறு காரணமாகவே தான் அவ்வாறு தெரிவித்தார் என்றும் கிராமம் பிரிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஜ-100)

### திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க

# புத்தாண்டு விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு வைபவம் இன்று

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய விளையாட்டு விழாவில், சதுரங்கம், கரம், மேசைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் முதலிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

சதுரங்க அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி 17 வயதுப் பிரிவு முதலிடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரி 17 வயதுப்பிரிவு இரண்டாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரி 13 வயதுப்பிரிவு மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பெண்களுக்கான திறந்த போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முதலிடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

சதுரங்கம், கரம், மேசைப்பந் தாட்டம், துடுப்பாட்டம் முதலிய அனைத்து விளையாட்டுகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் திருநெல்வேலி பணிக்கர் வளவில் அமைந்துள்ள இந்து வாலிபர் சங்க மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவர் சிவ. ராஜ்குமார் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ரில்கோ முகாமைத்துவப் பணிப்பாளர் தி.திலகராஜும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வைத்தியர் ந.பிரதீபன், திருமதி விசாலாட்சி ஜெயதிலகன், தி.சிறீமோகனராஜ், ம.திவாகரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

அமரர் நவரத்தினம் ஜெயதிலகன் ஞாபகார்த்த துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் இன்று இடம்பெறும்.

சதுரங்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் வரிசை ஒழுங்குப்படி வருமாறு:-

8 வயது ஆண்:- ரி.சாய் பிரியன், எஸ்.கோபிகன், ஜி.சஞ்சய்.

8 வயதுப் பெண்:- ஜே.ரிசானி, எஸ்.லக்ஷா, எஸ்.அனன்ஜா.

10 வயது ஆண்:- எம். தேனுஜன், ஜே.பவனன், ஜி. தனுஷிகன்.

10 வயதுப் பெண்:- எம்.அக்ஷயா.

12 வயது ஆண்:- ஏ.ஆருத்ரன், எம். சஞ்சயன், ஜி.தேனுஹர்ஷன். 12 வயதுப் பெண்:- ரி.அனுஜிதா, ஐ.தயானி, என்.தரிணிகா.

14 வயது ஆண்:- ஆர்.டுலேஷன், பி.லதுஷன், எஸ்.ரிஷிகரன்.

14 வயதுப் பெண்:- பி.தமிழினி, எம்.சௌமியா, யூ.சுவஸ்திகா.

16வயது ஆண்:- எஸ்.கௌசல்யன், சுகந்தன், பி.நிஷாகர்.

16 வயதுப் பெண்:- ரி.தமிழ்மதி, கே.சாகித்தியா, ஆர்.மாதங்கி.

18 வயது ஆண்:- எஸ். சிவ தனுஜன், பி.பார்புகழன், எஸ்.அனுஜன். 18 வயதுப் பெண்:- பி.தஸ்யாகி, பி.சன்ரன்ஜா.

திறந்த ஆண்கள் பிரிவு:- ரி.செல்வகுமார், ரி.கனகதீபன், ரி.பிரம்மன். திறந்த பெண்கள் பிரிவு:- யூ.சுமித்ரா தேவகி, என்.தனுஸ்பிரியா, ரி.மிதுஷா.

## இலங்கையில் பாரதி...

(15ஆம் பக்கத்தொடர்ச்சி)

அக்காலப்பகுதியில் அங்கு பிரதி ஞாயிறு தோறும் மதியம் சிறுவர் மலர் நிகழ்ச்சியிலும் பாரதிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

எழுத்தாளரும், நயப்புரைகள் எழுதுவதில் கைதேர்ந்தவரும் கொழும்பில் இன்றும் இயங்கிவரும் தமிழ்க்கதைஞர் வட்டத்தின் (தகவம்) ஸ்தாபகருமான (அமரர்) வ.இராசையா வானொலி மாமாவாக அறியப்பட்டிருந்தார்.

சிறுவர் மலர் நிகழ்ச்சிகளில் பாரதி பற்றிச் சிறுவர்கள் எழுதிய கட்டுரைகள் பலவற்றை ஒலிபரப்பினார். பாரதி பாதையில் என்ற தலைப்பில் சிறார்களை கவிதைகள் புனையச்செய்து அவற்றுக்கும் களம் வழங்கினார்.

அகில இலங்கையிலும் நடைபெற்ற பாரதி நினைவுப்பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்ற சிறார்களை வானொலி கலையகத்திற்கு வரவழைத்து பேசவைத்தார்.

பாரதியின் கவிதைகள் மற்றும் உரைநடைகளை சிறு வர் மலரில் அறிமுகப்படுத்தினார். பாரதியாருடைய வாழ்வில் இடம்பெற்ற அவரது குணவியல்புகள் மற்றும் அவரது கவித்துவம், ஆகியன வற்றை உணர்த்தக்கூடிய வாழ்க்கைச்சம்பவங்களையும் சிறார்களைக்கொண்டு ஒலிபரப்பினார். அத்துடன் பாரதி பாடல்களை அடியொற்றி, அச்சமில்லை, குடுகுடுப்பைக்காரன், தீராதவிளையாட்டுப் பிள்ளை, பாரதி வந்தார் முதலான சிறுவர் நாடகங்களையும் வ. இராசையா ஒலிபரப்பினார்.

இலங்கை வானொலி சிறுவர் மலர் நிகழ்ச்சியானது. 08 - 16 வயதிற்குட்பட்ட சிறார்களின் சுய ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் அமையப்பெற்றதாகும். அதனால், இவர்களுடைய அறிவு, அனுபவம், தேவைகள் என்பனவற்றை கருத்திற்கொண்டே பாரதி நூற்றாண்டு நிகழ்ச்சிகளை வானொலியில் ஒலிபரப்புவதற்கு அவர் திட்டமிட்டு அதில் வெற்றியும் கண்டவர் வ. இராசையா.


இந்நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிய காலப்பகுதியில், சிறார் நேயர்கள் விரும்பி வரவேற்றமையையும், இதில் ஏற்பட்ட அவர்களுடைய ஆர்வமும் உற்சாகமும் நயப்பும் காலப்போக்கில் படிப்படியாக வளர்ந்து வந்ததை அவர்கள் சிறுவர் மலருக்கு எழுதிய நேயர் கடிதங்களிலிருந்து காண முடிந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்தும் நாட்டின் ஏனைய பாகங்களிலுமிருந்தும் பல மாணவர்கள் தாம் பரிசுபெற்ற பாரதி தொடர்பான பேச்சுப்போட்டி உரைகளை நிகழ்த்துவதற்கு மிகவும் உற்சாகமாக வானொலிக் கலையகத்திற்கு வந்திருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இலங்கை வானொலியின் கல்விச் சேவையில் வ.இராசையா, விந்தைச் சுவைக் கலைகள் என்ற நிகழ்ச்சியையும் நடத்தியிருப்பவர்.

இதில், கலாநிதி இ . பாலசுந்தரம் ''சுபாரதி பாடலில் விந்தைச் சுவைகள்'' என்னும் தலைப்பிலும் இளங்கீரன் ''புதுயுகக்கவிஞன்'' என்ற தலைப்பிலும் உரையாற்றியிருக்கின்றனர் என வ. இராசையா பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு இலங்கையில், பாரதியின் தாக்கம் மேடைகளிலும் வானொலி ஊடகத்திலும் நீடித்திருந்த பொற்காலம் குறிப்பிடத்தகுந்தது.

# உலக அளவில் இணையத் தாக்குதல்: அரச அமைப்புகள் பல முடங்கின!



உலகளாவிய ரீதியில் மோசமான இணையத் தாக்குதல் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியா , ஸ்பெய்ன் மற்றும் ரஷ்யா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகளின் முன்னணி நிறுவனங்களின் இணைய சேவைகள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என செய்திகள் வெளியாகி உள்ளன.

இவையெல்லாம் தனித்தனி தாக்குதல்களா அல்லது ஒன்றோடொன்று தொடர்புடையனவா என்பது தெளிவாகவில்லை.

பிரித்தானியாவின் தேசிய மருத்துவசேவையின் இணைய கட்டமைப்பின் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இதனால் பிரித்தானியாவின் முன்னணி மருத்துவமனைகளின் இணையக் கட்டமைப்பில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது இதனால், நோயாளிகளுக்கானசேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவில் சில மருத்துவ மையங்கள் மற்றும் மருத்துவமனைகளின் இணைய கட்டமைப்பு முழுமையாகச் செயலிழந்துபோனமையால் பல இடங்களில் நோயாளிகள் அவசரகால சிகிச்சை பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ransomware attack என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பிணைத்தொகை கேட்கும் மென்பொருளைப் பயன்படுத்தி மேற்படித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இதன் அடிப்படையில் இணைய சேவைகளை மீண்டும் செயற்பட செய்யவேண்டுமானால் பணம் தரவேண்டும் என்று இந்த மென்பொருள் கேட்கும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ச)

# வட கொரியாவுக்கு எதிராகச் சதி முயற்சி; முறியடிக்க அனைவரும் ஒத்துழையுங்கள்!

## ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை

ஜெனீவா, மே 14

வட கொரிய நாட்டுக்கு எதிராக நடக்கும் சதி முயற்சிகளை முறியடிக்கும் எமது முயற்சிக்கு ஐ.நா. உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

-இவ்வாறு ஐ.நாவுக்கான வடகொரியத் தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

நியூயோர்க் ஐ.நா. தலைமையகத்தில் வட கொரியத் தூதரகம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னைப் படுகொலை செய்வதற்கு அமெரிக்காவும் தென் கொரியாவும் கூட்டுச் சதி செய்தமை சமீபத்தில் அம்பலமானது. அதைத் தொடர்ந்து, சதியில் ஈடுபட்ட பயங்கரவாதி பிடிபட்டார். அந்தச் சதித் திட்டத்தின் பகுதியாக வட கொரியாவில் மறைந்துள்ள பயங்கரவாதிகள் ஒவ்வொருவரையும் வேட்டையாடிப் பிடிப்பது உறுதி.

வட கொரிய அதிபரைப் படுகொலை செய்வதற்கு அமெரிக்காவும் தென் கொரியாவும் சேர்ந்து தீட்டிய சதித் திட்டம் போர் அறிவிப்புக்குச் சமமானது. இந்தச் சதியை முறியடிப்போம். -என்றுள்ளது.

வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன்னைப் படுகொலை செய்ய அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. தீட்டிய சதித் திட்டம் முறியடிக்கப் பட்டது என வட கொரிய உள் துறை அமைச்சகம் கடந்த வாரம் அறிவித்தது.

வட கொரிய தலைநகர் பியோங்யாங்கில் நடைபெறும் பொது நிகழ்ச்சியில் வடகொரிய அதிபர் கலந்துகொள்ளும்போது, அவருக்கு எதிராக உயிரியல் ஆயுதம் அல்லது இரசாயன ஆயுதம் மூலம் தாக்குதல் நிகழ்த்துவதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்தது என உள் துறை அமைச்சகம் தெரிவித்தது.

இதற்காக மூளைச் சலவை செய்து அனுப்பப்பட்ட நபரை விசுவாசம் மிக்க வட கொரிய பாதுகாப்புப் படையினர் மடக்கிப் பிடித்து, அந்தச் சதியைக் கண்டுபிடித்து முறியடித்தனர் என்றும், வட கொரியாவில் ஊடுருவி மறைந்திருக்கும் அமெரிக்க உளவாளிகள், பயங்கரவாதிகளைத் தேடி இரக்கமின்றி அழிப்போம் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

படுகொலைக்கான சதித் திட்டம் எவ்வாறு அம்பலமானது? வட கொரிய பாதுகாப்புப் படையினரிடம் சிக்கிய அமெரிக்க உளவாளியின் கதி என்ன என்பது தொடர்பாகக் கூடுதல் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ச)

# பாகிஸ்தானில் வெடிகுண்டுத் தாக்குதல்: 25 பேர் உயிரிழப்பு: 35 பேர் படுகாயம்!



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 25 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 35 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் நாடாளுமன்ற பாதுகாப்பு வளையத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மேற்படி தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தின் அமாக் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலின்படி தற்கொலை படையைச் சேர்ந்த ஒருவர் தான் இந்தத் தாக்குதலை நடத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் மேல் சபைத்துணை தலைவர் அப்துல் கஃபூர் ஹைதெரி, இந்தத் தாக்குதல் தன் மீது குறி வைக்கப்பட்டது எனவும், இதில் காயங்களுடன் தப்பி பிழைத்தேன் எனவும் வெடிகுண்டு விபத்துக்குப் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கொங்கோ குடியரசில் எபோலா தொற்று!




கொங்கோஜனநாயக்க குடியரசில் எபோலா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகிறது என உலக சுகாதார அமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

உயிரைக்காவு கொள்ளும் இந்தப் பயங்கரமான வைரஸ் தொற்றின் காரணமாக இதுவரை ஒருவர் உயிரிழந்துள்ளார் மேலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

எபோலா வைரஸ் தொற்று பரவி வருகின்றமை கொங்கோவில் உள்ள ஆய்வகமொன்றால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இந்த கொடூரமான எபோலா வைரஸ் தொற்றின் காரணமாக மேற்கு ஆபிரிக்காவில் சுமார் 11 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அங் குள்ள கினியா, சியேரா லியோன் மற்றும் லைபீரியா ஆகிய நாடுகளில் இந்த வைரஸ் தொற்று அதிகளவில் பரவியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புலனாய்வுத்துறை அதிகாரிக்கு அமெ.அதிபர் ட்ரம்ப் மிரட்டல்!




வொஷிங்டன்,மே 14

பதவி நீக்கம் செய்யப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரி கோமேவுக்கு டிரம்ப் மிரட்டல் விடுக்கும் வகையில் ட்விட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க புலனாய்வுத் துறையான எப்.பி.ஐயின் இயக்குநராக இருந்தவர் ஜேம்ஸ் கோமே. இவரை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக பதவி நீக்கம் செய்தார்.

அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனின் பிரசார மின்னஞ்சலை ரஷ்யா உதவியுடன் ட்ரம்ப் திருடினார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. அது குறித்த விசாரணையில் இவரது செயற்பாடு திருப்தி அளிக்கவில்லை என நீதித் துறை விவரம் (மெமோ) அனுப்பியிருந்தது.

அதன் அடிப்படையில் கோமே பதவி நீக்கம் செய்யப்பட்டார் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ஆனால், மின்னஞ்சல் விவகாரத்தில் ட்ரம்புக்கு ரஷ்யா உதவி செய்த விவகாரத்தை இவர் வெளியிட்டு விடுவார் எனப் பயந்தே புலனாய்வுத்துறை அதிகாரி கோமே பதவி நீக்கம் செய்யப்பட்டார் என ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டினர்.

இந் நிலையில், கோமேவுக்கு ட்ரம்ப் மிரட்டல் விடுக்கும் வகையில் ட்விட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார். அதில் இது தொடர்பில் தங்களுக்கு இடையே நடந்த தொலைபேசி உரையாடலை பத்திரிகைகளுக்கு வெளியிடக் கூடாது என எச்சரித்துள்ளார். (ச)

# 65 இராணுவ அதிகாரிகள் வெனிசுலாவில் கைது!

கராகஸ், மே. 14

வெனிசுலாவில் இராணுவத்தைச் சேர்ந்த 65 அதிகாரிகள் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர் மீது தேசத்துரோகம் மற்றும் அரசுக்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டுதல் பிரிவுகளின் கீழ், குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை தொடர்பில் வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் ஹென்ரிக்கே காப்ரிலெஸ், "வெனிசுலா அரசின் இந்த சட்ட விரோத நடவடிக்கை ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ராணுவத்தை முற்றிலுமாக பிளவுபடுத்தியுள்ளது" எனத் தெரிவித்தார்.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோவைப் பதவி விலக கோரியும், புதிதாக தேர்தல் நடத்த வலியுறுத்தியும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தலைநகர் கராகஸில் ஒரு மாதத்துக்கும் மேலாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகப் பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு, துப்பாக்கி சூடு என்பனவற்றை நிகழ்த்தி வருகின்றனர். அரசுக்கு எதிரான போராட்டத்தில் இதுவரையில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கரூரில் விபத்து: எழுவர் சாவு!



கரூர் குளித்தலை பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கார் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். மூவர் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்த ஏழு பேரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த மூவரும் அரச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

# ஆட்சி கலைக்கப்படும் நிலைமை எம்மால் ஒருபோதும் ஏற்படாது!

## சேலம் கூட்டத்தில் பன்னீர்

சேலம்,மே 14

தமிழகத்தில் ஆட்சி கலைக்கப்படும் சூழல் எம்மால் ஒருபோதும் ஏற்படாது. ஆனால், எடப்பாடி பழனிச்சாமி அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அந்தக் 'காரியத்தைச்' செய்து கொண்டுள்ளனர்.

-இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணி சார்பில் கட்சி ஆலோசனைக் கூட்டம் சேலம் கோட்டைமைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முதலமைச்சர் தனது அமைச்சர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்.



அங்குள்ள அமைச்சர்கள் தினந்தோறும் ஒவ்வொரு கருத்துக்களை சொல்லி வருகின்றனர். தொண்டர்கள் எங்கள் பக்கம் இருக்கின்றனர். ஆனால், 122 சட்ட சபை உறுப்பினர்கள் உட்பட சிலரை வைத்துக் கொண்டு ஆட்சியையும் கட்சியையும் நடத்தலாம் என்று நினைப்பது, கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிவது போன்றதே.

அ.தி.மு.க. கட்சி 27 ஆண்டு காலம் தமிழகத்தை ஆட்சி செய்த பெருமை பெற்றது. இத்த கையகட்சி எந்தவொரு தனிப்பட்ட குடும்பத்துக்குள்ளும், தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்துக்குள்ளும் சென்றுவிடக்கூடாது என்பதே அ.தி.மு.கவினரின் விருப்பமாகும். குடும்பத்தின் பிடியில் இருந்து வெளியே வர வேண்டும் என்றோம். இடையில் தினகரனை ஒதுக்கி வைத்து விட்டோம் என்று நாடகம் நடத்தினர். பேச்சுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம். எங்கள் பக்கம் வந்தால் எதிர்காலம் உண்டு. வராவிட்டால் அரசியல் அநாதை ஆகிவிடுவார்கள்.

ஜெயலலிதாவின் ஆட்சி மீண்டும் கோட்டையில் மலர வேண்டும். சேலம் உருக்காலையை தனியாருக்கு விற்பனை செய்ய மத்திய அரசு திட்ட மிட்டுள்ளதை தடுத்து நிறுத்த எடப்பாடி பழனிச்சாமி எதுவும் செய்யவில்லை. அவர் 2 ஆயி ரம் கோப்புகளில் கையெழுத்து போட்டமை பெருமையல்ல. நானும் ஒரு மாதத்தில் 4 ஆயி ரம் கோப்புகளில்கையெழுத்துபோட்டுள்ளேன். இது பெருமையல்ல. அன்றாடநிகழ்வு.- என்றார். (ச)

# ஆர்.எஸ்.எஸ். தலைவர் படுகொலை!

கேரளா கண்ணூர் மாவட்டம் கக்கன்பாரா பகுதியைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்புத் தலைவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை படுகொலை செய்யப்பட்டார்.

பிஜூ(வயது-34) என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

இவர் தனது மோட்டார் சைக்கிளில் பாலக்கோடு பகுதிக்குச் சென்றுகொண்டிருக்கையில் அவருக்குப் பின்புறமாக வந்த கார் ஒன்று அவரது மோட்டார் சைக்கிள் மீது மோதியது. அப்போது நிலைதடுமாறி கீழே விழுந்த அவரைக் காரில் இருந்து இறங் கிய மர்ம நபர்கள் சரமாரியாக வெட்டினார்கள். இதில் படுகாயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தான் கொலை செய்தனர் என பா.ஜ. கவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தக் கொலையைக் கண்டித்து கண்ணூர் மாவட்டத்தில் முழு அடைப்புக்கு பா.ஜ.க. அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குல்பூஷண் ஜாதவ் விவகாரம்: சர்வதேச நீதிமன்ற உத்தரவு; நிராகரித்தது பாகிஸ்தான்!

இஸ்லாமாபாத், மே 14

குல்பூஷண்ஜாதவ் தொடர்பாக சர்வதேச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைப் பாகிஸ்தான் ஏற்காது என செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் உளவு பார்த்தார் என இந்தியாவைச் சேர்ந்த குல்பூஷண் ஜாதவுக்கு தூக்கு தண்டனை வழங்கப் பட்டது. இதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதனை எதிர்த்து தி ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதனை விசாரித்த சர்வதேச நீதிமன்றம் தூக்குத் தண்டனைக்குத் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியில்-

குல்பூஷண் ஜாதவுக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச நீதிமனறத்தில் பாகிஸ்தான் அட்டர்னி ஜெனரல் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். நாட்டின் நிலைத் தன்மையைக் கருத்தில் கொண்டு, சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை பாகிஸ்தான் ஏற்காது. இதற்காக கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி முதல் உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெறவும் முடிவு செய்துள்ளது. இதன் மூலம் குல்பூஷண் ஜாதவ் விவகாரத்தில் பாகிஸ்தானை முடக்க நினைக்கும் இந்தியாவின் முயற்சி வெற்றி பெறாது. -இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (ச)

# அ.தி.மு.கவில் இருந்து சசியை நீக்க முடியாது!

## துணை சபாநாயகர் தம்பிதுரை தெரிவிப்பு

சென்னை,மே 14

அ.தி.மு.க. கட்சியில் இருந்து சசிகலாவை தனிப்பட்ட ஒருவரால் நீக்க முடியாது. கட்சிப் பொதுச்செயலாளராக அவரை பொதுக்குழுவே தீர்மானித்தது.

-இவ்வாறு துணை சபாநாயகரும், அ.தி.மு.க. அம்மா அணியின் முத்ததலைவருமான தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுக்குழுவின் தீர்மானத்தில் பன்னீர்செல்வம் உட்பட எல்லோரும் கையெழுத்து போட்டுள்ளனர்.


பொதுக்குழுவால் எடுக்கப்பட்ட முடிவை எடப்பாடி, பன்னீர்செல்வம் போன்ற தனிப்பட்ட நபர்கள் எவ்வாறு



மாற்ற முடியும்?

இந்த பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்துவதன் மூலம் தான் தீர்வு காண முடியுமே தவிர, ஏதோ சில கருத்துக்களை மனதில் வைத்துப் பேசினால் சரி வராது. இது தொடர்பில் விவாதிப்பதற்கு எங்கள் தரப்பு தயாராக இருக்கிறது. சசிகலாவும், தினகரனும் சிறையில் இருக்கின்றமையால் கட்சியையும், ஆட்சியையும் எடப்பாடி பழனிச்சாமி வழி நடத்திச் செல்கிறார். -என்றார். (ச)

# 112 அடி உயர ஆதியோகி சிலைக்கு கிடைத்தது கின்னஸ் அங்கீகாரம்!



கோவை,மே 14

கோவை வெள்ளிங்கிரி மலை அடிவாரத்தில் ஈஷா யோகா மையத்தால் அமைக்கப்பட்டுள்ள, 112 அடி உயர ஆதியோகி திருமுகச் சிலைக்கு கின்னஸ் புத்தகம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கின்னஸ் சாதனை புத்தகத்தில், "உலகிலேயே மிகப் பெரிய மார்பளவுச் சிலையின் உயரம் 34.24 மீற்றர் (112 அடி), அகலம் 24.99 மீற்றர் (81 அடி), நீளம் 44.9 மீற்றர் (147 அடி).

இந்தச் சாதனையை தமிழகத்தின் ஈஷா அறக்கட்டளை மையம் செய்துள்ளது என உறுதி செய்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சாதனை ஈஷா யோகா மையத்துக்குக் கிடைத்துள்ள, 2 ஆவது கின்னஸ் சாதனை விருதாகும். ஏற்கனவே, ஈஷா அறக்கட்டளை 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி 8 லட்சத்து 52 ஆயிரத்து 587 மரக்கன்றுகளை நட்டமைக்காக கின்னஸ் சாதனை அங்கீகாரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த திருமுகச் சிலையை வடிவமைக்க இரண்டரை ஆண்டுகளும், அதை நிர்மாணிக்க 8 மாதங்களும் ஆனது என ஈஷா நிறுவுநர் ஜக்கி வாசுதேவ் தெரிவித்துள்ளார்.

உலகின் முதல் யோகியான ஆதியோகி, மனிதனின் தன்னிலை மாற்றத்துக்கென 112 வழிமுறைகளை வழங்கினார். அதன் குறியீடாகவே 112 அடி உயரச் சிலை அமைந்துள்ளது.

யோக பாரம்பரியத்தில் சிவனை யோக விஞ்ஞானத்தின் மூலமான முதல் யோகியாக, குருவாகப் பார்க்கின்றனர். இந்தியாவின் மேலும் 3 பகுதிகளில் 112 அடி உயர திருமுகச் சிலை அமையவும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



# ஐ.பி.எல். கிரிக்கெட்: டில்லி அணியிடம் புனே தோல்வி

புதுடில்லி,மே 14

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த லீக் ஆட்டத்தில் புனே அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி அணியிடம் தோல்வி கண்டது.

### 52 ஆவது லீக் ஆட்டம்

10 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளே-ஒவ்' என்ற அடுத்த சுற்றுக்குள் நுழையும். இதுவரை மும்பை அணி மட்டுமே பிளே-ஒப் சுற்றுக்குத் தகுதி பெற்றிருக்கிறது. பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், குஜராத் லயன்ஸ், டில்லி டேர் டெவில்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை இழந்து விட்டன.

இந்த நிலையில், டில்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நடந்த 52 ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி டேர் டெவில்ஸ்- ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணிகள் மோதின.

### அதிர்ச்சித் தொடக்கம்

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக சஞ்சு சாம்சன், கருண்நாயர் ஆகியோர் களம் இறங்கினார்கள். டில்லி அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. முதல் ஓவரின் கடைசி பந்தில் சஞ்சு சாம்சனை (2 ஓட்டங்கள் ) பென் ஸ்டோக்ஸ் நேரடியாகக்ஸ்டம்பை குறி வைத்து தகர்த்து ஆட்டமிழப்புச் செய்து அசத்தினார். அடுத்துக் களம் கண்ட ஸ்ரேயாஸ் அய்யர் (3 ஓட்டங்கள்) உனட்கட் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் டோனியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 2.1 ஓவர்களில் 9 ஓட்டங்களுக்கு டில்லி அணி 2 விக்கெட்டுகளை இழந்து அதிர்ச்சித் தொடக்கம் கண்டது.

இதனை அடுத்து விக்கெட் காப்பாளர் ரிஷாப் பான்ட், கருண் நாயருடன் ஜோடி சேர்ந்தார். 4 ஆவது ஓவரில் கருண்நாயர் அணியின் முதல் பவுண்டரியை விளாசினார். பென் ஸ்டோக்ஸ் வீசிய ஒரு ஓவரில் கருண்நாயர் 3 பவுண்டரியும், ஷர்துல் தாகூர் வீசிய ஒரு ஓவரில் ரிஷாப் பான்ட் 3 பவுண்டரி விரட்டியும் கலக்கினார்கள். இதனால் அணியின் ஓட்ட விகிதம் சரிவில் இருந்து மீண்டது. 5. 4 ஓவர்களில் டில்லி அணி 50 ஓட்டங்களை எட்டியது.

அணியின் எண்ணிக்கை 8.5 ஓவர்களில் 83 ஓட்டங்களாக உயர்ந்த போது சிறப்பாக ஆடிய ரிஷாப் பான்ட் (36 ஓட்டங்கள், 22 பந்துகளில் 4 பவுண்டரி, 2 சிக்ஸருடன்) ஆடம் ஷம்பா பந்து வீச்சில் 'லோங் ஒன்' திசையில் நின்ற டேனியல் கிறிஸ்டியனிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார். அதைத்தொடர்ந்து சாமுவேல்ஸ், கருண்நாயருடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அடித்து ஆடினார்கள். 12 ஓவர்களில் டில்லி அணி 100 ஓட்டங்களைத் தொட்டது.

சாமுவேல்ஸ் 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டேனியல் கிறிஸ்டியன் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் டோனியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அடுத்து வந்த கோரி அண்டர்சன் 3 ஓட்டங்களிலும் , கம்மின்ஸ் 11 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். நிலைத்து நின்று ஆடிய கருண்நாயர் (64 ஓட்டங்கள், 45 பந்துகளில் 9 பவுண்டரியுடன்) பென் ஸ்டோக்ஸ் பந்து வீச்சில் உனட்கட்டிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார்.

### டெல்லி அணி வெற்றி

அடுத்து முகமது ஷமியை (2 ஓட்டங்கள்) பென்ஸ்டோக்ஸ் பவுண்டரி எல்லையில் அபாரமாக செயற்பட்டு பிடி எடுத்து ஆட்டம் இழக்க வைத்தார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் டில்லி அணி 8 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களைச் சேர்த்தது. அமித் மிஸ்ரா 13 ஓட்டங்களுடனும் , சபாஷ் நதீம் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

பின்னர் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய புனே அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 161 ஓட்டங்களே எடுத்தது. இதனால் டில்லி அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. புனே அணித் தலைவர் ஸ்டீவன் சுமித் 38 ஓட்டங்களும் (32 பந்துகளில் 4 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன்), மனோஜ் திவாரி 60 ஓட்டங்களும் (45 பந்துகளில் 5 பவுண்டரி, 3 சிக்ஸருடன்) பென் ஸ்டோக்ஸ் 33 ஓட்டங்களும் (25 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்ஸருடன்) எடுத்து ஆட்டம் இழந்தனர். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர்.

டில்லி அணி வீரர் கருண்நாயர் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

### 5 ஆவது தோல்வி

13 ஆவது ஆட்டத்தில் ஆடிய டில்லி அணி பெற்ற 6ஆவது வெற்றி இதுவாகும். அந்த அணி ஏற்கனவே அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து விட்டது. 13 ஆவது ஆட்டத்தில் விளையாடிய புனே அணி சந்தித்த 5ஆவது தோல்வி இதுவாகும். இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் அடுத்த சுற்றுக்கு முன்னேறலாம் என்ற நிலையில் ஆடிய புனே அணி தோல்வி கண்டதால் ,அந்த அணியின் அடுத்த சுற்று வாய்ப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# நட்சத்திர வீரர் ரொனால்டோ இந்தியா வருவாரா?

'பிபா' உலகக் கிண்ணக் கால்பந்து (17 வயதுக்குட்பட்டோர்) தொடர் இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் 24 அணிகள் பங்கேற்கின்றன.

இந்திய மண்ணில் 'பிபா' நடத்தவுள்ள முதல் தொடர் இதுதான். இதை பிரமாண்டமாக நடத்த அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு (ஏ.ஐ.எப்.எப்.) திட்டமிட்டுள்ளது. இத்தொடரின் அட்டவணை வெளியீட்டு விழா ஜூலை மாதம் 7 ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு போர்த்துக்கல் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோவை அழைக்க முடிவு செய்துள்ளனர்.

இவரின் கழக அணியான ரியல் மாட்ரிட், சம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதிப் போட்டியில் ஜுவென்டஸ் அணியை எதிர்கொள்கிறது. இதில் விளையாடிய பின், போர்த்துக்கல் சம்பில் கான்பெடரேஷன் கோப்பையில் (ஜூன் 17- ஜூலை 2) பங்கேற்க ரொனால்டோ ரஷ்யா செல்கிறார். இதனால், இந்தியாவில் நடக்கவுள்ள விழாவில் கலந்து கொள்ள இவருக்கு போட்டி அடிப்படையில் எவ்வித இடையூறும் இல்லை.

### ரொனால்டோ விருப்பம்

சமீபத்தில் ரொனால்டோ சமூகவலைதளத்தில் வெளியிட்ட காணொலியில் 'இந்திய நாட்டுக்குச் செல்ல விருப்பமாக உள்ளேன்' எனத் தெரிவித்திருந்தார். இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவாரா என இந்திய ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

சமீபத்தில், இந்திய கால்பந்து அணி (17 வயது) பயிற்சியாளராக போர்த்துக்கலைச் சேர்ந்த லூயிஸ் நார்டன் நியமிக்கப்பட்டார். இவர் போர்த்துக்கல் அணிக்கும் பயிற்சியாளராக இருந்துள்ளார். இவரின் உதவியுடன் ரொனால்டோவை அணுகவும் ஏ.ஐ.எப்.எப். முயற்சி செய்கிறது.

இது குறித்து ஏ.ஐ.எப்.எப். தலைவர் பிரபுல் படேல் கூறுகையில்-

'இந்தியாவில் நடக்கும் 'பிபா' உலகக் கிண்ணத் தொடருக்கு ரொனால்டோவை அழைக்க முடிவு செய்துள்ளோம். இதற்காக, போர்த்துக்கல் கால்பந்து கூட்டமைப்பிடம் பேசி உள்ளோம். தற்போது உறுதியாக எதையும் சொல்ல முடியாது' - என்றார்.



# தொடரும் ஐ.பி.எல். சூதாட்டம்: டெல்லியில் ஆறு பேர் கைது!

கடந்த புதன்கிழமை டில்லி - குஜராத் அணிகளிடையே உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் ஐ.பி.எல். போட்டி நடைபெற்றது.

ஐ.பி.எல் . கிரிக்கெட் தொடரின் இந்த 50 ஆவது லீக் ஆட்டத்தில் 2 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் லயன்ஸைத் தோற்கடித்தது டில்லி டேர்டெவில்ஸ். அந்த அணியின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர் ஷ்ரேயஸ் ஐயர் 57 பந்துகளில் 2 சிக்ஸர், 15 பவுண்டரிகளுடன் 96 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்நிலையில், இந்தப் போட்டி தொடர்பாக டில்லியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறு பேரை டில்லி பொலிஸ் கைது செய்துள்ளது.

சதாரா பகுதியில் சூதாட்டம் நடைபெறுகிறது எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனை அடுத்து அப் பகுதியில் பொலிஸ் தீவிர சோதனை நடத்தியது. இந் நிலையில், சூதாட்டத்தில் ஈடுபட்ட 6 பேரை அவர்கள் கைது செய்தனர். அவர்களிடமிருந்து சூதாட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட மடிக்கணினிகள், கைபேசிகள், எல். சிடிகள் போன்றவை கைப்பற்றப்பட்டன.

சூதாட்டத்தால் ஐ.பி. எல்லில் ஏற்கெனவே பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்ட நிலையில், இந்தச் செய்தி ஐ.பி.எல். நிர்வாகத்தினரிடையே கலக்கத்தை உண்டாக்கியுள்ளது.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்கள் என்று கருதப்படும் எலும்புகள் பல கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தவிவகாரம்கொழும்பில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

காலிமுகத்திடலில் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சிலைக்குப் பின்புறம் உள்ள பெரும் நிலப் பிரதேசத்தில்(தாஜ்சமுத்திராஹோட்டலுக்குப்பக்கத்தில்) முன்னர் இராணுவத் தலைமையகம் இருந்தது.

இந்த இராணுவத்தலைமையகத்தில் இருந்து கொம்பனி வீதிப் பக்க வாசல் வழியே வெளியே வரும்போது தான் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகா மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை தெரிந்ததே.

இந்த இராணுவத்தலைமையகம் இப்போது கொழும்புபெலவத்தைப் பகுதிக்கு மாற்றப்பட்டு விட்டது. எனினும், இராணுவத்துக்குரிய சிறிய கட்டடப் பகுதியும், அலுவலகமும் அந்தப் பிரதேசத்தில் உள்ளன.

முன்னர் இராணுவத் தலைமையகம் இருந்த எஞ்சிய பிரதேசம்சீனநிறுவனமான'சங்கரி-லா' ஐந்துநட்சத்திர ஹோட்டல் நிர்மாணத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஹோட்டல் கட்டுமானத்துக்காக இராட்சத இயந்திரங்கள் கொண்டு நிலம் அகழும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதே அங்கு மனித எச்சங்கள் என்று கருதப்படும் சிதைந்த நிலையில் பல எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சட்ட ரீதியான மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பின்னரே இந்த எலும்புகள் மனித எச்சங்கள்என்பதுஉறுதிசெய்யப்படும் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு கோட்டை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். நீதிவான் விசாரணை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. (உ)

## வெளிநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாக்காளர் அட்டவணையில் இல்லாவிட்டாலும் நாட்டுக்கு வந்து வாக்களிக்க வகைசெய்யும் சட்டமூலம் ஒன்றை அரசு தயாரித்து வருவதாகசெய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் நிரந்தரமாக வசிக்காமல் – வெளிநாடுகளில் வசிப்போர் – 2009 இற்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களாயின், வாக்காளர் அட்டவணையில் தங்களின் பெயர் பதிவு செய்யப்படாவிட்டாலும் கூட, விசேடமாக இதற்கென நாட்டுக்கு வருகை தந்து தங்கள் பெயர்களை வாக்காளர் அட்டவணையில் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய சட்ட மூலத்துக்குத் தடை விதிக்கும் விதத்தில் இந்த விடயத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சில சிங்களத் தரப்புகள் தயாராகி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போய்ச் சேர்ந்தார்.

அமைச்சர்கள் சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம், சாகல இரட்ணாயக்கா, மலிக்சமரவிக் கிரம ஆகியோரும்பிரதமருடன்சீனா சென்றடைந்தனர்.

சீனப்பிரதமர்தலைமையில் மாநாடு இன்று ஆரம்பமாகின்றது. (உ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் வழிகாட்டலில் மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

இந்தநடவடிக்கைதேசியரீதியில் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு மத்திய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான பணிப்புரை கொழும்பிலிருந்து சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினருக்கும்ஏற்கனவேஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த இரு நாள்களிலும் ஒரே சமயத்தில் நாடு முழுவதிலும் உள்ள வீடுகள், பொது இடங்கள், மைதானங்கள், காணிகள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள்போன்றவற்றுக்குப் பொலிஸாரும், படையினரும், சுகாதார அதிகாரிகளும் நேரில் சென்று, நிலைமைகளைப் பார்வையிட்டு, டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுப்பர்என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒரே சமயத்தில் டெங்கு ஒழிப்பைத் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கவே இந்தத் திட்டமும் நடவடிக்கையும் எனக் கொழும்பு தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த அறிவிப்பை வடக்கு, கிழக்குத் தமிழ்த் தலைவர்களும், அரசியல்வாதிகளும் ஆட்சேபித்தனர்.

தமிழினப் படுகொலைகளின் நினைவேந்தல் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் முனைப்புடன் முன்னெடுக்கும் சமயத்தில், படையினரும், பொலிஸாரும் வீடு வீடாகச் சென்று அவர்களின் நினைவேந்தல் செயற்பாடுகளை உளவு பார்க்க இடமளிப்பதா என்று அவர்கள் சீற்றமுற்றுள்ளனர்.

இது குறித்து முதலமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டமையை அடுத்தே வடக்கில் அந்த நடவடிக்கையை 22, 23ஆம் திகதிகளில் நடத்துவதற்கான வழிகாட்டலை, மாகாணச் சுகாதார அமைச்சருடன் ஆலோசித்து அவர் விடுத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கூட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உட்பட நிர்மாணிப்பு துறை நடவடிக்கைகளில்ஈடுபட்டுள்ளசில செல்வந்த வர்த்தகர்கள் தலா பத்து லட்சம் ரூபாவை அன்பளிப்பாகவழங்கியுள்ளனராம்.

இலங்கையில் குடிதண்ணீர்ப் போத்தல் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றுநிதியுதவிக்குபதிலாகஒரு லட்சம் குடிதண்ணீர்ப் போத்தல்களை கூட்டுஎதிரணிக்குஇலவசமாக வழங்கியுள்ளது.

புலனாய்வுப்பிரிவின்அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சில வர்த்தகர்களை, சில முக்கியஅமைச்சர்கள்தொடர்பு கொண்டுவிசாரித்துள்ளனராம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் தங்களைத் தொடர்பு கொண்டு தமது ஆட்சிக் காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தாங்கள் வழங்கிய உதவியைஎண்ணிப்பார்த்துமே தினக் கூட்டத்திற்கு நிதியுதவி வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்எனவும், அதனடிப்படையில் தாம் நிதியுதவியை வழங்கினர் எனவும்அந்த வர்த்தகர்கள் பதிலளித்தார்கள் என்று தெரிய வருகிறது. (உ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களவையில், கடந்தமார்ச் 24ஆம் திகதி பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை, அவையின் கவனத்துக்குக் கொண்டுவரும்நேரத்தில் அ.தி.மு.க குழுத்தலைவரும்திருவள்ளூர் தொகுதி உறுப்பினருமானடாக்டர்பி.வேணுகோபால், இலங்கைத்தமிழர்களின்நலன்கள் தொடர்பாக பேசினார்.

அப்போது, அவர் சுட்டிக்காட்டிய விடயங்களுக்கு பதிலளிக்கும்வகையில், சுஷ்மாசுவராஜ், அண்மையில்அவருக்குகடிதம் எழுதியுள்ளார். அதிலேயேமேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பான அறிக்கையை, மாநிலங்களவையில் கடந்த மார்ச் 23ஆம் திகதி கேள்வி நேரத்தின் போது வாசித்தேன்.

கடந்த பெப்ரவரி 27 முதல் மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெற்ற, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் (34ஆவது) கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் குறித்தும், இலங்கை தொடர்பானமனிதஉரிமைகளுக்கான ஐ.நா. தூதரக அறிக்கை குறித்தும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த விடயத்தில் மனித உரிமைகள்பாதுகாப்பும்ஊக்குவிப்பும், திடமான மற்றும் கூட்டு அர்ப்பணிப்பு மூலம் எடுத்துச் செல்ல முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன், ஐ.நா. மனிதஉரிமைகள்கவுன்ஸிலில் இந்தியா அணுகி வருகிறது.

மனித உரிமைகளுக்கான பாரம்பரியஈடுபாடு, மதிப்பீடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு,கவுன்ஸிலின்அனைத்துக் கூட்டங்களிலும் இந்தியா ஆர்வத்துடன் பங்கேற்றது. தனது அரசியல் தலைமையின் பலம், மதிநுட்பம், மக்கள் ஆதரவு ஆகியவற்றுடன் உண்மையான சமரசம் மற்றும் மேம்பாட்டை இலங்கை எட்டும்.

இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான இலங்கைத் தமிழ் மக்கள் உட்பட அந்நாட்டின் அனைத்து குடிமக்களின்நலன்களைப் பாதுகாப்பதற்கு அந்த நாடு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது முதல், இந்தியாவின் கவனம் அங்குள்ள தமிழர்கள் நலன் மீதே உள்ளது. இலங்கை தமிழர்களின் நலன்களை பாதுகாக்க, சர்வதேச சமூகத்துக்கு அளித்துள்ள உறுதிமொழியை, இரு தரப்பு பேச்சின் போது, இந்தியா தொடர்ந்தும்வலியுறுத்தி அழுத்தம் கொடுத்து வருகிறது.

அந்த அடிப்படையில், உள்நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு வீட்டு வசதி, கல்வி, தொலைத் தொடர்புவசதி, வாழ்வாதாரம் மீட்டெடுப்பு போன்றவை சார்ந்ததிட்டங்கள்செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள் தொடர்ந்துசெயல்படுத்தப்பட்டும் வருகின்றன.– என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இப்போது தனது சுருதியை மாற்றிக் கொண்டுள்ளார்.

''வெசாக்கிற்கு முன்னர் அமைச்சரவைமாற்றம் இல்லை என்றே கூறினேன். இனி அது நடக்கும். நாட்டுக்குப் பொருத்தமான அமைச்சரவை அமையும்.'' – என்றார் அவர். (உ)

# ஆன்மீகப் பேச்சாளர் நித்தியதசீதரன் நேற்று வைத்தியசாலையில் காலமானார்

ஆன்மீகச் சொற்பொழிவாளரும் ஆசிரியருமான சைவப் புலவர் நித்தியதசீதரன் என அழைக்கப்படும் நித்தியானந்தம் தசீதரன் (வயது-42) நேற்றுச் சனிக்கிழமை காலமானார். பன்னாலையைச் சேர்ந்த இவர் இரு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

நேற்று முன்தினம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்த போது அவருக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதாகவும் உடனடியாகஅவர்வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும் கூறப்படுகின்றது. எனினும் சிகிச்சைபயனின்றிநேற்றுஅவர் காலமானார்.

இளம் ஆன்மீகப் பேச்சாளர்களுள் ஒருவரான இவர் யாழ். மாவட்டத்திலும் வடக்கின் பிற இடங்களிலும் ஆலயங்களில் இடம்பெறும்இரதோற்சவங்களை நேரடி வர்ணனை செய்வதில் அதிக பங்களிப்பை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் மிகப் பொருத்தமான சமயத்தில் – சரியான சந்தர்ப்பத்தில் – இடம்பெற்றுள்ளது.

அவருடன் நாம் நடத்திய பேச்சுக்கள் நல்லவிதமாக – திருப்தி தரும் வகையில் – இடம்பெற்றன.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசியல் தீர்வுகள் அடங்கிய அரசமைப்புமாற்றம் இலங்கையில் முதல் தடவையாக 1987 –1988 இல்தான்செய்யப்பட்டது என்பதை இந்தியப்பிரதமருக்கு நாம் நினைவுபடுத்தினோம்.

எனினும்,அதுபோதுமானது அல்ல, அது மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை அதற்குப் பின்னர் வந்த எல்லா அரசுகளுமே ஒப்புக்கொண்டு அமைதிப் பேச்சுக்களை நடத்தின என்பதையும் நாம் சுட்டிக் காட்டினோம்.

பிரேமதாஸாஅரசு, சந்திரிகா அரசு, ரணலின் அரசு, மஹிந்த அரசு என்று எல்லா அரசுகளுமே அந்த முயற்சியில் ஈடுபட்டன.

பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. பல தடவைகளில் முன்னேற்றகரமான வாய்ப்புக்கள் தென்பட்டன.

இந்தியாவில் உள்ள அதிகாரப் பரவலாக்கலுக்கு அப்பாலும் செல்லக் கூடிய நிலைமைகள் உருவாகியிருந்தன என்பதையும்தெளிவுபடுத்தினோம்.

இப்போதைய தீர்வை உள்ளடக்கியதான அரசமைப்புஉருவாக்கமுயற்சிகள்நடக்கின்றன. ஆனால், அவை மிக மந்தகதியில் நடக்கின்றன. தாமதமாகின்றன.

ஆளும் தரப்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதிக்குப் பின்னால் உள்ள சுதந்திரக்கட்சியினருக்கும் இடையில் இருக்கும்முரண்பாடே இதற்குக் காரணம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பில் அவை முரண்பட்டுநிற்கின்றன.

இதனை இந்தியப் பிரதமரிடம் எடுத்துக் கூறினேன். அவரின் வருகையால் இந்தத் தரப்புகள் இந்த விடயத்தில் ஐக்கியப்பட்டுச் செயற்படும் சாத்தியம் உருவாகியிருப்பதாகநான்நம்புகிறேன்.

இந்தியப் பிரதமருடன் மட்டுமல்லாது, அவருடன் வருகை தந்த சில முக்கிய தரப்புகளுடனும் பேசியிருக்கின்றேன். விரிவாகக் கலந்துரையாடியுள்ளேன். சாதகமான நிலைமைகள் ஏற்பட்டிருப்பதான நம்பிக்கையும் சமிக்ஞைகளும் கிட்டியுள்ளன என்று கூறுவேன்.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் தீர்வுக்கு வாய்ப்பு அடியோடு இல்லை என்பதை இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைத்தோம்

காணி, சட்டம், ஒழுங்கு, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய ஓர் அதிகாரப் பகிர்வு முறைமை, எமது தாயகமான வடக்கையும், கிழக்கையும் ஓரலகாகக் கொண்ட விதத்தில் அமைவது கட்டாயம் என்று எடுத்துரைத்தோம்.

இந்த விடயம் முறையாக் கையாளப்படவேண்டும். 2016 இல் தீர்வு கிட்டும் என முழுமையாகஎதிர்பார்த்திருந்தோம். அது நடக்கவில்லை.எப்படியாயினும் 2017 இல் தீர்வு காணப்பட வேண்டும்என்றஎமதுகருத்தை இந்தியப் பிரதமரும் வரவேற்றார். தங்களின் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் அதுதான் என்றார் அவர்.

2017 இற்குள் தீர்வு அவசியம் என்பது தொடர்பில் இலங்கைக்கு ஏற்கனவே அழுத்தம் கொடுத்துள்ளோம், இப்போதும் கொடுக்கின்றோம், இனியும் அது தொடரும் என்றார் இந்தியப் பிரதமர்.

விரைந்த தீர்வு அவசியம் என்பதில் எங்களுக்குள் எந்தக் கருத்து வேறுபாடோ அல்லது வேறு கருத்தோ இருக்கவில்லை.

காணாமற்போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, எமது பிரதேசத்தில் இந்திய முதலீடுகளுடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்களின் அவசியம் குறித்தெல்லாம் எடுத்துரைத்தோம்.

இந்தவிடயங்கள்எல்லாவற்றிலும் எமது எதிர்பார்ப்பை – நிலைப்பாட்டை – இந்தியப் பிரதமர் ஏற்றுக் கொண்டார்.

இதுநல்லதோர்சந்திப்பு. கருமங்கள் நல்ல நிலையில் முன்நகர்கின்றன என்ற நம்பிக்கை பிறக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது – என்றார் சம்பந்தன். (உ)

## மோடிக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மல்ஏற்பட்டபழுது காரணமாகவே அது இங்குதரித்துநிற்கின்றதாம்.

மோடி புறப்பட்ட சமயம், இந்த ஹெலி புறப்படவில்லை. புறப்படும் முயற்சி தொழில்நுட்பக் கோளாறு காரணத்தால் தடைப்பட்டதாம்.

அதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறைக் கண்டுபிடிக்க இலங்கைவிமானப்படையினர் உதவினர் என்றும், இந்தியாவிலிருந்துஉதிரிப்பாகவருகைக்கு அது காத்து நிற்பதாகவும் கூறப்பட்டது. (உ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மலபே தனியார் மருத்துவக் கல்லூரியான 'சைட்டம்' விவகாரத்தில் சிக்கலில் சிக்கியுள்ள மருத்துவக் கவுன்ஸிலின் கட்டடம்மீது நேற்று முன்தினம் இரவு இந்தக் கிரனேட் வீசப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதுவெடிக்கவில்லை.

கண்டுபிடிக்கப்பட்ட கிரனேட் செயலிழக்க வைக்கப்பட்டது. மருதானைப் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (உ)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம் கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

## சங்கடஹர சதுர்த்தி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலய சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். (ச)

# பூர்வீக நிலத்தை விடுவித்தாலேயே வாழ்வாதாரப் பிரச்சினைகள் நீங்கும்

## கேப்பாபிலவு மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மே 14

எமது வாழ்வாதார பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமெனில் பூர்வீக நிலத்தை இராணுவம் மீள வழங்கவேண்டும்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொது மக்கள் முன்னெடுத்துள்ள தொடர் போராட்டம் இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் எந்தவொரு தீர்வும் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி இந்த தொடர்கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்று வருகின்றது.


இந்த நிலையில் அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

இராணுவத்தினர் தமது காணிகளில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் தாம், சொந்த நிலத்தை இழந்து நாளாந்த கூலித் தொழிலாளிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

மீனவக் குடும்பங்களும் விவசாயக் குடும்பங்களும் பண்டமாற்று பொருளாதாரமுறையை கடைப்பிடித்து ஒற்றுமையாக வாழ்ந்தோம்.

இறுதி யுத்தம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டு எட்டு வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையிலும் மக்களின் காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ-81)

## மின்தடை



யாழ்ப்பாணம், மே 14

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, கொடிகாமம் கச்சாய் வீதி, பனைவள ஆராய்ச்சி நிலையம், சங்கன் கொங்கிறீட் மிக்சர் பிளாண்ட் ஆகிய இடங்களிலும் -

நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ் பிரதேசத்தில் உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, எருவிட்டான், அறுகுக்குன்று, செட்டியார் கட்டையடம்பன் பிரதேசம், கற்கடந்தகுளம், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# இந்தியப் பிரதமரின் நிகழ்வுகள் படத் தொகுப்பாகக் கையளிப்பு

கொழும்பு, மே 14

இந்தியப் பிரதமரின் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை உள்ளடக்கிய படத்தொகுப்பை நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளித்தார்.



கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசதகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்ககலன்சூரிய கலந்து கொண்டனர். இந்திய பிரதமர் இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை நிறைவுசெய்து நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெலிகம வர்த்தகர் வெட்டிக் கொலை!

வெலிகம பகுதியில் வர்த்தகர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.


வெலிகம, பாத்கம விகாரைக்கு அருகில் தானம் (தன்சல்) வழங்கிய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விகாரைக்கு அருகில் இரவு தன்சல் வழங்கிய பின்னர் அதனைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த நிலையில், அங்கு வந்தவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

35 வயதுடைய விஜேசேகர கமாச்சிகே சுசந்த என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# வெசாக் தினத்தில் முத்திரை வெளியீடு




கொழும்பு, மே 14

இலங்கையில் 2017 ஐ.நா. வெசாக் வைபவத்தை முன்னிட்டு 20 முத்திரைகளை தபால் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

கண்டி லங்காதிலக விகாரை, நேபாளத்தில் லும்பினி, இந்தியாவில் சாஞ்சி, ஜப்பானில் ஹொறியூயி விகாரை, பங்களாதேஷில் சோமபூர் மஹாவிகாரை உள்ளிட்ட உலகிலுள்ள பௌத்த மக்களின் முக்கிய 20 வழிபாட்டுதலங்கள் உள்ளிடக்கியதாக இந்த முத்திரைகள் அமைந்துள்ளன.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகள் வெசாக் தினத்தை முன்னிட்டு கடந்த காலங்களில் நாட்டில் வெளியிடப்பட்ட அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கிய நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# திறந்த பல்கலைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 14

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துக்கு தொடர்பாலுக்கான பேச்சு ஆங்கிலம், மனிதவள முகாமைத்துவம் ஆகிய குறுகிய காலக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். இந்தக் கற்கை நெறிகள் 3 மாத காலங்களைக் கொண்டது. அதற்கான அனைத்து வகுப்புகளும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# இலங்கைவேந்தன் கலையரங்கத்தில் இயல், இசை, நாடக அரங்கு

## இன்று மாலை நிறைவு நாள் நிகழ்வுகள்

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடக அரங்கு கடந்த புதன்கிழமை ஆரம்பமாகித் தினமும் மாலை 4.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம், நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்று வரும் இந்த நிகழ்வில் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறும்.

இன்றைய நிறைவு நாள் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்தியர் வை.யோகேஸ்வரன் கலந்துகொள்வார்.

நாச்சிமார் கோவிலடி சபேசன் குழுவினரின் மங்கல இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வரம்: எம்.சபேசன், எஸ். பிரசாந்த், தவில்: கே.பாபு, எஸ். கிருஷ்ணா. தொடர்ந்து செல்விகளான அ.ஆரபி, ரா. தாரணி ஆகியோரின் திருமுறை ஓதல் இடம்பெறும்.

ஆசியுரையையாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரை வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமலதேரரும், வாழ்த்துரையை சட்டத்தரணி சோ.தேவராஜாவும் நிழ்த்துவர்.

தொடர்ந்து சைவ வித்தியா விருத்திச் சங்க 'சைவ சிறுவர்' மாணவிகள் வழங்கும் குழு நடனம் இடம்பெறும்.

அடுத்து, குரலிசை இடம்பெறும். இதில் கலாபூசணம் எஸ். பத்மலிங்கத்தின் பாட்டும், சு.கோபிதாஸின் வயலினும், எஸ். துரைராஜாவின் மிருதங்கமும் எஸ்.ரவி சங்கரின் கடமும் இடம்பெறும்.

இதனை அடுத்து 'நல்லை கலா மந்திர்' மன்ற மாணவிகள் வழங்கும் நாட்டிய அர்ப்பணம் இடம்பெறும். இதில் அனுஷாந்தி சுகிர்தராஜின் நட்டுவாங்கமும், எஸ். அமிர்த சிந்துஜனின் பாட்டும், அ.ஜெயராமனின் வயலினும், எஸ். துரைராஜாவின் மிருதங்கமும் இடம்பெறும்.

கலைஞர் கௌரவிப்பு, பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து, 'செம்முகம்' ஆற்றுகைக் குழுவினர் வழங்கும் 'எண்ணித்துணி' சிந்துநடைக் கூத்து இடம்பெறும். (இ-ச)

## இன்று மாலைப்பொழுதில் சிறப்பு நிகழ்வாக சங்கீதக் கச்சேரி



சங்கீத மேதை எஸ்.பத்மலிங்கம்

யாழ்ப்பாணம், மே 14

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடக அரங்கு விழாவின் நிறைவு நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலைப்பொழுதில் சங்கீத மேதை கலாபூஷணம் எஸ்.பத்மலிங்கத்தின் சங்கீதக் கச்சேரி சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (இ)






யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி, நீராவியடியில் உள்ள அதன் கலையரங்கத்தில் வருடாந்தம் நடத்தும் ஐந்து நாள் இயல், இசை, நாடக அரங்கு நிகழ்வு கடந்த புதனன்று ஆரம்பமாகியது. மூன்றாம் நாள் நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை.


## உடனடி வேலை வாய்ப்பு

எமது Dynamic Holding நிறுவனமானது தனது புதிய கிளைகளை வடக்கில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.

* தகுதி O/L, A/L
* பயிற்சியின் போது 15,000/= - 18,000/=
* பயிற்சியின் பின் 40,000/= - 45,000= வரையும் நிரந்தரமாக பெற்றுக்கொள்ளலாம்.
* உணவு தங்குமிட வசதிகள் இலவசம்.

உடனே அழைக்கவும்: - 077 664 4442, 076 6781042



## உடன் வாடகைக்கு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில், வைத்தியசாலைக்கு நேர் எதிரே Cargills Food Cityக்கு அருகில் உள்ள கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படும்.

- தொடர்புகளுக்கு -
077 101 1111


### தாயும் குழந்தையும் கத்தி வெட்டில் காயம்

தென்மராட்சி- அல்லாரைப்பகுதியில்நேற்றுச்சனிக்கிழமை மாலை 5 மணியளவில்குடும்பத்தகராறுகாரணமாக ஏற்பட்ட கைகலப்பில் இளம் தாயும் அவரது இரு வயதுக் குழந்தையும் கத்திவெட்டுக்குஇலக்காகினர்.

அதே இடத்தைச் சேர்ந்த சசிதா (வயது-30) தலையிலும் அவரது மகனான சாருஜன்கையிலும்கத்திவெட்டுக் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ம-21)

### மேலதிக கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா

தாதியர்பயிற்சி நிலையங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கு மேலதிககொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்க அரசாங்கம்தீர்மானித்துள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அந்தக்கொடுப்பனவு எதிர் காலத்தில் 20 ஆயிரம் ரூபாவாகஅதிகரிக்கப்படும் எனவும் அவர்கூறினார். (ம)


## விசா ஆலோசனைகள்

நீங்கள் பட்டதாரியா? அல்லது 3 வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவம் உள்ளவரா?
உங்களுக்கோர் அரியவாய்ப்பு!
குடும்பத்துடன் கனடாவில் குடிபெயர சிறந்த ஆலோசனைகள்

WINSTAR VISA CONSULTANTS

* நான்கு வருடகால மக்களின் நன்மதிப்பை பெற்ற நிறுவனம்.
* எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்.
* IELTS 7 புள்ளி எடுப்பதற்கான சிறந்த ஆங்கிலப் பயிற்சிகள்.

வயதெல்லை: 35 வயதிற்குட்பட்டவர்கள்

2018ஆம் ஆண்டுக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

முதலில் வரும் தகைமை உள்ள 5 பேரின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்

for Get Appointments - 021 300 4641

WINSTAR VISA CONSULTANTS

106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.

(C/444) www.winstarjaffna.com



கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரில்

## AUTO CAD

Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D

Computerized
## Accounting

AccPack + Quick book + M.Y.O.B. + Tally

Hot Line : 0777-596148

BRITISH COLLEGE OF EDUCATION

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Mullaithivu. Tel : 021-4927497
Mannar. Tel : 023-4924124



## முக்கிய அறிவித்தல்

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்கள் தற்போது A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்று ஒரு பிழையான தகவல் இலங்கையிலும், UK இலும் பரவியுள்ளது. அது முற்றிலும் தவறான தகவல் என அறியத்தருகின்றோம். அதன் உண்மைத்தன்மை என்னவெனில் ஏற்கனவே UK இல் வசிக்கும் partner அவரது விசா காலத்தினை நீடிப்பதாயின் A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதே உண்மையாகும். ஆகவே புதிதாக Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு இப் புதிய நடைமுறை தேவையற்றது. அவர்கள் வழமை போன்று A1 பரீட்சைக்கு தோற்றினால் போதுமானது.

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124



## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை

எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும்
72 மணி நேரத்தில்
உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்
(EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும்
(Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அனிகனது அச்சகத்தில் 14.05.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.